ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்.

வாலிமோட்சம்

மூலமும் உரையும்.

இஃது

பு. எ. பார்த்தசாரதிப் பிள்ளையாற்

பரிசோதிக்கலுற்று,

சிதம்பரம் புக்ஷாப்

வே. சுந்தரம்பிள்ளை அவர்கள்

விருப்பத்தின்படி,

சென்னைப் புரசை

நாராயணசாமிப்பிள்ளையவர்களது

நற்றமிழ்விலாச அச்சியந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பட்டது.

விலை] 1905. [அணா 2.

16, சரவணப்பெருமாள்முதலி வீதி, புரசை,

சென்னை.

புத்தக விளம்பரம்.

சுத்தப்பிரதிகள்.						கிளேஸ்கடிதம்.		
						ரூ.	அ.	ப.
நாலாயிரப்பிரபந்தம் இராகதாளத்துடன்				-	-	2	0	0
மேற்படி வடகலை	-	,,	-	-	-	2	0	0
முதலாயிரம்	-	,,	-	-	-	0	12	0
பெரிய திருமொழி	-	,,	-	-	-	0	12	0
இயற்பா	-	,,	-	-	-	0	8	0
திருவாய்மொழி	-	,,	-	-	-	0	12	0
நித்யாநுஸந்தாநம்	-	,,	-	-	-	0	8	0
மேற்படி வடகலை	-	,,	-	-	-	0	6	0
தேசிகப்ரபந்தம்	-	-	-	-	-	0	8	0
அஷ்டப்பிரபந்தம்	-	-	-	-	-	0	8	0
பிரபன்னர்கள் அனுஷ்டிக்கவேண்டிய நித்தியாநுஷ்டான விதியும், திருவாராதனக்கிரமமும்				-	-	0	4	0
பன்னிரண்டு ஆழ்வார்களின் வைபவம் (13 படங்கள்)						0	4	0
ஆண்டாள் திருப்பாவை 30-பாசுரம் சரித்திரத்துடன்						0	2	0
ஸ்ரீபகவத்கீதை தமிழ் வியாக்கியானத்துடன்					-	0	12	0
ஸ்ரீகருடபுராணவசனம்	-	-	-	-	-	0	8	0
கூரேசவிஜயம் பெரிது	-	-	-	-	-	1	8	0
கல்கிபுராணம் என்னும் கலியுகபுராணம்				-	-	1	0	0
விஷ்ணுநாமாவளியும், விஷ்ணுநாமாமிர்தக்கீர்த்தனமும்						0	1	0
இல்லறசாரசங்கிரகம்	-	-	-	-	-	0	6	0
நூற்றெட்டுத் திருப்பதி ப்ரபாவம்				-	-	0	1	0

மேற்கண்ட புத்தகங்களும், வேறு பலவித புத்தகங்களும் வேண்டியுள்ள வியாபாரிகளும் மற்றையர்களும் அடியிற்குறித்த என்னிடத்தில் நேராகவும், வால்யுபேயபில் போஸ்ட் மூலமாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

ஒவ்வொரு தினுசிலும் 10-புத்தகம் மொத்தமாய் வாங்குப்வர் கட்கு 1-புத்தகம் இனமாகக் கொடுக்கப்படும்.

ஆர்டர் அனுப்புவோர் தங்கள் விலாசத்தை நன்றாக எழுதியனுப்பவேண்டும்.

இங்ஙனம்,

☞ பு. நாராயணசாமிப் பிள்ளை,

நற்றமிழ்விலாச அச்சியந்திரசாலை,

16, சரவணப்பெருமாள்முதலிவீதி, புரசை, சென்னை.



ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்.

வாலிமோட்சம் மூலமும் உரையும்.

காப்பு.

திருவளருங்கிஷ்கிந்தைக் கிறைவனும்வாலியையுஞ்
சிதைத்திராமன்
மருவுபெரும்பரமபத மளித்தவொருசரிதமதை
மாநிலத்தில்
உரிமைபெறச்செந்தமிழி லுகந்துரைக்கவோங்காரத்
துள்ளாய்நின்ற
கரிமுகத்தெம்பெருமானைக் காலையினுமாலையினும்
கருதிவாழ்வாம்.

அவதாரிகை.

ஸ்ரீராமபாணம் தைத்தமாத்திரத்தில் வாலி மதிமயங்கிக் கூறத் தொடங்கினான் அதெப்படியெனில்,

கவி.

நேமிதான்கொலோ நீலகண்டன்நெடுஞ்சூலம்
ஆமிதாங்கொலோ வன்றெனின்குன் றுருவயிலோ
நாமவிந்திரன்வச்சிரப் படைகொலோநடுவிற்
போமெனும்படி போன்றுமேயாதெனப்புகல்வேன்.

இதன்பொருள்.

வாராய் மனதே யானும் சுக்ரீபனுமாக மனக்குரோதத்தினாலெ திர்த்து கைகலந்து போர்செய்கிற சமயத்தில் என்னுடைய நடுமார்பி லொரு ஆயுதமல்லவோ வந்து பட்டிருக்கிறது இந்த ஆயுதமானது

என்னுடைய மார்பைத்துளைத்து பிராணவாயுவைப்பருகிமறுபுறமும் பாய்ந்திருக்கிறது இது ஆருடைய ஆயுதமென்று ஆராய்ந்து பார்க்கு மிடத்தில்,

நேமிதான்கொலோ என்பது.

முப்பத்திரண்டு லட்சம்யோசனை விஸ்தாரமான க்ஷீராப்தியின் கண் ஆயிரம்பணாமுடிச் சேடன் மேரில் பள்ளிகொண்டு கெருடவாக னமுங் கெருடத்துவஜமும் விளங்கச் சங்குசக்கரம் தனுசு வாள் கெதையென்று சொல்லப்பட்ட பஞ்சாயுதமுந்தரித்து பூமிதேவியும் லட்சுமியும் வசிக்க சனகசநந்தனர் சனற்குமாரர் முதலா ன பிரமரிஷிகள் வணங்கித் தோத்திரஞ்செய்ய தும்புருநாரதர் கீதம் படிக்க சித்தவித்தியாதரர் நாகர் காந்தருவப்பெண்கள் தெய்வரம்பை முதலானவர்களும் பரதநாட்டியம் நடிக்க தங்கநவரத்தின கசிதநாக மணியும் மகுடகிரீட துளபமாலிகாபரணமுங் கங்கண கடக கேயூர முத்து நாகரத்தினாபரணமுங் கரகமல விரலாழிச்சேர்வையுந் துலங்க அமிர்தபரிமள விசாலமும் கோலாகலமான வேதாளதாளமும் நீலம ரகத கமண்டல மேனியும் நவமணிக்குண்டல மண்டிலகொண்டமும் சாஸ்திரநாமதீபமோகனமாலையும் அழகொளி விரிந்த திருவரைபொ லிலும் மரகதநீலப் பச்சைவர்ணக் கச்சுடையும் பீதாம்பரச்சேர்வை யும் பீதாம்பரக்குடையும் பாததண்டையும் ரணவீரக்ண்டாமணி நாக மும் சத்துருசங்கார வீரகோரமும் மித்துருபரிபாலன மொத்த சாந் தத்தோடு ஸ்ரீவைகுந்தமென்ற நகரில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீமந் நாராயணருடைய திருக்கரத்தில் தாங்கியிருக்கப்பட்டநேமியோ அது அயன் இந்திரன்முதலிய தேவர்கள்வேண்டுகோளால் பூர்வத்தில் சல ந்தராசூரன்மேரில் ஏவின சக்கரமாயிற்றே அப்படிப்பட்டசக்கரத்தை என்மேரில் விடலாமா நானென்ன வபராதிபா இதென்ன ஆச்சரியம் ஆகையால் அந்தநாராயணருடைய சக்கராயுதமுமல்ல.

நீலகண்டன் நெடுஞ்சூலம் எ-து.

நீலகண்டனென்றும் கறைக்கண்டனென்றும் காலகண்டமூர்த் தியென்றுஞ் சொல்லப்பட்ட சங்கரன் சதாசிவன் நிமலன் நிருத்தன் இறைவன் சர்ப்பாபரணன் சந்திரசேகரன் அடியவர்க்கினியன் கால காலன் காலசங்கிராகுடன் காமதகனன் கங்காளன் திரிநயனன் திரிபு ராந்தகன் திரியம்பகன் திரிலோகநாயகன் திரியட்சரன் திரிகோணன் திரிசூலதேவன் திகம்பரன் மான்மழுவும் தடியுங் கபாலமுஞ் சூலமே ந்தி விபூதிருத்திராட்ச மாலிகாபரணனாய் பஞ்சாட்சரமூர்த்தியாகி புலி

த்தோலுமையும் ஆனைத்தோல் போர்வையுமாயிமோர்ப்பர்வத ராசகுமாரி தாசமேனிதமனோகரனுப் பிரகாசிக்கப்பட்ட பரமசிவனைச் சங்கரிக்கவேண்டுமென்று தாருகவன மகாரிஷிகள் அபிகார வேள்வி செய்து அதில் ஒருதிரிசூலத்தை நியமித்து அவர்பேரிலேவினர்கள் அவர் அந்தசூலத்தைபிடித்துத் தனக்கு ஆயுதமாகவல்லவோ வைத்துக் கொண்டார் அந்தத்திரிசூலிதானோ இதுவென்றும் பார்த்தால் அவருந்துஷ்டர்பேரிலல்லவோ ஏவுவார் யானென்றால் அவரைப்போல நாராயணனுக்குப்பத்தரல்லவோ ஆகையால அவரும் என்பேரில் ஏவ மாட்டார்.

ஆமிதாங்கொலோவென்றெனிற் குன்றுருவயிலோ-எ-து.

ஹரிசக்கரமுமல்ல ஈசன்சூலமுமல்ல இன்னும் விசாரிக்குமிடத்தில் ஆதிநாளையில் அசுரகுருவான சுக்கிரபகவான் காலகேயன்மகளாகிய மாயையென்பவளையழைத்து அவளுக்கு விஞ்சைமந்திரம் உபதேசித்து அவளைக்காசிபருடைய தபசைக்குலைத்துப் புணர்ந்துவரும்படியனுப்ப அவள்போய் அப்படியேகூடிச் சூரபற்பன் சிங்கமுகாசுரன் கெஜமுகாசுரன்முதலான புத்திரர்களைபெற்றாள் அவர்கள் பிரபலமாகிப் புத்திரமித்திராதிகளோடு கூடிப்பெருகித் தென்சமுத்திரத்தில்வீரமகேந்திரபுரி பட்டணமுண்டுபண்ணி அதிலிருந்து பதினாறுலோகத்தையுமாண்டு திரிமூர்த்திகளும் தேவாதிகளும் பணிவிடை செய்துவரும்படி அவர்களை அனேக உபத்திரவஞ்செய்து வருகிறநாளில் ஒருநாள்தேவாதிகளைக் காக்கவேணுமென்று சிவன் திருவுளம் வைத்தமாத்திரத்தில் பிர்மா விஷ்ணு ருத்திரன் சதாசிவன் மகேசுவரன் மனோன்மணியென்கிற ஆறுதெய்வீகமும் ஒருருவமாய்ப் பரமசிவனுடைய அக்கினிகண்ணிற் பிறந்து சரவணப்பொய்கையில் வளர்ந்து பார்வதியம்மனுக்குப் புத்திரனாகவமைந்து சுத்தவீரர்களான லட்சத்தொன்பது தம்பிமார்களும் இரண்டாயிரவெள்ளம் பூதப்படைகளும் புடைசூழ்ந்துவரப் பராசத்தியைத்தானே வேலாயுதமாகக்கொண்டு அம்சவாகனமேறி வீரமகேந்திரபுரிபட்டணத்திற்கு அசுரசங்காரஞ் செய்யத்தக்கதாய்போகிறபோது ஓம்சரவணபவாவென்ற சடாட்சரரூபியாகியசிவசுப்பிரமணியக்கடவுள் கிரவுஞ்சகிரி பர்வதத்தை யூடுருவ வெய்யப்பட்டவேலாயுதந்தானோ இதுவென்றுபார்க்கிறபோது அவர்பஞ்சகர்த்தாக்களும் பராசத்தியும் ஒருரூபமாகப் பிறந்து தேவாதிகளுக்குச் சேனபதித்தலைமை பூண்டிருக்கிறபடியினால் சத்தியதெய்வீகமானபடியினாலும் அவர் என்பேரிலேவமாட்டார் ஆகையினால் இதுசுப்பிரமணியருடையவேலாயுதமுமல்ல,

ராமவிக்கிரன் வச்சிரப்படைகொலோநடுவில்-எ-து.

பெருமைபொருந்திய ஆயிரங்கண்ணனென்று பேர்பெற்று காசிபமகாரிஷியினிடம் உற்பத்தியாகியமுப்பத்துமுக்கோடிதேவாதிகள் வந்து சேவிக்கத்தக்கதாகக் காமதேனுவுங் கற்பகத்தருவுஞ் சுரபிசிந்தாமணியுங் கேட்டபொருள்களைக்கொடுத்து பணிவிடைசெய்ய ஊர்வசிமேனகை அரம்பை திலோத்தமை நாத்தினி வாகினி கந்தற்பமாலிகை சிங்காரமஞ்சரி பரிமளவல்லி பங்கேருகாட்சி மதனைப்பேடுகாந்தர்வதத்தை மதனகல்யாணி உல்லாசனி சல்லாப வஞ்சிகாரம்பை அதிகாலீலை அனங்கவேணி சீமந்தனிலை சரசமோகினி சங்கீதலீலைமதனசுந்தரியென்கிற தெய்வப்பெண்கள்வந்து ஆலகாலமேந்திக் கவரிவீச்சாமரையிரட்ட ஆலவட்டம் குடை தழை விசிறி பரிமாரிப் பணிவிடைசெய்யத்தக்கதாக அயிராவதமேறி இடிக்கொடி பிடித்து உச்சைச்சிரவமென்கிற குதிரையையும் மகாகாண்டீபமென்கிற வில்லும் வச்சிரமென்கிறஆயுதமுந்துலங்க இந்திராணிகல்யாணசமேதனிமனோகரனாகிய வசந்தமண்டபத்திலிருந்து ஆயிரங்கண்களுஞ்சேயரிதுலங்க மகாவைபோக்கியத்துடன் வாழப்பட்ட தேவேந்திரன்கையிலிருக்கிற வச்சிராயுதந்தானோ இதுவென்று பார்க்கிறபோதுஅவர்சத்துருக்களை அடக்கியாளப்பட்ட படியினால் துஷ்டர்கள்பேரி லேவுகிறதல்லாமல் என்பேரிலேவமாட்டார் அல்லாமலும் நான் தேவாமுர்தங் கடைந்து அவருக்கு அமுர்தங்கொடுத்திருக்கிறேன் அவர்: என்னுடையபிதாவானபடியினால் அவரது வச்சிராயுதமுமல்ல ஆனபடியினால்,

போமெனும்படியென்றுமே யாதெனப்புகல்கேன-எ-து.

சொல்லப்பட்ட நாராயணரும் பரமசிவனும் சுப்பிரமணியரும் நின்று அவருடையஆயுதங்களை யேவுவார்களாகில் அதுகள் என்பேரில்பட்டு மார்பைத்துளைக்கிறதுமில்லை இந்தவாயுதம் என்மார்பைத்துளைத்து மறுபுறத்தில பாய்ந்திருக்கிறபடியினால் இதுவென்ன அற்புதமோ என்ன அவாந்தரமோசமோ ஒன்றுந்தெரிகிலேன்-எ-று.

அவதாரிகை.

அதுவுமல்லாமலிந்தஆயுதத்தைப்பிடித்து நிலைநிறுத்திப் பார்க்கிறபோது இன்னதென்று தெரியவில்லையே ஆனாலுமிது தெய்வவாயுதந்தானென்று கண்டேன் இந்த வாயுதத்தினுடைய பெருமை யெப்படி யெனில்,

கவி.

மும்மைசாலுலகமெல்லாம் மூலமந்திரத்தைமுற்றும்
தம்மையேயெவர்க்குமெட்டாத் தனிப்பெரும்பதத்தைதானே
இம்மையேமறுமைநோய்கள் மருத்தெனுஇராமனென்னும்
செம்மைசேர்நாமன்தன்னைக் கண்களாற்றெறியக்கண்டேன்.

இதன்பொருள்.

மும்மைசாலுலகமெல்லாம் மூலமந்திரத்தைமுற்றும்-எ-து.

வாராய் மனமே அதிசயம் அதிசயம் மகாபாக்கியம் பெற்றுக் கொண்டேன் மும்மையென்றுசொல்லப்பட்ட ஆகாயபாதாளபூலோகம் மென்றுசொலலுகின்ற மூன்றுலோகத்திலுள்ள சீவர்களும் ஆணவம் மாயை காமியமென்று சொல்லபட்டமலசகிதப்பட்டு ஆசாபாசத்தினால் பெண்டுபிள்ளை பதார்த்த தனதானிய சம்பத்தின்பேரில் மனதுவைத்து மோகாந்தகாரவலையில் அகப்பட்டுக் கிடப்பார்கள் அவர்களுள் ஆயிரம்பேரிலொருவன் ஒருவன் பூர்வபுண்ணியவாசனையினால் அரசர்பக்தியோடே காஸ்திரதியானமாகிய புராணசாஸ்திரங்களையுணர்ந்து பெரியோர்களிடத்தில் வாசமாகிக் குருமுகாந்தரத்தில் உபதேசம் பெற்று விவேகத்தினால் திருமூலமந்திரமே மந்திரம் திரு அஷ்டாட்சரமே அட்சரம் நாராயணனேதெய்வம் நாராயணனே பிர்மமென்றறிந்து அஷ்டாட்சரத்தைச் செபித்துத் தோத்திரஞ்செய்து வணங்கினால் அப்படிக்கொத்த விஷ்ணுபக்தர்களுக்குப் பலனாகச் சித்திக்கின்ற மூலவஸ்துவை,

தம்மையே யெவர்க்குமெட்டாத் தனிப்பெரும்
பதத்தைத்தானே-எ-து.

திரவட்டாட்சரமானதைப் பத்திமுத்தி வயிராக்கியத்தோடேமனம்புத்திசித்தம் ஆங்காரமென்னும் அந்தக்கரணங்களை நிலைநிறுத்திஒருவழிப்படுத்தி தியானித்து அதனாலடையப்படுவதுதான் தனித்துசமானமற்றிருக்கிற நாலாம்பதமாகிய ஞானநிலைமையை லோகத்திலே நான்குவகை கர்மத்தினாலே பகவானுடைய கடாட்சம் பெறவேணும் அதெப்படியெனின் சரியைகிரியையோகம் ஞானமென்கிறசதுர்விதகர்மமுண்டு அவற்றுள் சரியையென்பது தனக்கு மேலானவரிடத்திற் சென்று சந்தனம் புட்பம் தூபதீபநைவேத்திய அபிஷேகஆராதனைகள் செய்வித்து ஆலயங்களில் அன்பு ஆசாரத்தோடே தெய்விகஙகளை வணங்கிக் கடாட்சம்பெற்றுக் கொண்டால் அந்தச்சரியைமார்க்கத்தி

னால்வரப்பட்டது சாலோகமாம் சாமீபமென்பது இந்தசென்மம்போக மறுசென்மத்திலே குலசிரேஷ்டனாய் சன்மார்க்கனாய் பிரபலனாய் புத்திரமித்திர பவுத்திர கோத்திரத்துடனே வாழ்வதாம், கிரியையென்பது தன்னுடைய அறிவினால் கர்மங்களை அறிந்து ஸ்நானபானஞ்செய்து தேகசுத்செய்து ஆத்துமாசத்தியோடே புஷ்பபத்திரங்களை விக்கிரகதேவதைகளை அர்ச்சனைசெய்து ஸ்தோத்திரம் பிராணாயாமம் மந்திரம் செபித்து ஜலகந்த புஷ்பதூப நைவேத்தியங்களினால் வழிபாடுசெய்து பூஷணத்தியானஞ்செய்து பகவானை வணங்கப்பட்டதுகிரிகைமார்க்கம் இதினால் வரப்பட்டது சாமீபம் அவன் மறுஜென்மத்தில் பிராமணனாகப்பிறந்து பாக்கியவந்தனாகிச் சாத்திரபுராணங்களை யோர்ந்து மகாபக்தனாகிய ஏற்றகைக்கு இடெங்கையாகிச்சகலத்திராளுக்கும் மேலானவனாயிருந்து இரட்சிக்கப்பட்ட கர்த்தனாகித் தாட்சண்ணியனாகச்சாந்தகுணசீலனாகிக் கீர்த்திமானாகவாழ்வான் யோகவழியானது சாஸ்திரங்களையோர்ந்து ஞானமார்க்கத்தையுணர்ந்து தத்துவபேதத்தை யறிந்து கருவிகரணாதிகளைத் தெரிந்து ஆறாதாரங்களினுடைய நிலையறிந்து முகக்கண்ணை மூடியுட்கண்ணினாலே இருதயகமலத்திலே சொரூபத்துடன் கண்டு தியானிக்கப்பட்டது யோகம் அதனால்வரப்பட்டபலன் சொரூபமான தேவயோனியில் ஜெனித்து தேவபோகமனுபவித்து வாழ்வான் ஞானமென்பது பூர்வஜென்மத்தில் அநேக ஜென்மபுண்ணியஸ்தனாகிய இதிகாசபுராணங்களைக்கற்று ஞானசாஸ்திரார்த்தந்தெரிந்து வேதாகமங்களையறிந்து தூலசூட்சுமக்காரணமென்னும் மூன்றுபாகத்தையறிந்து வருங்காலம் செல்காலம் நிகழ்காலமென்னும் மூன்றுகாலங்களையு மறிந்து பாவமின்னதென்றும் பகுத்தறிந்து விவேகத்துடன் அவ்விரண்டையு மிசிரபூரிபாலனஞ்செய்து தேகமும் தேகியுமறிந்து தேகத்தையனித்தியமென்று தள்ளி நித்தியமானஆத்மாவானதைப் பிரமவெளியிலே அயிக்கியஞ்செய்து இந்தமனமான அந்தக்கரணங்கள்நாலும் நன்னான்கு பிரிவாகி பதினாறு சுத்தவிருத்தியானதையுந்தவிர்த்து வாக்குக்குமனதுக்குமெட்டாதபரமவெளியிலே அயிக்கியஞ்செய்தது ஞானம இந்த ஞானமார்க்கத்தினால் வரப்பட்டது சாயுச்சியமான நாலாம்பதம் அதுபரமவெளியிலேலபித்து ஜனனமரணமில்லாமல் மோக்ஷம்பதம் அனுபவித்து இப்படிபெருமைபெற்றிருக்கிற பரம்பொருளை வாராய்மனமே.

பிர்மம் என்பது.

இம்மை யென்று சொல்லப்பட்ட இந்தச் சென்மத்திலேயிருந்து மறுசென்மத்திலேஒழியாதகருவினுடைய கெற்பகோளத்தில் உற்பவி

யாமல் இறந்துபிறந்து சுகதுக்கங்களை யனுபவிக்கப்பட்டது ராவென்றும் மாவென்றும் இரண்டட்சரம் அவை மகாவீரியட்சரமாகும் அவற்றினுடைய மகிமையான தெப்படியெனின் பஞ்சாட்சரம் சைவநிலையென அஷ்டாட்சரம் வைணவநிலையென்றும் சைவசர்த்தவ்யம் பரமசிவமென்றும் வைணவகர்த்தவ்விய விஷ்ணுவென்றும்சொல்லப்படும் ஆகையினால் பஞ்சாட்சரத்தில் இரண்டாம்க்ஷரமும் அஷ்டாக்ஷரத்தில்இரண்டாம்க்ஷரமுங்கூடி ராமாவென்று மந்திரார்த்தமானபடியினால் அந்தராமமந்திரமான தாரகப்பிரமப்பொருளாகிய.

செம்மைசேர்நாமந்தன்னைக் கண்களால்தெரியக்
கண்டேன்-எ-து.

வாராய்மனமே செம்மையென்னுஞ் சிரேஷ்டம்பொருந்தின இந்தராமாவென்கிற அட்சரங்களை ஒருநாளாகிய அறுபதுநாழிகைநேரத்தில் அரைநாழிகை நேரமானாலும் பக்தியோடு மனமானதைஒருவழிப்படுத்தி ராமாராமாவென்று செபிப்பார்களேயானால் அவர்கள் ஜென்மஜென்மாந்தரங்களிற் செய்யப்பட்ட மகாபாபங்களையெல்லா மகற்றிப் புண்ணியதேகம் பெற்றுக்கொள்வார் வாராய் மனமே அப்படிப்பட்ட இரண்டக்ஷரமாகிய மந்திராட்சரமானதை இதோபுத்திபூர்வமாய் தலையிலே என்கண்களினால்கண்டுசந்தோஷமடைந்து கொண்டேன் என்னுடைய பிராணன்பிரிந்துபோகிற அந்தியகாலவேளையில் கண்டுதுதித்து மோக்ஷமடைந்துகொண்டேன் வாராய்மனமேஇகத்துக்கும் பரத்துக்கும் சுதந்தரப்பட்டது ஆனபடியினாலே இதுராமபாணந்தான் சந்தேகமில்லை அந்தராமரெங்கேயென்று பார்த்துக்கொள்வேன்.

அவதாரிகை.

இப்படி ராமத்தியானத்தோடுங்கூடி மாமறையில் மறைந்து நிற்கப்பட்ட சுவாமியானவரைச் சமீபத்திலே யழைத்து வாலியானவன் சொல்லுகிறான்.

க வி.

கண்ணுற்றேனிராமநீலக் கார்முகிற்கமலம்பூர்த்து
மண்ணுற்றுவரிவில்லேந்தி வந்தனைபோலுமாலே
புண்ணுற்றுநயச்சோறிட்டுப் பொறியெழப்பொதியச்செய்தாய்
யெண்ணுற்றுயென்செய்தா யிதென்னவியம்பிடாயே.

இதன்பொருள்.

கண்ணுற்றேனிராமநீலக் கார்முகிற்கமலம்பூர்த்து-எ-து.

வாராய்ராமபத்திரா மணிமகரகுண்டலப்பிரபுவே ராஜாதிராஜனாகிய ஸ்ரீராமாவென்னும் என்னுடைய இரண்டு நயனத்தினாலும் உன்

னுடைய பாதாதிகேசம் கேசாதிவரைக்கு மகண்டபரிபூரணமாகச்சந்தோஷித்துக்கொண்டேன் வாராய் ராமபத்திரா உன்னுடைய திருமேனியானது கார்மேகங் கவிழ்ந்து சூழ்ந்ததுபோல நீலமரகதமேனியாய் அதற்கு இடையில் செந்தாமரைபுட்பம் பூத்ததுபோல் உன்னுடையதிருமுகம் இரண்டுகண்களும இரண்டுகரதலங்களும் இரண்டுபாதங்களுஞ் சிவந்திருக்கிறபடியால் கார்மேகத்துக்கு இடையில் செந்தாமரைபுட்பம் பூத்ததுபோ லிருக்கின்றது வாராய் ராமா வாராய் ராமபத்திரா.

மண்ணுற்றவரிவில்லேந்தி வந்தனைபோலுமாலே-எ-து.

வாராய்ராகவா நானுன்னையழைத்தபோது மண்ணென்னும் பூமியைப்பார்த்துக்கொண்டு தலைகவிழ்ந்து என்முகம்பார்த்து வசனியாமல் நாணமுற்று என்னுடைய முன்பாகவந்து நிற்கிறாயே வாராய்ராமா உன்னிடத்தில் லொருவசனங்கேட்கிறேன் வாராய்ராமா.

புண்ணுற்றதயச்சோரிட்டு பொரியெழப்பொதியச்
செய்தாய்-எ-து.

இதுவரைக்கும் சத்துராதிகளுடைய அஸ்திரசஸ்திரங்கள் பட்டு என்னுடையதேகம் விரணப்பட்டதினாலும் வாராய்ராமச்சந்திரா அப்படிப்பட்ட என்னுடைய மார்பானதை புண்படுத்தி அந்த விரணத்தினாலேயிருந்து சோரியென்னு மிரத்தப்பொடி யெழும்பித் தாரைதாரையாகி ஒழுகவும் என்னுடையசரீரமானது பதைபதைத்து துடிதுடித்துக் கிடக்கத்தக்கதாகவு மென்னுடையநெஞ்சோர்பிலே அஸ்திரந்தொடுத்து அவமோசஞ் செய்யவேணுமென்று.

எண்ணுற்று யென்செய்தா யீதென்னவியம்
பிடாயே-எ-து.

இப்படி ஒருபாணந்தொடுத்து என்னை வதைசெய்யவேணுமென்றுவிசாரித்து உன்னுடைய அயோத்தியாபுரி பட்டணத்தையும் சகல சம்பத்தையும்விட்டு இந்தவனவாசத்திலே இன்றைக்குவந்தாய் வாராய்ராமா எதினாலேயென்பேரில பாணந்தொடுத்தாய் இப்படிக்குச் செய்யலாமோ வாராய்ராமா சொல்லவேணும் வாராய்ராமபத்திரா.

கவி.

வாய்மையும்வழக்குங்காத்து மன்னுயிர்ப்புறந்தவள்ளல்
தூய்மையோன்மைந்தாநீயும் பரதன்முன்றோன்றினாயே
தீமைதான்பிறரைக்காத்து தான்செயிற்றீங்கன்றாமோ
தாய்மையுமின்றிநட்புந் தருமத்தைதழுவிநின்றாய்.

இதன்பொருள்.

வாய்மையும்வழுக்குங்காத்து மன்னுயிர்ப்பிறந்தவள்ளல்-எ-து.

வாய்மையென்னும் பகவத்கடாட்சம்பெற்றுபுண்ணியகர்மமான சத்தியத்தையும் ஈஸ்வரப்பிரீதியான தர்மத்தையுங் கைக்கொண்டு தெய்வானுகூலமில்லாத பாவகர்மமான அசத்தியத்தைத்தள்ளி நரகவாதனைக்கேதுவான அதர்மத்தைக்கடிந்து தன்னுயிர்போல் மன்னுயிர்க்கிரங்கி தன்னுடைய சுகதுக்கம்போலவே அன்னியனுடைய சுகதுக்கமென்றறிந்து பேதாபேதமில்லாமல் புண்ணிய பாவத்தினுடைய கொள்கையறிந்து மனுநீதிதவறாமல் ராச்சியபரிபாலனஞ்செய்தவன்னாகிய சிரேஷ்டதாரியாயிருக்கின்ற.

தூய்மையோன்மைந்தாநீயும் பரதன்முன்றோன்றிலையே-எ-து.

ஓய்ராமா தூய்மையென்கிற கர்த்தநத்துலமாகிய தசரதமகாராஜனுடைய மூன்றுபேர் பாரிமாருக்கும் நான்குபுத்திரர்களாகவந்து உற்பவித்தவர்களில் உன்னுடன்பிறந்த தம்பியான பரதனுக்கு முன்பிறந்த ஸ்ரீராமபத்திரரான ராமா உன்தம்பி பரதனுக்குண்டான சத்தியமானது உன்னிடத்திலே சற்றுகினுமில்லையே வாராய் ராமா அதுவுமல்லாமல்.

தீமைதான்பிறரைக்காத்துத் தான்செயிற்றீங்கன்றாமோ-எ-து.

தீமையென்று சொல்லப்பட்ட பொல்லாத் துன்மார்க்கங்களை யாதாமொருவர் செய்வார்களேயானால் அந்தத்துஷ்டர்களைச் சங்கரித்து சிஷ்டர்களை ரட்சிக்கப்பட்ட மகாராசனாகிய ஸ்ரீராமா நீ இப்படிமறைந்துநின்று சதிமோசமாகச்செய்த காரியத்தைக் குற்றமென்றுசொல்லமாட்டார்களோ நீபெரியவனாகில் உன்னைக் கேட்கிறபேர்களில்லையென்றோ விசாரித்துக்கொண்டாய் வாராய்ராமா இதைவிசாரித்துப்பார்க்கிறபோது.

தாய்மையுமின்றிட்டுத் தருமத்தைத்தழுவுகின்றாய்-எ-து.

தாய்மையென்று சொல்லப்பட்ட தயவுதாட்சண்யம் ஈவு இரக்கமென்று சொல்லாநின்ற சன்மார்க்கமொன்றுமில்லாமல் அன்புஆசாரமில்லாமல் முப்பத்திரண்டு தர்மத்தைப் பரிபாலனம் செய்யப்பட்ட நீ இந்த அநீதஞ்செய்யலாமோ வாராய்ராமாராமா யானென்னகுற்றஞ்செய்தேன் அதைசொல்லவேணும் வாராய் ராமபத்திரா-எ-று.

கவி.

இல்லறந்துறந்ததம்பி யெங்களுக்காகத்தங்கள்
வில்லறந்துறந்தவீரர் தோன்றலால்வேதநன்னூல்

சொல்லறந்துறந்தில்லாத சூரியன்மாபிற்றெல்லோர்
கல்லறந்துறந்ததென்ன நகைவராணிமேனனே.

இதன்பொருள்.

இல்லறந்துறந்ததம்பி யெங்களுக்காகத்தங்கள்
வில்லறந்துறந்த விறதோன்றலால்.

வாராய் ராமபத்திரா நீயும் சகலமான விசேஷங்களை யறிந்திருந்
தும் நிர்மூடரைப்போல இப்படி அடாதகாரியஞ் செய்யலாமா வாரா
ய்ராமா இந்தலோகத்திலுள்ள எல்லோரும் இல்லறமென்றுந் துறவா
மென்றுஞ் சொலலப்பட்ட இரண்டு தர்மத்தி லொன்றாகிலும் சாதி
க்கவேண்டும் அதில் இல்லாமென்பது கிரகமாதா பிதாபசுபத்தினிசுத
ர்மித்திரர் தன்யதானியம் நிலம்சலம் அடியார்சம்பத்துடனே வாழ்வ
து கிரகஸ்தாச்சிரமென்கிற இல்லறம் இப்படிஇல்லறவாழ்க்கையிலிரு
ந்து பிரவிர்த்தியினாலே வளருகிறசெல்வம் வளர்த்தன தானியசம்பத்
துகளை மென்மேலும்சம்பாதித்து தர்மதானங்கள்செய்து சுத்தம் சுசி
கரத்துடனே நித்திய அனுஷ்டான விபூதிபூசைகளை முடித்து அதலிரக்
கத்தையைதாட்சண்யத்துடனே சத்தியதர்மத்தோடும்பாரியோடும் கூடி
வாழ்ந்து புராணசாஸ்திரங்களையுணர்ந்து பொருமையுடனே யிருந்து
அவிவேகத்தைதள்ளி தெய்வபக்தியுடனே தெய்வதரிசனஞ் செய்து
தெய்வபூசைவிருந்தூட்டல் பரங்களைக்காத்தல்முதலிய நற்குணமுடை
யவனுய்தானும் அறுசுவையுடனேபொசித்து அலங்காரவஸ்திரமணிந்
து இஷ்டானுபோகம் அனுபவித்துப் பெரியோரிடத்தில் அன்புவை
த்துச் சற்குணசாவகாசஞ்செய்து தெய்வபக்தியுடனும் குருபக்தியுட
னும் பாத்திரங்களையறிந்து தர்மஞ்செய்து தயிரியத்துடனுஞ் சந்தோ
ஷத்துடனும் வாழ்கிற இல்வாழ்க்கையிலே சிறிதுதர்மங்கள் லபிக்
கும் துறவரமோவெனில் இந்த இல்வாழ்க்கையைவிட்டும் புறச்சார்
புகள் புண்ணியஸ்தலங்களிற சஞ்சரித்தும் புண்ணிய தீர்த்தங்களில்
ஸ்நானஞ்செய்து விசேஷதெய்விகங்களை தெரிசனைசெய்தும் அல்
லாமலும் நிராசையுடனே சுகபோகங்களை விட்டு மரவுரி தரித்து
வனாந்திரங்களிலே சஞ்சரித்து மகாத்துமாக்களைத் தரிசனஞ் செ
ய்து கிரியையோகங்களினால் தபஞ்செய்தும் வருகிறபின் புண்ணியத்
துறவறமென்றுஞ் சொல்லப்படும் நீயோவென்றால் உன்னுடைய வா
ழ்க்கையான நடுராச்சியம் மாதாபிதாக்கள் அரண்மனை ஆஸ்தானங்க
ள் திரவியங்கள் மந்திரிபிரதானிகள் முதலிய சேனைசைனியங்களையும்
சகலபாக்கியத்தையும்விட்டு சடைமுடி தரித்து வற்கலையாகிய மரவுரி

தரித்துபதினாலுவருஷம் தபசுசெய்யும்படி வந்திருக்கிறாய் ஓய்ராமா உன்னுடைய கிரகவாழ்க்கையிலிருந்து சம்பாதிக்கப்பட்ட தர்மமும் போயிற்று கலவறமான தபசுசெய்துவரப்பட்ட தர்மமும்போயிற்று அதெப்படியெனில் என்தம்பியாகிய சுக்ரீபனும் நானுமமனக்குரோதத்தினால் போர்செய்கிறபோது நீ யொருவன் தர்மசிந்தையுள்ளவனாகி மத்தியஸ்தனாய் வந்தது உண்மையானால் எங்களிரண்டுபேரையும் பேதாபேதமில்லாமல் ஒருவன்பேரில்பட்சமும் ஒருவன்பேரில் அபட்சமும்வைத்து விசாரித்தாய் ஆதலால் தபசுசெய்துவரப்பட்ட உன்னுடையமனதை அசையாவிளக்குபோல்ஒருநிலையில்நிருத்தாமல் என்பேரில் தபசினால்வரப்பட்ட தர்மமும்போய்விட்டது வாராய்ராமா ஒருவிருட்சத்தில் மறைந்துநின்று சதிமோசமாக என்னைக்கொன்றதினால் உனக்குச்சொல்லிமறுசாமர்த்தியம் வருமோமிருந்த சாமர்த்தியவானென்று கொள்வார்களென்று விசாரித்தோ இந்தமோசம் செய்தாய் வாராய் ராமா சத்தியலோகத்தி லெழுந்தருளி யிருந்து சர்வயோனிகளாகிய ஜீவாத்மாக்களையும் அகாரமந்திரத்தினால் சிருஷ்டிக்கப்பட்ட பிரமதேவனுடைய நான்முகத்தி லிருந்து இருக்குவேதம் யசுர்வேதம் சாமவேதம் அதர்வணவேதமென்று சொல்லுகிற நான்குவேதங்கள் பிறந்தன அதினின்று மந்திரம் வியாகரணம் சந்தோபநிஷத்து சநிவேடு நிருத்தம் ஜோதிஷமென்று சொல்லப்பட்ட ஆறுசாஸ்திரங்களு முண்டாயின் அந்தசாஸ்திரங்களிலிருந்து சைவம் பௌஷிகம் மார்க்கண்டேயம் இலிங்கம் ஸ்காந்தம் வராகம் வாமனம் கூரமம் மச்சம் பிரமாண்டம் காருடம் நாரதம் வைணவம் பாகவதம் ஆக்கினேயம்பிரமகைவர்த்தனமென்று சொல்லப்பட்ட பதினெண்புராணங்களும்பிறந்தன இப்படி வேதசாஸ்திரபுராணங்களிலிருந்து தெரிந்து ஆராய்ந்தெடுத்து மனுநீதி சாஸ்திரங்களை கற்பிக்கப்பட்டன அப்படிகற்பித்தவர் உன்னுடைய மூதாதையான வைவச்சுதனுமல்லவோ ஆனபடியால் ஓய் ராமா.

வேதநன் னூல்சொல்லறந் துறந்திலாச்சூரியன்
மரபிற்றல்லோர்-எ-து.

முன்சொல்லப்பட்ட ராசதர்மமாகிய மனுநீதிசாஸ்திரத்திற் சொல்லியிருக்கின்ற மார்க்கந் தவறாமல் ராச்சியபரிபாலனஞ் செய்யப்பட்டவர்களாகும் உன்னுடையபெரியோர்களான சூரியகுலத் திராசாக்கள் அப்படியிருக்க ஓ ராகவா.

நல்லறந்துறந்தென்ன நகைவரவாணிமேனமேனே-எ-து.

உன்பெரியோர்கள் செய்யப்பட்ட நன் மார்க்கமான தர்மநீதாந்துறந்து அதர்மமாகக்கொண்டு மறைந்துநின்ற நீ அஸ்திரந்தொடுத்தகா

ரணம் யான் விசாரித்துப் பார்க்குமிடத்தில் எனக்குத்தானே புஞ்சிரிப்புவருகின்றது உன்முகத்தைப் பார்த்து வர்ணிக்கிறதற்கு எனக்குத்தானே நாணயமாயிருக்கிறது ஓய்ராமா இந்தக்காரியம் லச்சையில்லாமற் செய்தபோதே நீ மகாநல்லவனென்றும் சற்புத்திரனென்றும் அறிந்துகொண்டேன்-எ-று.

கவி.

அரக்கனேரழிவுசெய்தா லழிவனைவதற்குவேறோர்
குரங்கரசினைக்கொல்லென் றுன்மனுநெறிகூறிற்றுண்டோ
இரக்கமெங்குற்றுயென்மே லெப்பிழைகண்டாயையா
புரக்கருவிதுநீபூண்டாற் புகழையார்பரிக்கர்பாலர்.

இதன்பொருள்.

அரக்கனோழிவுசெய்தாலழிவனைவதற்குவேறோர்-எ-று.

வாராய்ராமா நான்சொல்லப்பட்ட ராட்சதகெம்பீரனாகிய இராவணனென்பவன் சற்றுநினையாமல் நீசிறியவில்லையொடித்து அக்கினிசாட்சியாக வலதுகைதொட்டுப் பாணிக்கிரகணஞ்செய்யப்பட்ட சீதாதேவியைக் கபடநாடகஞ்செய்து உன்னையுந் தம்பியையும் வேறுபடுத்தியெடுத்துக் கொண்டுபோனான் அந்தப்பாதகன்செய்த அதர்மத்திற்குநீயும் மானபுருஷனானால் அந்தராவணனுடன் போர்செய்து தேவியைமீட்கவேண்டு மில்லாமற்போனால் அவன்கையிலே நீயுமிறக்கவேண்டும் இவ்விரண்டிலொரு காரியமுஞ் செய்யாதப்படிக்கு.

குரங்கரசினைவெல்லென்னு மனுநெறி
கூறிற்றுண்டோ-எ-று.

குரங்கென்னும் வானரசைனியங்களுக்கு ராசாவாகிய கிஷ்கிந்தாபுரிக்கு அதிபனாயிருக்கிற என்னைக் கொல்லவேண்டுமென்று உன்னுடைய மனுவிக்கியான தர்மத்திலே சொல்லியிருக்கிறதோ வாராய் ராமா இதற்கு உதாரணம் நீயேசொல்லவேண்டும் ஓயராகவா.

இரக்கமெங்குற்றுயென்மே லெப்பிழைகண்டாயையா-எ-று.

நீநல்ல புத்திசாலியானால் ஈவுயிரக்கம் தயவு தாட்சண்ணிய மென்னுந் தன்மையான குணமல்லவோ யோக்கியம் இந்தச் சற்குணங்களை என்விட்டுவிட்டாய் ஓய் ராமா அதுதவிர என்பேரிலென்னகுற்றங் கண்டாய் அல்லது உனக்கானாலும் உன்னுடைய மூதாதைக் கானாலும் மற்றெவருக்கானாலும் நான் ஒருகுற்றங்குறைபாடுகள் செய்ததுண்டோ நீ சொல்லவேணும் ராமபத்திரா,

பூரக்கழிவிதுநீபூண்டாற் புகழையார்பாக்கர்பாலர்-எ-து.

சகலரும் இகழ்ச்சியாகப் பரிகாசஞ்செய்யப்பட்ட தீமையானகாரியத்தை மகாபிரபலமாய்க் கொண்டுமறைந்து என்பேரில்பாணந்தொடுத்தபடியால் உன்னுடைய சிருஷ்டிக்கு இழிவேயன்றி புகழுங்கீர்த்தியுமாகிய பராக்கிரமத்தை எவர்கள் துதிப்பார்கள்-எ-று.

கவி.

கோவியற்றருமமுங்கள் குலத்துதித்தோர்கட்கெல்லாம்
ஓவியத்தெழுதவொண்ணு வுருவத்தையடையவையா
ஆவியச்சனகன்பெற்ற வன்னத்தையமுதினவந்த
தேவியைப்பிரிந்தபோதே திகைத்தனைபோலுஞ்சித்தம்.

இதன்பொருள்.

கோவியற்றருகவுங்கள் குலத்துதித்தோர்கட் கெல்லாம்-எ-து.

வாராய்ராமா கோவென்று ராச்சியத்தை ஆளுகிறதற்கு இயல்பாகக் கொண்டிருக்கப்பட்ட தருமநீதத்தோடே சாஸ்திரவிதிவழுவாமல் ராச்சியபாரஞ் செய்யப்பட்ட உன்னுடைய சூரியமலவமிசம்உண்டான உற்பத்தியைச் சொல்லுகிறேன் எப்படியென்றால் ஆதாரங்கதிரோடுங்கூடிப் பகற்காலங்களிலே லோகத்தைவிளங்கச் செய்யப்பட்ட சூரியபகவானுக்குச் சங்கையென்றும் இராக்கினி யென்றும் பிரபையென்றும் சாயாதேவியென்றும் நாலுபெண்சாதிமார்களுண்டு அவர்களில் சங்கைமகன் வைவசுதன் வைவசுதன் மகன் இட்சுவாகுஇட்சுவாகுமகன் விருக்கி விருக்கிமகன் சுயோதனன் சுயோதனன் மகன ஆபிரகன் அபிரகன்மகன் வசுவகன் வசுவகன் மகன் கட்டுவாங்கன் கட்டுவாங்கன் மகன் மித்திரன் மித்திரன்மகன் உபஞச்சுவன் உபஞச்சுவன் மகன் அச்சுதன் அச்சுதன் மகன் அச்சுபதி அச்சுபதிமகன பிரகதாசுவன் பிரகதாசுவன மகன் சுவர்ணன் சுவர்ணன் மகன்பிர்மோதி பிர்மோதி மகன் அரிச்சுவணன் அரிச்சுவணன்மகன் நிகும்பன் நிகும்பன்மகன் சம்புவாட்சவன் சம்புவாட்சவன்மகன் வருஞட்சவன் வருஞட்சவன்மகன்மாந்தாதாமாந்தாதாமகன் அம்பரீசன அம்பரீசன்மகன் ரதாசுவன் ரதாசுவன்மகன் திரிசியதன் திரிசியதன்மகன் விருத்தராசன் விருத்தராசன் மகன் பிரகதாசுவன் பிரகதாசுவன் மகன் வசுமனு வசுமனுமகன் திரிதனு திரிதனுமகன் சூரியவருணன் சூரியவருணன்மகன்திரிசங்குதிரிசங்குமகன் அரிச்சந்திரன் அரிச்சந்திரன்மகன்லோகிதாசன் லோகிதாசன்மகன் துந்தன் துந்தன்மகன்விசையன்விசையன்மகன் காருகன் காருகன்மகன் பிருகராசன பிருகராசன்மகன் வாகுராசன் வாகுராசன்மகன் சகாராசன் சகாராசன் மகன

அசமஞ்சன் அசமஞ்சன் மகன் அஞ்சுமான் அஞ்சுமான் மகன் திலீபராசன திலீபராசன் மகன் பாகீரதன் பாகீரதன் மகன் குஹுகன் குஹுகன் மகன் சிந்துதீபன் சிந்துதீபன் மகன் அயதாயு அயதாயு மகன் ரிதுபர்னன் ரிதுபர்னன் மகன் உத்ராசன் உத்ராசன் மகன் மித்திரசேனன் மித்திரசேனன் மகன் அசுவகன் அசுவகன் மகன் நகுலன் நகுலன் மகன் தயாதனன் தயாதனன் மகன அதிரதன் அதிரதன் மகன் தசரதன் தசரதன்மகனாகிய ஒய்ராகவா இப்படி வைவச்சுதமனு மாந்தாதாமுதல் தசரத னீருக்கொண்டு வாழப்பட்ட ராசாக்களையுமபார்க்கிறபோது.

ஓவியர்க்கெழுதவொண்ணு வுருவத்தை யடையவையா-எ-து.

ஓவியரெனும் சித்திரக்காரருக்கும் எழுதுகிறதற்கு அரிதானரூபலாவண்ணியம் பொருந்தினவனாகிய ராமபத்திரா நீயோ வென்பாவம் புண்ணியங் கீர்த்தி அகீர்த்தியென் றிப்படிச் சொல்லப்பட்ட காரியாகாரியங்களுடைய கிருத்திய கிருத்திய மறிந்திருக்கிற விவகாரஸ்தன் அப்படியிருக்க இந்தத்துன்மார்க்க மெதனாலேசெய்தா யென்றாலோசிக்குமிடத்தில்,

ஆவியைச்சனகன்பெற்ற வன்னத்தையமுதின்வந்த

தேவியை-எ-து.

ஆவியென்று சொல்லப் பட்ட உன்னுடைய பிராணனுக்குச் சமானமாகிய பிராணநாயகி யானவளும் அன்னம்போல் நடக்கப்பட்ட நடையை யுடையவளும் சனகராசன் பயின்று வளர்க்கப்பட்ட புத்திரியும் முதற்காலத்திலே தேவாதிகளை யிரட்சிக்கும பொருட்டு தெய்வகதியை யுண்டு செய்பத் தக்கதாக விஷ்ணுவானவர்மந்திர கிரியை தன்கையினு லெடுத்து வந்து திருப்பாற் கடலில் நிறுத்தி வாசுகி யென்னும் பாம்மை கயிருகப் பூட்டி தன் கையினுல் கடைந்தபோதுமுதலாவது ஜேஷ்டா தேவியாகிய மூதேவி பிறந்தாள் இரண்டாவதுபிரச்சாயையான பராசத்தி யம்மை தானே லட்சுமி தேவியாகப் பிறந்தாள் அந்த அம்மனை நாராயணர்தமக்குப் பாரியாக மார்பிலே தரித்துக் கொண்டார் அந்த லட்சுமிதேவியானவள் உலகத்தில் துஷ்டரானராட்சதர்கள் மிகுந்து சற்படனு பாகையைச் செய்கிறபடியால் துஷ்டநிக்கிரக சிஷ்டபரிபாலனஞ்செய்து இப்பூமிபாரந் தீர்க்கவேணுமென்று குசலத்துசனென்னும் பிராமணனுக்கு மகளாய் வேதவேதியென்னும்

பெயருடையவளாகப பிறந்து தபசுசெய்கிறபோது ராவண னுடைய உபத்திரவத்தினால் இடாடைந்து அக்கினியிலமுழுகி மூலமுருவது சனகனுடைய வேள்வியில் சீதையெனறும் சானகியென்றும் நாமதேயம் பெற்று வாழப்பட்ட ஸ்ரீதேவியை,

பிரிந்தபோதே திகைத்தனைபோ லுஞ்சித்தப்-எ-து.

இப்படிப்பட்ட தெய்வதத்துவம் பொருந்திய சிலாக்கியத்தை யுடைய உன்னுடைய தர்மபத்தினியாகிய சீதாதேவியை ராவணன் திருடிக்கொண்டு போனபடியால சீதாதேவி யானவள் உன்னைப் பிரிந்து வேறுபட்டாள் அதனால் உன்னுடைய அந்தக்காரணமான சித்தவிருத்திகளெல்லாம் பேதாபேதமடைந்த யோசனை யில்லாதபடிக்குத் தயிரியமில்லாமல் துராசாரபாக ஒருவிருட்சததின் சார்பிலே நின்று ஒளித்திருந்து பாணத்தொடுத்து எனனைவதைசெய்தாய் வாராய் ராமா இப்படிக்குள்ளே மோசஞ்செய்யலாமோ வாராய்ராமபத்திரா அதுவுமல்லாமல் இன்னமும் ஒருவார்த்தை கேட்கிறேன் வாராய்ராமா-எ-று.

க வி.

கூட்டொருவரையும்வேண்டாக் கொற்றவர்பெற்றதாதை
பூட்டியசெல்வமாங்கோர் தம்பிக்குக்கொடுத்துப்போந்தாய்
நாட்டொருகருமஞ்செய்யத் தம்பிக்குன்னரசுநல்கிக்
காட்டொருகருமஞ்செய்தாய் கருமந்தானிதன்மேலுண்டோ.

இதன்பொருள்.

கூட்டொருவரையும்வேண்டாக் கொற்றவர்பெற்றதாதை-எ-து.

கூட்டென்னும் உனக்குப்பந்தமாயிருக்கிற மாதா பிதா சகோதரர் பந்துக்கள் குருதெய்வம் மந்திரி பிரதானி ஆமாத்தியார்பாக்கியம் நாடுராச்சியம அரண்மனை ஆஸ்தானம் களஞ்சியம் குலம் மணிமண்டபம் முதலிய சகலபாக்கியங்களையும் விட்டுச் சந்நியாசிமார்க்கமாகத் தர்ம சிந்தனையோடு தபசுசெய்யவேண்டி வரப்பட்ட கொற்றமென்னும் சவுரிய சாமார்த்தியம் பொருந்தினவனை ஒய்ராகவா புத்திர உற்பத்தியில்லாத சந்தாபத்தினால் அனேகநாள் மனோதுக்கத்தை யடைந்து புத்திரகாமேஷ்டியாகஞ்செய்து அந்தவதுவினால் அருமையோடுங் கூடிப்பயின்று வளர்க்கப்பட்ட உன்தாதையான தசரத மகாராசா வானவர் உன்னுடைய ஆந்தியபுத்திவிசேஷத்தைக்கண்டும் பக்திவிசுவாசபோததைககண்டும சவுந்தரிய ரூபலட்சணங்களைக் கண்டும் தனுசாஸ்திர வல்லப சாமார்த்தியத்தைககண்டும் உனக்குச்சிசுப்பிராயம் போய் சவுமாரப்பிராயம் கழிந்து பாலியப்பிராயமான பருவத்தைக்கண்டு

சந்தோஷித்து ராச்சியபரிபாலனஞ்செய்விக்கவேணுமென்று வசிஷ்டர் வாமதேவர் முதலானகுருசிரேஷ்டரிடத்திலேயுஞ்சுமந்திரன் முதலான மந்திரிமார்களோடு மாலோசித்து அவர்களைச் சம்மதஞ்செய்து.

பூட்டியசெல்வமாங்கோர் தம்பிக்குக்

கொடுத்துப்போந்தாய்-எ-து.

ஈழம்-பாண்டி-யாழ்ப்பாணம்-சேரம்-சோழம்-கொங்கு- வங்காளம்-குந்தம்-மகதம்-சீனம்-குச்சரம்-மராடம்-ஆரியம்-கானடம்-துளுவம் சிங்காளம்-துலுக்காணம்-அவந்திதேசம்-வடமதுரை-சிந்து-பாஞ்சாலம்-சோனகம் டில்லி-நிடதம்-கேசயம்-சவுராஷ்டிரம்-அங்கம் - மிதிலை கன்னோசி-காம்போதி-காப்பிலி-நேபாளம்-கங்கலம்-ஒட்ட தேசம்-பவுண்டரதேசம்-சாவிதராச்சியம்-காந்தாரதேசம்-கெவுட தேசம்-உகாந்தரதேசம்-கலிங்கராச்சியம்-பப்பரதேசம்-பல்லவதேசம்-பவுண்டராச்சியம்-கோசலாபுரி-சேதுராச்சியம்-அனந்தபுரி-அஸ்தினாபுரி - குச்சிலியதேசம்-மச்சதேசம்-மாயாபுரிவிருத்தபுரி-சாமந்தபுரி - சற்கோளம்வைகாசபுரி-காவிர்தராச்சியம்-சோணாநாடு - கொல்லாபுரிதேசம் - கேதாரிபுரம்-பஞ்சகராச்சியம்-ஆண்டவதேசம்-மிதுலாபுரி - வீரகோளம் - அயோத்தியாபுரிமுதலான ஐம்பத்தாறுராச்சியத்து ராஜாக்களையும் வரவழைத்து ராச்சியத்தை யலங்காரஞ் செய்து அதுவுமல்லாமல் மகாதோரணம் தமனியமாலை பச்சைதோரணம் சன்னதப்பந்திசொர்ணதோரணம் செங்கெற்குலை செய்யற்கொடி சிங்கக்கொடி அரம்பைநிரை பூசுவிலாசமுதலிய பலபல அலங்காரஞ்செய்து சாந்து சந்தனம் நிறைத்து தூபம்வளர்த்திப் பட்டணவாசிகள் நகரமாக்கள்சூழ வேதப்பிராமணர் அருமைமுனிவர் வேதகோஷடந்தொனிக்கக் கங்கை யமுனை கன்னியாகுமரி கோதாவிரி நன்மைக்காவேரிநதி விபரதை துர்க்கை கிருஷ்ணவேணி விர்கதை வேதநதி இருஷிகை தவசிகை துங்கபத்திரி சுசோபனை தொலைபலேகிதை சரயுநதிகிரேருகை பூகோளை அமுதபாளை சந்திரபாகை சாம்பவநதி பவானி சரயுநதி சக்கிரநதி பொன்முதலிய முதலான திவ்விய தீர்த்தங்களைக்கொணர்ந்து இன்னமும்தெய்வரதம் வேதரதம மகாரதம புஷ்பரதம சம்ரதம் வீரரதம் ராகதுண்டம வசியதுண்டம் சூகரதம் சட்டதுண்டம பூகரதம அசுவரதம் சித்திரத்தேர் நவரத்தினத்தேர் பாதாளசையம் சக்கிரத்தேர் இந்திரவிமானம் இப்படிச்சொல்லப்பட்ட ரதங்களைச் சோடித்து அணியணியாக நிறுத்தி அதுவுமன்றி வாராய் ராமா ராஜகுமாரர்கள் வந்துசூழ்ந்து உன்னை மஞ்சனமாட்டிப் பீதாம்பரவஸ்திரமுடுத்தி பரிமளசுகந்தங்களையணிந்துமகுடகிரீடம் கிம்புரிபதக்கம் ஆரம் கண்டிகை அரை அங்கதம் வாகுவல

யம் மகரகுண்டலம் கங்கணம் கடகம் அாப்பாடிகைஞாண் இடம்புரி வலம்புரி வச்சிரமாலை நவரத்னத்தொங்கல் தாழ்வடம் சொர்ணச்சவுளி மாகதமாலை முன்கைச்சவரிவளை அஸ்தகடகம் விரலாழி புட்பநாமரத்னக் கலசம் பாததண்டை வீரகண்டாமணி விரல்மோதிரம் இப்பேர்ப்பட்ட ஆபரணுதிகளையணிந்து பேரிகை ரணபேரிகை ராயபேரிகை ராசகிடுமுடி உடுக்கைமணி வீராணம் காளை சின்னம் சங்கு தாளம் டமாரம் கனகதப்பு சங்குமுரசு வீரமுரசு வீரமத்தாளம் வீரதுந்துமி தவண்டைமல்லாரி கடாரிகை திமிலைதாடிகை கொம்புதுத்தி மல்லாரி தம்புருவீணை தக்கபூரி கைதாளக்குறடு ஆடகபட்சம் ஆடகபாணி எக்காளம் நாகசுரம் ஊதுகுழல் துக்காரி டமாரிகம் கரிகடுந்துடி உறுமி தக்கை அமலவண்டை மல்லாரி வேணு சிறுபறைகொம்பு தாளம் சரமண்டலமிப்படிச்சொல்லப்பட்ட வாத்தியகோஷ்ட முழங்கத்தக்கதாகத் திவ்யமான நடகன்கிரீகள்வந்து சங்கீதநிர்த்த பரதநாட்டியபகடிக்க நவரத்தினகசிதமான மண்டபத்திலே தேவாதிமுனிவர்கள் சந்தோஷிக்கத் தக்கதாக அபிஷேககோலகதுடனே வெண்கொற்றக்குடைபிடித்து வெண்சாமரை ஆலவட்டந்துலங்க முன்னும்பின்னும் ஆயுதவாகன சாதனத்துடனே துரைமக்கள் தளகர்த்தர் கருணீகர் பிரபுக்கள் புடைசூழ இப்படிப்பட்ட ப்ரபலமாகிய அதியவிசேஷ அலங்காரத்தோடே பட்டணப்பிரவேசம் வந்து பட்டாபிஷேக முடிசூடுஞ்சமயத்திலே அவற்றையெல்லாம் என்தம்பி பரதாழ்வானுக்குக் கொடுத்துவிட்டு வற்கலையுடுத்தி மரவுரி சடைமுடிதரித்துக் காய்கனிகந்தமூலபலாதிகளைப் பொசித்து விரகம்பூண்டு வனத்திட்சையாய் வரப்பட்டோய் ராமா-எ-று.

நாட்டொருகருமஞ்செய்யத் தம்பிக்குன்னரசுநல்கி-எ-து.

நாடென்று சொல்லப்பட்ட உன்னுடைய ராச்சியத்தில் உனக்குவரப்பட்ட ராச்சியபாரத்தை உன்தம்பியான பரதனுக்குக் கொடுத்துவனசஞ்சாரத்துக்கல்லவோ வந்தாய் வாராய்ராமா இவ்விடத்தில் தபசுசெய்ய வந்தவிடத்திலும் நீகெட்டதுமல்லாமல் என்னுடைய ராச்சியபாரத்தையும் என்தம்பி சுக்ரீபனுக்குக் கொடுத்தது.

காட்டொரு கருமஞ்செய்தாய் கருமந்தா

னிதன்மேலுண்டோ-எ-து.

காடென்னும் வனவாசத்திலே வந்து என்னையுங் கெடுத்தாயேவாராய் ராமா இதைப்பார்க்கிலும் ஒரு துஷ்டகருமம் நீசெய்யவேணுமோ வாராய்ராமா சற்றுவிசாரியாமல் என்பேரிலே அஸ்திரந்தொடுத்தலாமோ இதற்கு மறுவசனஞ் சொல்லவேணும் ராமா-எ-று.

கவி.

இருவர்போர்பொருதுங்காலை யிருவருநல்லுற்றாரே
ஒருவனமேற்கருணைத்தூண்டி யுருவம்வேறொளித்துநின்று
வரிசிலைகுழைகள்வாங்கி யம்பொன்றுமாமகதெய்தாய்
தருமமோபுரிதொன்றோமோ தகைவிலாதெனினும்பக்கம்.

இதன்பொருள்.

இருவர்போர்பொருதுங்காலை யிருவருநல்லுற்றாரே-எ-து.

இருவரென்று சொல்லப்பட்ட யானும சுக்ரீபனுமாக அவிவேகத்தினால் வானரஜாதியானபடியினாலே மனக்குரோதங்கள் வைராக்கியம்பிறந்து நீபெரியவன் நான் பெரியவனென்று அகங்கைகளினாலே போர்செய்கிற சமயத்திலே நீயொருவன் குலசிரேஷ்டன் சாஸ்திபக்கியானன் கீர்த்தியிலே சிலாக்கியன் சகல காரணத்திற்கும் மகாயோக்கியன் தருமநீதியுள்ளவன் ராசாதி ளிரண்டுபேரையும் வருவித்து குறருகுற்றங்கள் விசாரித்து சிட்சாசிட்சையை செய்கல்லோ உனக்குராஜதர்மம் வாராய் ராமா என்னுடைய குலாசாரம் சற்றாகிலும் விசாரியாமல்,

ஒருவன்மேற்கருணைதூண்டி யுருவம்வேறொளித்துநின்று-எ-து.

ஒருவனான சுக்ரீபன்பேரில் பட்சம்வைத்து என்பேரிலேகொஞ்சமாகிலும் கருணையில்லாமல் நிர்க்கணியாகத் தள்ளி உன்னுடைய சரீரத்தை மறைத்து ஒருமரத்திலே ஒளித்துநின்று மகிமோசமாக,

வரிசிலைகுழைகள்வாங்கி யம்பொன்றுமருமத்தெய்தாய்-எ-து.

வரித்துக்கட்டுடைத்தாகிய பாரகோதண்டமானதை வளைத்து மகா கூர்மையுடைய ராமசகாயமான அஸ்திரத்தை ஞானவாயிலே பூட்டி என்னுடைய நடுமார்பிலே வஞ்சனார்த்தமாக தொடுத்தாயே வர்ராய் ராமா இதை விசாரித்துபார்க்கிறபோது,

தருமமோபிரிதொன்றோமோ தகைவிலாதெனினுமபக்கம்-எ-து.

உன்னுடைய மூதாதைமார்களுடைய தர்மநீதியானது குறையாதசூரியகுலத்திலே சிபிச்சக்கிரவர்த்தி யானவர் இராச்சியபாரம் செய்கிறகாலத்திலே வனாந்தரத்தில ஒருவேடனானவன் ஒருபுறாவைக் கண்ணிவைத்து பிடிக்கத்தூக்கினபோது அதுகண்ணியிலே அகப்படாமல் பறந்துபோகவும அதைவிடாமல் வேடன துரத்தவும் இப்படிக்குச்சாயங்காலம்வரையும்வேடன்புறாவைவிடாமல் துரத்தினபடியினாலேஅந்தப்பறவையானது இந்தவேடன் தன்னை விடானென்று கருதிச் சிபிச்சக்கிரவர்த்தியானவர் ஆஸ்தானபுரியிலே சிங்காதன பதியாக மந்திரி

மார் பிரபுக்கள் சூழ்ந்திருக்கிற சபையிலே பாந்துபோய் அவருடைய மடியிலேசென்று இருந்தபோது அதைக்கண்ட ராசாவானவர் அடைக்கலப் பொருளாகுமென்று அபயங்காத்தருளினர்.

அப்போது வேடனானவன் அரண்மனைவாசலிலே கட்டுங்காவலுங்கடந்து ராசாவின் முன்பாகச்சென்று வாராய்சுவாமி இந்தப்பறவையானது இன்றுமுழுதும் என்னைத் தப்பித்துக்கொண்டு அலையவித்தபடியினாலே இந்தப்பறவையை யெனக்குப் பட்சிக்கத்தரவேணும் இதை விடாமற்போனால் என்சீவனை யும்மிடத்திலே மாய்ப்பேனென்று வேடன்சொன்னான் இந்த வார்த்தையைக்கேட்டு வேடனுக்கு வேண்டிய உபசாரஞ்சொல்ல அப்பா உனக்குவேண்டிய மாமிசங்கள் தருகிறோம் திரவியங்கள் தருகிறோம் அடைக்கலப்பொருளை மாத்திரம் உன்கையிலே கொடுக்கலாகாதென்று வெகுவாகச்சொலலினர் இப்படிநல்லவார்த்தைசொல்லியும் கேளாதபடியினால் பின்னும் அந்தப்புருவானது வந்திருக்கப்பட்ட இடமாகிய வென்னுடையதுடையை யறுத்துத்தருகிறேனென்றுசொல்லி அவனைச்சம்மதப்படுத்தித் தராசையெடுத்துப்புருவை யொருதட்டிலேவைத்து நிறுத் தப்போதுநிறையேருமல் குறைந்ததுமேலும் அந்தத்துடையின் புறத்திலேயுண்டான சதையெல்லாமறுத்து நிறுத்தபோதும் நிறையேறவில்லை அரசன் சத்தியவாசகனானபடியாலே சரீரத்தின் எலும்பைவிட்டு மாமிசத்தையெல்லாம் அறுத்துவைத்து நிறுத்துக்கொண்டு வேடனைச் சம்மதப்படுத்தி புருவையுங்காத்தருளி லோகத்திலே கீர்த்தியை நிலைநிறுத்திக்கொண்டார் வாராய் ராமா அப்படியே உன்னுடைய முன்னோர்கள் தானதருமங்கள்செய்து மோட்சமடைந்திருக்கிற படியினாலே அந்தக்குலத்திலேபிறந்து மகாவல்லவனான நீசுக்கிரீபனையும் என்னையும் பேதாபேதமாவிசாரியாதுச் செய்யாமல் ஒளிபாணந்தொடுத்து என்னைக்கொல்லுகிறது உனக்குத் தருமந்தானோ வாராய்ராமா மேலைக்குநன்மைவருமோ வாராய்ராமா எந்தவிதத்திலும் என்னைக்கொன்றதினாலே வேறே சிறிதுகாரியம உனக்குக் கைவசமாகுமோ எதினாலே இந்தக்கொடுமைசெய்தாய் மறுவார்த்தை சொல்லவேணும் வாராய்ராமா-எ-று.

க வி.

நூலியற்கை நுங்குலத்தோர்தந்தையர்
போலியற்கையுஞ் சீலமும்போற்றலை
வாலியைத்தடுத் தாயடல்மன்னர்கம்
வேலியைப்பற்றித் தாய்விரல்வீரனே.

இதன்பொருள்.

நூலியற்கையு நங்குலத்துந்தையர் - எ-து.

வேதசாஸ்திர புராணத்திலே யாராய்ந்து சத்தியதர்மத்தை யறிந்தெடுத்துப் பாவபுண்ணியங்களைப் பார்த்து உன்னுடைய சூரியகுலத்திலே யுற்பவிக்கப்பட்ட வைவஸ்வதமனுவானவர் கற்பிக்கப்பட்ட மனுநீதியான ராசதருமமுடையவாராய் ராமா அந்தசாஸ்திரவிதிதவறாதபடிக்கு உன்னுடைய பெரியோர்கள் அரசாண்டு குடிகளை இரட்சித்துவந்தார்கள் வாராய் ராமா.

போலியற்றையுஞ் சிலமேம்போற்றிலை எ-து.

உன்னுடைய மூதாதைமார்கள் தர்மாசாரங்களைப்போற் சற்குணமுந் தபவுந் தாட்சண்ணியமுஞ் சாஸ்திரவிதியுங் க்ஷத்திரியமுறையுங் கைக்கொண்டு நடக்கவில்லையே வாராய் ராமா அதுவுமல்லாமல் உன்னுடையகுலத்தில் அங்கராசன் ராச்சியபாரஞ்செய்கிறபோது வேனனென்ற ஓர் புத்திரன் பிறந்து சன்மார்க்கமில்லாமல் துன்மார்க்கஞ் செய்து அக்ஷாத்தியானமில்லாமல் கல்வித்தியானமில்லாமல் விவேகமில்லாமல் மகாகோபியாகிச் சிறுபோதிலே மெத்தவுந் துராசாரங்கள்செய்து பாபிஷ்டனாகிய அனாசாரனாகியராஜ்ஜியபாரஞ்செய்து பலவிதத்திலும்பிரஜைகளை உபத்திரவஞ்செய்தபடியினாலே பிதாவான அங்கராசன் புத்திரனை வேனன்செய்கிறகொடுமை பொறாமல் ராச்சியத்தைவிட்டுத் தபசுக்குப்போய்விட்டார் அந்தகாலத்தில் இந்தராசன் செய்கிற கொடுமைபொறாமல் ராச்சியத்தைவிட்டுத் தபசுக்குப்போய்விட்டார் அந்தகாலத்தில் இந்தராசன்செய்கிற உபாதியினாலே மகாரிஷிகள்சபித்து வேனனென்பவனைப் பிராணவதைசெய்தார்கள் அப்போது அங்கராசனுடைய பத்தினியானவள் வந்து சுவாமி இனிமேல் ராசதர்மஞ் செய்கிறதற்குப் புத்திரர்களில்லையே யவனிறந்ததினாலே யெனக்கு வியாகூலமிலே ஆனால் ராச்சியபரிபாலனஞ்செய்து பிரசைகளை இரட்சிக்கவேண்டுமே அதற்கென்ன செய்யலாமென்று ரிஷிகளைக் கேட்டான்.

அவர்கள் கருணைகொண்டு அம்மா இந்தவேனனுடைய பிரேதத்தை தகனஞ்செய்யவேண்டாம் இதைத்தயிலத்தோணியிலேபோட்டு வையுங்கள் அப்படிச்செய்தால் கொஞ்சநாள் கழித்து இவனுடைய தேகாமிசத்திலிருந்து ஒரு குழந்தை யுற்பவிக்கத்தக்கதாக அனுக்கிரகஞ் செய்யலாமென்று சொல்லிப்போனார்கள் அப்பாலந்தப்பிரகாரமே சிறிதுநாள் கழிந்து முனீஸ்வரர்கள் வந்து இவனுடைய பிரே

தத்தையெடுத்து இரண்டுகையையுங் கடந்தபோது சோதிபகாராசன் பிறந்தார் அவர் பிதுர்சக்கிரவர்த்தியென்று பேர்பெற்று ஒருவருக்கும் மனஸ்தாபம் வராமல் மனுநீதியாக ராச்சியபாரஞ் செய்து, சகல பேர்களையு மிரட்சித்து வந்தார் அப்படி வருகிறபோது அந்தராச்சியத்திலே சிறிதுநாள் மழையில்லாமல் பயிர்பச்சை யில்லாமல் புல்லுபூண்டு செடிகொடிகள் தானியங்கள் யாவற்றும் கரிந்துபோய் விட்டது அதுகண்டு ராசாவானவர் களஞ்சியத்தைத் திறந்து திரவியங்களை எடுத்துக்கொடுத்தனுப்பித் தீவாந்திரங்களிலேயிருந்து தானியந் தருவித்துக் குடிகளுக்குக்கொடுத்து இரட்சித்தார் அதுவுமன்றி சற்கருமங்களான யாகம் எக்கியபிராமணபோசனம் ஆலயங்களிலே அர்ச்சனைகள் ஆராதனைகள் மகாதானங்கள்முதலானவைகளைச் செய்துமழைமாரி யில்லாதபடியினாலே புரோகிதரையும் சாஸ்திரிமார்களையுமழைத்து ஓய்சுவாமிகளே நான்தர்மநீதத்துடனும் ஆசாரவிதியுடனும் ராச்சியபாரஞ்செய்து இவ்வளவுதர்மதானங்களைநடப்பித்தும் என்னுடையராச்சியத்திலேமழைமாரிமறுக்கதென்னவென்றுகேட்டார் அப்போது அவர்கள்ராசாவைப்பார்த்து பூர்வீகங்களைவிசாரித்துள்ளசோதிமகாராசனே உம்முடைய பாட்டனார் அங்கராசன்செய்த தர்மத்தினாலே மழைமாரி பொழிந்து ராச்சியம் சுபிட்சமாயிருந்தது உன் தந்தையான வேனன் செய்தபாவத்தினாலே இந்தச் சங்கடம் வந்திருக்கின்றது நீர்செய்யப்பட்ட புண்ணியத்தினாலே இனிகொஞ்சநாள்கழித்தால் மழைபொழியும் சகலகாரியமுங் குறைவில்லாமல் நடக்குமென்று மகாபெரியோர் சொல்ல அதுகேட்டரசன் இனியென்ன செய்யலாமென்று யோசித்து பிரசைகள் சங்கடப்படுகிறதைக் கண்ணுற்பார்க்க மனஞ்சகியாமல் ஒருயோசனைசெய்து ஆகாயத்திலிருந்து மழைபொழியாமற் போனால் பாதாளகங்கையைத் தருவிக்கிறேனென்றுசொல்லித் தன்கையிலேதனூர்ப்பாணங்களை எடுத்து பூமாதேவியை எதிர்த்து அஸ்திரம் தொடுத்தார் அப்போது பூமாதேவியும் பாதாளகங்கையைப் பிரவேசிக்கும்படிசெய்தாள் அப்பால் தானியங்களுடையவிரைகளில்லாத படியினால் பின்னும் பூமியின்மேல் அஸ்திரப்பிரயோகஞ் செய்தார் அப்போது பூமாதேவியும் காராம்பசுவாகவந்து அக்காட்டிலே கறந்து சகலதானியத்தினுடைய வாதையுங் கொடுத்தாள் அந்தவாதையினாலே பயிர்பச்சைசெய்துவித்து பிரசைகளைக்காத்து இரட்சித்தருளினார் வாராய்ராமா அப்படி தயவோடு கூடியிருக்கிற குலத்திலேபிறந்து அவர்களுடைய மார்க்கமும் அவர்களுடைய தருமசிந்தனையும் எள்ளளவும் உனக்கு இல்லாமற்போய்விட்டதே வாராய் ராமா.

வாலியைத்கடுத் தாயடல்மன்னர்நம்-எ-து.

உன்மனதிலே வாலியை நிக்ரஞ்செய்வேன் எனக்கு வேண்டிய காரியம் சாதித்தேனென்றல்லவோ சந்தோஷமடைந்திருக்கிறாய் இதனுலுனக்கு வந்து பலித்திருக்கிறது என்ன.

வேலியைப்பற்றித் தாய்விரல்விரனே-எ-து.

ராஜதர்மமானது ஒருவரிடத்திலும் பாரபட்சமில்லாமல் அன்பு ஆசாரமும் பிரஜைகள்பேரிலே பட்சமும் பிராமணவிசுவாசமும் குடிகள்பேரிலே பட்சமும் ஆறுபோகத்திலொருபோகமும் திறைகொண்டு தானதருமங்கள் செய்து யாகாதியெக்கியங்கள்செய்து பாபபுண்ணியங்களையறிந்து அசத்தியமில்லாமல் அதர்மமில்லாமலும் ராச்சியபரிபாலனஞ்செய்து அகவேதாராபாக்கியத்திற்கு ஒருவேலியாகும்நீயொருவன் தசரதனுக்குப் புத்திரனாகப்பிறந்து என்பேரிலே கூர்மைபொருந்திய அஸ்திரத்தைத்தொடுத்து அடாதகாரியஞ்செய்ததால அந்தத ர்மவேலியை யழித்து மகாபாவமும் அபகீர்த்தியுமல்லோ சம்பாதித்துக்கொண்டாய் ராமாநீநல்லபுத்திசாலிநல்லசாமார்த்தியவான் உனக்குச்சற்றுகிலும் மனக்கிலேசமில்லையோ வாராய்ராமா.

கவி

தாரமற்றொருவன் கௌவுன்கையில்
பாரவெஞ்சிலை யேந்தற்றழுதன்றோ
நேருமென்று மறைந்துநின்புகன்
மார்பிலெய்ததோர் வில்லியர்வல்லமை.

இதன்பொருள்.

தாரமற்றொருவன்கௌவுன்கையில்-எ-து.

வாராய்ராமா நீ அக்கினிசாட்சியாகவும் வேதப்பிராமணாள் சாட்சியாகவும் ஆகாயம் பூமியறிய வலதுகை தொட்டுப் பாணிக்கிரகணம் செய்யப்பட்ட தர்மதாரமான உன்தேவியை ராவணனனவன் திருடிக் கொண்டுபோய்ச் சிறையிலே வைத்திருக்க.

பாரவெஞ்சிலையேந்தற்பழுதன்றோ-நேருமன்றி-எ-து.

நீயும் மானபுருஷனைப் போலே யானொரு ராசாவாகும் சாமார்த்தியவானாகும் விலாச தூரியத்தில் வல்லவனாகுமென்று பாரகோதண்டமாகிய வில்லையுந் தாங்கி நடக்கிறது பழுதல்லவோ இதனால் அவமானமுங்குற்றமும் உண்டோயில்லையோ வாராய் ராமா அதவுமல்லாமல்,

மறைந்து நிராயுதன் மார்பிலெய்தோ கவிக்கிலிபர்வல்லமை-எ-து.

என்னுடைய நெறிபுங்கவனும் நேர்படவின்று போர்செய்யாமல் மறைந்துநின்று பாணந்தொடுத்தாய் அல்லாமலும நிராயுதனுகை ஓர் ஆயுதமில்லாதவனை போரிலே ஆயுதமெடுத்துப் போர்செய்ய லாமோவாராய்ராமா முன்னாளிலே உன்னுடைய மூதாதையான அரிச்சந்திரன்விசுவாமித்திரனுடனே நாம ஒருவார்த்தை அசத்தியஞ் சொல்லக்கூடாது சொன்னால நமக்கு அரிஷ்டங்கள்வந்து நேரிடுமல்லாமல ஈஸ்வரசகாயமில்லாமலும் இலட்சுமிகடாட்ச மில்லாமலும் பாவமுலந்து சம்பவித்து அநேகந் துயரமடைவதுமல்லாமல் இதநமது ஜனமஜன்மந்துக்குந் தொடருமென்றுகருதி ஒருபொய்சொல்லாமல நாடுநகர்முதலிய சகலசம்பத்தையு மிழந்து தன்னுடையபெண்சாதியையும் பிள்ளையையும் பிராமணனுக் கடிமையாக்கின்றதாக தானும்பறையனுக்கடிமைப்பட்டு மயானத்திலே காவலிருந்து பிரேதவர்க்கவரியை வாங்கிக்காலக்ஷேபஞ்செய்து தன்னுடைய மகனுகிய லோகிதாசனை அரவம் தீண்டியிறக்கவும தன் மனைவியானவளைக் கொலைசெய்தவளென்று காசிசேசசத்தாசன் தூதுவர்கள் பிடிகட்டாக இவர்கையிற் கொடுத்து வெட்டிவிடச்சொலல அப்போது மகனிறந்து பிரேதகமாகக் கிடப்பதையும்பாராமல் தன்கையினலே கனதுபத்தினியை வெட்டத் துணிந்தார் இவ்வளவு பரமசங்கடம நேரிட்டும அசத்தியத்திற்கும்பாத்தியப்படாமல்சத்தியவானுகை விருந்தகினலதான் தெய்வச்சபையிலே சங்கபாகி யிருந்த அரிகரப் பிரமாதிகள் தேவர்கள் திக்குப்பாலகா சர்மரிஷிகள்முதலிய சகலரும்வந்து வரங்கொடுத்தருளினர் அதனுல்கீர்த்தியுடனே அம்சாட்சிசெய்து சத்தியகதிற்கும் அரிச்சந்திரனென்றுநிலைபெற்றுக்கொண்டார் வாராய்ராமா நீ அப்படிப்பட்ட அரிச்சந்திரனுடையபவுத்திரகோத்திரத்திலே உற்பவித்தும அசக்கியகர்மஞ்செய்ய அஞ்சாமல என்னை வதைசெய்தாயேவாராயராமா நிராயுதன்பேரிலே சவுரியவான்கள் ஆயுதமெடுத்துப்போர்செயவார்களோ நீ சொல்லுவாய்ராமா-எ-று.

கவி,

காரிஎன்ற களங்கநிறத்தினை
ஊரியென்ற மதிக்குலநாயன்
சூரியன்மர புத்திகொடுகொன்மறு
ஆரியன்பிறந் தாக்கினையாமோ.

இதன்பொருள்.

காரியென்ற களங்கநிறத்தினேர்-எ-து.

வாராய்ராமபத்திரா காரென்னும் கருமேகம்போலே நீலமேகவண்ணனுவ ஓப் ராகவா.

ஊரியல்ற மதிக்குள தாமெங்க-எ-து.

ஊர்து ஆகாயமார்க்கத்திலே பிரகாசித்துச் சோடசகலையோடும் விடமானருடனகிச் சீதகிரணம் பொழியப்பட்ட பூரணசந்திரனுக்கு முயற்கறையென்ற ஓர்மறுவுண்டு ஆகையினலே சந்திரகுலத்து ராஜாக்களுக்குமறுவென்றும் குற்றமுண்டென்றும் சொல்லலாம்வாராய்ராமா.

சூரியன்மா புக்கொருகொன்மறு--எ-து.

சூரியபகவானுக்கு ஒருமறுவுமில்லை ஆகையினலேசூரியகுலத்து ராஜாக்களுக்கு கொஞ்சமானலும் ஒருகுற்றமில்லையே வாராய்ராமா.

ஆரியன்பிறர் தாக்கினேயாமரோ-எ-து.

அப்படி மருவில்லாதகுலத்திலே நீயொருவன் தசரதனுக்குப்புத்திரனகப்பிறந்து ஒருவிருட்சத்தில மறைந்து என்பேரிலே ஒளித்து பாணந்தொடுத்து அபகீர்த்திசம்பாதித்தாய்இதனலே சூரியகுலத்துக்கு ஒருகுற்றமல்லவோ உண்டுசெய்தாய்வாராய்ராமா உன்னுடைய மூதாதைமாரிலே வாகுராசன்குமாரனை சகரராசனென்பவருக்குப் பானுமதியென்றும் பிரபையென்றும் இரண்டுபெரியாளுண்டு அவர்களில் பிரபையானவளுக்கு அறுபதினுயிரம்பேர் சகரர்கள்பிறந்தார்கள் பானுமதிவயிற்றில் சமஞ்சலனென்றொருவன்பிறந்தான் இப்படி அறுபதினயிரத்தொரு புத்திரர்களோடுங்கூடி சகரர்சன் ராச்சியபரிபாலனஞ்செய்ய பூலோகராசாக்களைச்செயித்து திரவியங்கொண்டு மகா வீரவர்மனகித் தொண்ணூற்றென்பது அஸ்வமேதயாகஞ் செய்து முடித்து அதற்குமேல் தேவேந்திரப்பட்டத்தைஅபேட்சித்துநூராவ்யாகஞ்செய்தார் அந்தயாகமுகத்திலிருந்து வரப்பட்டகுதிரையானது ஐம்பத்தாறுதேசமுஞ் சுற்றிவரும்போது தேவேந்திரன் இந்தச் சகரராசனுக்கு நூராம்யாகம் முடிந்தேயாமானல் நம்முடையதெய்வபட்டணத்துக்குவருவானென்றுபயந்து இந்தயாகத்தை அழித்துவிடவேண்டுமென்றுகருதி சகரராஜனுடைய அஸ்வத்தைப்பிடித்துக் கொண்டுபோய் பாதாளலோகத்தில் கபிலருடையஆசிரமத்தின பின்னல்கட்டிவைத்தான்.

அப்போதுசகரர் அறுபதினயிரம்பேரும் அக்கக்குதிரையைத்தேடிப் பூலோகமெங்குங் காணமல் பாதாளலோகத்திற் சென்றுபார்க்கவேணுமென்று நினைந்துப் பஞ்சாசதகோடி யோசனை விஸ்தாரம் பொருந்திய பூமண்டலத்தைப் பிளவாகத்தோண்டிப் பாதாளலோகத்திற்சென்று அந்த அறுபதினயிரம்பேர் சகரரும் கபிலமகாரிஷியின் மேல் கோபித்து விற்களைவளைத்தெதிர்த்தார்கள் அதைக்கண்ட அந்த அறுபதினயிரமபேரையும் எரித்துச்சாம்பலாக்கிவிட்டார் வாராய்ராகவா பிற்பாடுசிறிதுநாள்கழித்துச் சகரராஜன்பரமபதமடைந்தான் அப்

பால் சகரராசன்குமாரனாகிய சமஞ்சதனென்பவன் இராச்சியபரிபாலனஞ்செய்து அசமஞ்சனைப்பெற்றான் அசமஞ்சன்திலீ பராசனைப்பெற்றான் திலீபராசன் பாகிரதனைப்பெற்றான் இப்படி நாலாந்தலைமுறையிலேபிறந்தபாகிரதன் பூர்வீகசங்கதிகளைவிசாரித்துச் சகராளுக்குவந்தஅரிஷ்டைநீக்கி நற்கதியடைவிக்க வேண்டுமென்று ஆகாயகங்கையைத்தருவிக்கவேண்டிப் பிரம்மதேவரையும் பரமேஸ்வரனையுங்கங்காதேவியையுங் கண்ணுவமகாரிஷியையுங்குறித்து முப்பத்தாராயிரம்வருஷம்தபசுசெய்து பிரமகங்கையை பூமியிலேகொணர்ந்து பூமாதேவியம்மனுடைய பிரசாதம்பெற்று பாதாளலோகத்திலே கங்கையைக்கொண்டுபோய்ச் சகராளுக்கு பிதிர்கர்மஞ்செய்து கதியேற்றி அந்தக்கங்காபரமேஸ்வரியைச்சகரான்தோண்டி உண்டுசெய்யப்பட்ட ஏழுசாகரத்திலேயுநிறைத்தான் வாராய்ராமா ஆனபடியினாலே சமுத்திரத்தைஉண்டுசெய்தது சகராளாகும் அதில் தண்ணீர்நிறைத்தது பாகிரதராசனாகும் இப்படி லோகஉபகாரமாகவும் லோகபவித்திரமாகவும் உன்னுடைய முன்னோர்கள் கீர்த்திசம்பாதித்துக்கொண்டார்கள் நீ ஒருவன்பிறந்து அடாதகாரியமாகமறைந்துநின்று என்னை வதைசெய்தபடியினாலே நீயும் அபகீர்த்தியல்லவோ சம்பாதித்தாய் சற்றாகிலும்யோசனையில்லாமற்போச்சுதே வாராய்ராமா அதுவுமல்லாமல் இன்னும் ஒருகாரணஞ்சொல்லுகிறேன்கேள்-எ-று.

கவி.

நிறைந்துமுன்னொருவர்முன்னாள் நீர்முகந்துற்றபோது
மறைந்துநின்றெய்தனுண்டோ மன்னநின்றாதைதானும்
நிறைந்திடுக்கானந்தன்னி னீயுமக்கமைசெய்தாய்
மறைந்துநின்றெய்வதுங்கள் வழிவழிமுறைமைதானே.

நிறைந்துமுன்னொருவர்முன்னாள் நீர்முகந்துற்றபோது-எ-து.

நிறைந்து தண்ணீர்ததும்பி இருக்கப்பட்ட பஞ்சமடுவின்கரையிலே உன்தாதையானவர் தொளாயிரத்தொண்ணூற்றொன்பது யானையையுங்கொன்று இன்னம்ஒருயானையைக்கொல்லவேணுமென்று ஒளித்துநிற்கிறபோது ஒருகுருபுத்திரரானவர் தன்னுடைய மாதாபிதாக்கள் விருத்தாப்பியமாதலால் அவர்களிரண்டு பேரையும் காவடிகட்டி தோளின்மேல்சுமந்துகொண்டு தீர்த்தயாத்திரை யாகவந்தார் அப்போது அவர்களுக்குத் தண்ணீர்தாகத்தினால் காவடியானதை ஒரு மரச்சார்பில்வைத்து ஜலபாத்திரத்தையெடுத்து பஞ்சகமடுவிலேயிறங்கி கமண்டலத்திலே தண்ணீர்முகந்துயெடுக்கையில்குடுகுடென்ற சத்தங்கேட்டது அந்தசத்தத்தை யானையானது தண்ணீர்குடிக்கிறதென்று நினைத்து உன்தாதையான தசரதனானவன் சர்ப்பணையினாலே,

மறைந்துநின்றெய்ததுண்டோ மன்னநின்றனைதானும்-எ-து.

குருடபுத்திரனென்றறியாமல் யானையானதுதண்ணீர்குடிக்கிறதெ
ன்று அஸ்திரமேவிட அந்தகுருடபுத்திரன்மேல்பட்டு இறந்துபோனா
ன் அந்தவேதியனால் உனபிதாவானவனுக்கு ஒருசாபமும் வந்து வா
ராய்ராகவா.

நிறைத்திருங்காலந்தன்னி னீயுமத்தகைமைசெய்தாய்-எ-து.

விருட்சங்கள் நிறைந்திருக்கிற வனாந்தரத்திலே பிதாவாக்கிய
பரிபாலனஞ்செய்ய வந்தவிடத்தில் நீயும் அநீதமாக ஒருமறைவிலேயொளி
த்துநின்று என்மேபரிலே அஸ்திரந்தொடுத்துச் சதிமோசஞ் செய்வாய்
ஓப்ராமா.

மறைந்துநின்றெய்வதாங்கள் வழிவழிமுறைமைதானோ-எ-து.

மாதகில்மறைந்துநின்று கொல்லுகிறது குலாசாரமாகஉங்களுக்
கு வழிவழிமுறைமையாகும் உன்பிதாவான தசரதானவர் ஆளப்பத
ந்தெரியாமல வனகமோசப்போனார் நீயதிந்து என்னைக் கெடுக்கவே
ணுமென்று துவமோசஞ்செய்தாய் வாராய் ராமா யானென்னகுற்றஞ்
செய்தேன என்னகாரணத்தினாலே என்மேபரில் அஸ்திரந்தொடுத்தாய
வாராய்ராமா-எ-து.

கவி.

மாயாவியுயிர்மாளப் பிலத்துணிபோய்
    வருமளவுங்காத்தென்னை காவாதே
போயாவியுடனுடன் வந்தபோது
    புகுந்தவாசலைக்கல்லினறு புகலாவாறே
சாயாதபதிகளையன றனையமோட்டித
    தாரமெனுமுனிமையவ டனையுபவகவி
ஓயாதசினமுயல விவன்செய்குற்றம்
    உனக்கென்னபோர்வதவினைத்திட்டாயே.

இதன்பொருள்.

மாயாவியுயிர்மாளப் பிலத்துணிபோய்வரு
மளவுங்காத்தென்னைக் காவாதே-எ-து.

வாராய்வாலி நீ இதுவரைக்குமசொல்லப்பட்டகதைபுங்கா
ரணங்களையும் சாரிதாதங்களையும் நானகேட்டேன் நீயும அறிவுள்ள
வனதான உசுதேசமில்லையுமனிடத்தில ஒருவார்த்தைகேட்கிறேன அது
வெப்படியெனறால் மாயாவியென்கிற அசுரனுபடியுமாசப்போர்செய்
துஉன்னை இராவணிருக்குத்துவிரதியிலாமல் போனதால்
பாதாளலோகத்திலேசென்று போர்செய்யவேண்டுமென்று சுக்ரீபனை
யழைத்து நீ ராச்சியபாரஞ்செய்திருநானபோய் மாயாவியைச்செயித்
துவருகிறேனென்று சுக்ரீபனோடேசொல்ல அவன் அந்தவகை செய்
யாததினாலேயோ வாராய்வாலி அதுவுமல்லாமல்.

போயாவியுண்டநீவந்தபோது
புகுந்துனைச்சுக்கிரீவனன்புகலாவாரோ-எ-து.

நீயும் பிலத்துவார வழியிலே சென்று பாதாளலோகத்திலே புகுந்து பதினாலுவருஷம் போர்செய்து மாயாவியைச் செயித்து நீயும் இக்கிஷ்கிந்தாபுரிக்கு வந்தபோது சுக்கிரீவன் உன்பாதத்திலே வணங்கி நீ ராச்சியபாரஞ் செய்யவேணும் அடியேன் பணிவிடை செய்கிறேனென்று சொல்லாமையினாலோ எதினாலென்மேல் உனக்குக் குரோதமுண்டானது அவனுக்கொரு விரோதமுஞ் செய்யவில்லையே வாராய் வாலி.

சாயாதபதிசேயன் றனைப்போட்டடக்
தாரமெனுமுரிமையவ டனையுமவனலி-எ-து.

இதுவரையிலும் அவன் ஒருகுற்றமுஞ் செய்யாதிருக்கச் சாயா தேவிக்கு பத்தாவான சூரியபுத்திரனாகிய சுக்கிரீபனை அடித்துத்தாக்தி அவனுடைய ராச்சியத்தையும் அவனதாரமென்னும் பெண்சாதியும் அபகரித்துக்கொண்டு சுக்கிரீபனை எங்கேயுங்காணாமல் பிராணவதை செய்யவேணுமென்று அடங்காதகோபங்கொண்டு,

ஓபாதகினமுதல் விவன்செய்குற்றமுனக்கென்ன
போர்வாலியுரைத்திடாயே.

உன்தம்பியான சுக்கிரீவனை இவ்வளவும் உபத்திரவஞ்செய்யத்தக்கதாக உனக்கென்ன குற்றஞ் செய்தானெ சொல்வாய் வாலி.

ஆதலாலுமவனைக்காருயிர்
காதலாதலினுவிக்கடமையால்
எதிலொருமெளியனென்றலவர்
தீதுதீப்பதென சிந்தைக்கருத்தரே.

இதன்பொருள்.

ஆதலாலுமவனைக்காருயிர்-எ-து.

இப்படிச் சிறிதுகுற்றமொன்றுஞ்செய்யாத சுக்கிரீபனைத்தாக்கி முடுக்கினபடியினாலே அந்தசுக்கிரீபன் என்னைவந்தடுத்து சுவாமி வாலியானவன் என்னை வதைசெய்யவேணுமென்று தாக்கியடித்து என்ராச்சியத்தையும் அபகரித்து என்னுடைய ஸ்திரீயையும் அடக்கிக்கொண்டான அடியேனை நீர் அபயங்காக்கவேணுமென்று அடைக்கலம்புகுந்திருக்கிறான் ஆகையால்,

காதலாதலினுவிக்கடமையால்-எ-து.

காதலென்னும் அன்பும் ஆசாரமும் பக்திவிசுவாசமும் சத்தியமிருந்தபடியினால் அவனுக்கு அபயஸ்தங்கொடுத்தேன் வாராய் வாலி.

எதிலாருமெளியனென்றலவர்-எ-து.

ஒருவருஞ்சகாயமில்லாமல் பந்துக்களில்லாமல் அசேஷரான சாதுக்களாயிருப்பார்களாகில் இந்தலோகத்தில் யாதாமொருத்தர் அப்

படிப்பட்ட சாதுக்களை உபத்திரவஞ் செய்தார்களானாலும் யாதாமொருதுராசாரம் செய்தார்களானாலும்,

தீதுதீர்ப்பேன் சிந்தைக்குருதகரோ-எ-து.

கொலைகளவு வஞ்சனை பாதகம் துரோகம் அசத்தியம் அதர்மம் ஆகிய இப்படிக்கொத்த துன்மார்க்கஞ்செய்யப்பட்ட துஷ்டரைக்கொன்று சிஷ்டரைப் பரிபாலனஞ்செய்கிறது எனக்கு க்ஷத்திரிய தர்மமாகும தர்மத்தை இரட்சித்து அதர்மத்தைக் கடியவேணுமென்பதைக் குறித்தே இந்தவனதீட்சை பெற்றுவந்தேன் நீயோவென்றால் சுக்கிரீபனுக்கு அநேக துரோகஞ்செய்தபடியினாலே பாணந்தொடுத்தேன் வாராய் வாலி எ-று.

அவதாரிகை.

என்றிப்படி ஸ்ரீராமர் சொல்லக்கேட்டு வாலியானவன் மறுமொழிசொல்லுகிறான்.

கவி.

மணமுமில்லைமனுநெறிவந்தநற்
குணமுமில்லைகுலமுதற்கொற்றவுன்
உணர்வுசென்றுழிசொல்லுமொழுக்கலால்
நிணமுநெய்யுநெருங்கியநேமியாய்.

இதன்பொருள்-மணமுமில்லை-எ-து.

வாராய் ராமா சுக்கிரீபனை ராச்சியம்விட்டுத் துரத்தி அவனுடைய உரிமையாகிய ஸ்திரீயை அபகரித்தபடியினாலும் உன்பேரிலே பாணந்தொடுத்தேன் என்றல்லவோ சொன்னாய் வாராய்ராமா அதுகாரியமெப்படி நாங்களோவென்றால் மிருககுளமாகிய வானரங்களாகும்வாராய் ராமா எங்களுக்கென்றால் மணமென்ற கலியாணஞ்செய்து ஒருஸ்திரீயைக்கைதீண்டவேணுமென்றும் கலியாணம் செய்யவேணுமென்றும் சொல்லுகிற முறைமைப்படியில்லை வாராய் ராமா உங்களுக்கோவென்றால் மணமென்னுஞ் சோபனத்தையுடைய ஒருஸ்திரீயானவளை என் பாரியாகுமென்று கைதீண்டத் தொடவேணுமென்பதாய் கோத்திரசூத்திரம் விசாரித்துப் பொருத்தமிருந்தம்பார்த்து முகூர்த்தம்நேமித்துபந்துக்கள் யாவரையும் தருவித்துப் பூப்பந்தலின்கீழே மணவரையிலே அக்கினிசாட்சியாகவே தேவதப்பிராமணாள் சாட்சியாக ஓமாக்கினிதேவன் முன்பாக ஆகாசப்பூமிபறிய வலதுகைதொட்டுப் பாணிக்கிரகணஞ்செய்யவேணும் இன்னும் எட்டுவிதமான கலியாணமுண்டு அந்த விபரமெப்படியென்றால் பிரமகலியாணம் தெய்வகலியாணம் ஆரிஷம் பிரஜாபத்தியம் அசுரம் ராக்ஷசம் காந்தர்வம் பசாசம் என்பதாம அவற்றுள் பிரமகலியாணமாவது மகாசாஸ்திரக்கியானனாகி ஞானமார்க்க விர்ப்பன்னனாக யாகஞ்செய்யப்பட்ட மகாயோக்கியவானாயிருக்

திறவனைத் தான் தானே வலிய அழைத்து உனக்கு என்புத்திரியைத் தருகிறேனென்று இந்தப் புருஷனுக்குவேண்டிய வஸ்திர ஆபரண அலங்காரங்களும அணிவித்து சகல வஸ்துவுந் தானே செலவுசெய்து புருஷனுடைய பொருளில் திரணமும செலவுசெய்யாமல் அவர்கள் இரண்டுபேருக்கும் போஜனார்த்தத்திற்கு வேண்டிய விளைபூமியுங்கொடுத்து விவாகஞ்செய்துகொடுப்பது அப்படிக்கொடுப்பது பிரமாவுக்குப்பிரீதியாம் அதன்பலன் அந்த ஸ்திரீயின் வயிற்றிலே பிறக்கப்பட்ட குழந்தைகள்செய்கிற புண்ணியத்தாலே அந்தக்கன்னி சாதனங்கொடுக்கப்பட்ட பிரபுவினுடைய முன்னோர்கள் இருபதொரு தலைமுறைக்கும் மோட்சம்வருமென்று சொல்லுவார்கள்.

தெய்வகலியாணமாவது சாஸ்திரவிசுவாசமும் பக்திவிசுவாசமும் எதார்த்தமானதும் நித்தியசாம யோக்கியமுமுள்ளவனாக ஒருவன்வந்து தன்மகளைக் கேட்டால் அவனுக்குக் கொடுக்கச்சம்மதித்து அவ்விருவருக்கும் அலங்காரவஸ்திர ஆபரணங்களையும் பூட்டித் திரவியமுங்கொடுத்து அதனபலனாவது அதின்வயிற்றிலே பிறக்கப்பட்ட புத்திரர்கள்செய்கிற புண்ணியத்தினாலே அந்தக் கலியாணஞ்செய்வித்த பிரபுவினுடைய பிதுர்க்கள் பதினாலுசென்மத்துக்கும் மோட்சமடைவார்கள்.

ஆரிஷகலியாண மெப்படியென்றால் ஒருவன்வந்து தன்மகளைக் கேட்டால் அவன் சகலகாரியத்துக்கும் யோக்கியவானென் றறிந்து அவர்களுக்கு வஸ்திர ஆபரணங்களுமணிவித்து சகலமும தானேசெலவுசெய்து அலங்கார கன்னிகாதானமாகக் கலியாணஞ்செய்துகொடுப்பது அந்த ஸ்திரீயினுடைய புத்திரர்கள் செய்கிற புண்ணியத்தினாலே கொடுக்கப்பட்டவனுடைய ஏழுதலைமுறைக்கும் மோட்சம்வரும்.

இனிபிரஜாபத்திய கலியாண மெப்படியென்றால் ஒருவன்வந்து தன்மகளைக் கேட்பானேயானால் தீரவிசாரித்து ஆலோசனைசெய்து அவன் யோக்கியவானென்றறிந்து தன் மகளுக்குவேண்டிய ஆபரணவலங்காரஞ்செய்து அதற்குவேண்டிய செலவுசெய்து கலியாணஞ்செய்துகொடுப்பது அவன்வயற்றிலே பிறந்த குழந்தைகளினுடைய புண்ணியத்தினாலே கொடுக்கப்பட்டவனுடைய மூன்றுசென்மத்திற்கும் மோட்சம்வரும் இந்த நாலுகலியாணம் பிராமணகர்மம் மற்றுமுண்டானவர்களும் பண்ணலாம் வாராய் ராமா பிரஜாபத்தியம் நிற்க அரசுகலியாணம் எப்படியென்றால் தன்மகளைவந்து ஒருவன்கேட்டால் இவ்வளவு காரியந்தரவேணுமென்று நிர்ணயஞ்செய்துக்கொண்டு பிறபாடு தன் மகளைக்கொடுத்து தன்னுடைய செலவுசெய்து உபயோகச் சிறப்புகளை

த்தன் மகளுக்கு நடத்துவிப்பது அதற்கு அவளுடைய குழந்தையினலே வரப்பட்ட புண்ணியமில்லை இனிமேல் ராட்சத கலியாணமெப்படியென்றால் தன் மகளைக் கேட்கவந்தவன் மூடனானாலும்குறைமனிதனானாலும விருத்தனானாலும் வியாதியஸ்தனானாலும் அக்தொன்றையும் யோசியாமல அதிகத் திரவியம்வாங்கி இரண்டு செலவுகளையும் புருஷனே செலவுசெய்வதாம் அப்படி விவாகம்செய்து கொடுத்தால் புண்ணியமில்லை புருஷனுடைய கோத்திரதர்மம் உத்தாரணம் அந்தக் குழந்தைகளினால் வரும் இனி காந்தர்வக்கலியாண மெப்படியென்றால்ஒரு ஸ்திரீயும் புருஷனும் தாங்களே மனமொத்துக்கூடுவது அதனால்அவர்களிரண்டுபேருக்கும் புண்ணியபாவம் மிச்சிரமாகும் இனி பைசாசு கலியாணம் எப்படியென்றால் ஒரு ஸ்திரீயை ஒருவன் தனக்கு வசமாகாமற்போனால் அவமோசமான விடங்களிலேயும் அவமோசமானநேரங்களிலேயும் நித்திரைவேளையிலும் ஒரு மகா சாமர்த்தியமாகப்பட்டஸ்திரீயானவள் மனமில்லாமலிருக்கிறவேளையில் கண்டிகத்தினாலும் பெலத்தினாலும் துன்மார்க்கத்தினாலும் வசப்படுத்திச் சேர்ந்தால்அதனாலே மகா நரகத்தை யனுபவிப்பதல்லாமல் முடிவில் பைசாசஜென்மம் பலிக்கும் இந்தப்படி கலியாணஞ்செய்து ஒரு ஸ்திரீயைச் சேரவேணுமெனபது எங்களுக்கில்லை வாராய் ராமா மனுஷிக்யான தர்மந் தவறாமலும் அவருடைய குலாசாரந் தவறாமலுஞ் சுத்தசுசிகரம் சுதானதர்மம் அனுஷ்டானதர்மம் தேவபூசை குருபக்தி வர்ச்யாவாச்சியம் சற்சனசாவகாசம் ஆசாரபெரியோரிணக்கம்பிராமணவிசுவாசம் நோன்புவிரதம் திதிகர்மம விருந்துண்டல் மாதாபிதா ராமன் மாமன் பந்துவர்க்கம அன்புநயபிக்கை தெய்வதரிசனம் சுமங்கல சுபயோகம் வஸ்திராபரண அலங்காரம் ஊர்செல்வம் சுபவசனம் நிலைகுலையாப்பண்புசத்தியம் தாமம்ஆகிய இப்படிப்பட்ட நீதத்தோடேநீங்களல்லவா நடக்கவேணும்எங்களுக்கு அந்தமுறையுமில்லை வாராய்ராமா.

மனுநெறிவந்தனற் குணமில்லை குணமுதற்கொற்றவ-எ-து.

சற்குணத்தோடே விவாகம் பெருமை தயவு நிறை அறிவுஒப்பு கடைப்பிடி தவம் தர்மம் கல்வி ஒழுக்கம் இப்படிக் குறுகுணத்தை அறிந்து நீங்கள் நடக்கவேணும் எங்களுக்கு அந்தமுறைமையுமில்லையே வாராய்ராமா நீயோவென்றால் பிராமண க்ஷத்திரியன் வைசியன் சூத்திரனென்றும் நான்குகுலத்திலே பதினெண்பிரிவான எழுபத்திரண்டு வம்சமாகிய சங்கிலிஜாதிகளில் அவரவருடைய குலாச்சாரம் போல் நிலைநிறுத்தி வரன்முறையாக நடத்துவிக்கப் பட்டவனாகும் வாராய் ராமா,

உணவுசென்றுவழி சொல்லுமொழுங்கலால்-எ-து

எங்களுடைய குலசாரமெப்படியென்றால் வானங்களாகிய எங்களுடையமனதிலே தோன்றினபடிநடக்கிறது நாங்கள் குரங்குசாதிகளல்லவோ வாராய்ராமா இன்னகாரியம் செய்யலாகாது நன்மையின்னது பாவமின்னது புண்ணியமின்னது கீர்த்தியின்னது மானமின்னது அவமானமின்னதுவென்று வர்ச்சியாவர்ச்சியமும் பகுக்கறிகிற விவேகமில்லாமல் கண்காரன்யாங்கள் மனதிலேநினைத்தபடி நடக்கிறமிருகங்களாகும் வாராய்ராமா

நிணமுமெய்யு நெருங்கியநேமியாய்-எ-து,

சத்திராதிகளுடைய மாமிசத்தையும் உதிரத்தையும் குடித்திருக்கிற ஆக்கினேசக்கிரத்தைத் தரித்திருக்கும் ராகவா-எ-து

கவி-பிறையுண்டநுதலுங்கள் பெண்களைப்போலெங்கள் குலப்பேதைமார்க்கு, நிறையுண்டோகற்பழியா வகைக்காக்கநீதியுண்டோ, கறையுண்டநெடுங்கானிற் கனியருந்தித்திரிவார்க்குக்காதலானால். முறையுண்டோ முறைதிறம்பா தறங்காத்தமுதல்வனே மொழிந்திடாயே,

இதன்பொருள்

பிறையுண்டநுதலுங்கள் பெண்ணைப்போலெங்கள்குல பேதைமார்க்கு,

பிறையென்றுசொல்லப்பட்ட பஞ்சமிசந்திரனைப்போலெ நெற்றித்தடாகமும் அழகுபொருந்திக் கார்மேகமபோல் கறுத்துநீண்டுநெருங்கின அளகபாரமும் மகாமச்சம்போலவாரிநீண்டு சிறுத்தபார்வையானநயனமும் வில்போல்வளைத்தபுருவமும் கறுத்தரோமரேகையும் கண்ணாடிபோன்ற கபோலமும் பூரணசந்திரனைப்போல முகபாவனையும் வள்ளைக்கொடிபோல தழைத்தகன்னமும் குமிழமபூப்போலநாசியும் பவளக்கொம்புபோலதரமும் ஆணிமுத்துப்போலவும் முல்லை அரும்புபோலவும்பிரகாசிக்கிறபல்வரிசையும் அன்றுபானைகழிந்தகந்தி கமுகுபோல்கழுத்து பலமுங்கில்குறுத்துப்போல ஒயிலானதோளும் விஸ்தாரமாகிய ஒளிவானமாரபும மிருதுபொருந்திய இரண்டுகால்வரிசையும் தாமரையிதழ்போல விரலகளும் மிருதுவாகச்சூரத்துப்பார்த்த அகங்கையும்மன்னமானரேகைகளும் சிவப்புரேகையுற்றஉகிர்களும் செவவிளநீர்க்குறும்பைப்போலும் விருத்தமாகிய கூவிளம்பழம்போன்ற ஸ்தனபாரமும் வாழைத்தண்டுபோலும் யானைத்துதிக்கைபோலும் இடதுடையும சிறுத்தமுழங்காலும் தாழமபூவைப்போல மேலிருத்தம் அடி இருத்தும ஒளிவான கணைக்காலும் யந்துபோலதிரட்சியாகிய குதிகால

னுப்புத்தகம்போலப் புறவடியும் பவளக்கொம்புபோலவிரல்களும் அதிலேவச்சிரம் பதித்ததுபோலநகமும் செம்பஞ்சுபோல்சிவந்திருக்கிற பாதவரிசையும் வெண்மையுற்ற அகங்காலுஞ்சன்னமாகியரேகையும் இப்படிசாமுத்திரிகாலட்சணம்போல் முப்பத்திரண்டுறுப்பும் அழகுவாய்ந்து சவுந்திரியமாயிருக்கிற உங்களுடைய ராசகன்னிகளைப்போல் எங்களுடைய வானரஸ்திரீகளுக்கு ஒன்றுமில்லை.

நிறையுண்டோ கற்புண்டோ கற்பழியாவகைதாக்க நீதியுண்டோ.

நிரஞ்சனமான அழகும் நிரஞ்சனமானபக்தியும் ஆசாரமானவார்த்தையுமாகிய அதுவுமல்லாமல் கற்பழியாத நிலைமையுடனே உங்கள் ஸ்திரிகள்வரவேணும் அதின்விபரம் எப்படியென்றால் கற்புடையபெண்கள் தன்பத்தாவானவனை மாதாபிதாகுருதெய்வமென்பதாகக்கருதி அவர்ஜெபதப அநுஷ்டானஞ்செய்யும்போது தேவார்ச்சனைசெய்யும்போதும் புராணசாஸ்திரம்வாசிக்கிறவேளையிலும் குருவிடத்திலே சிஷன்பயபக்தியாகபணிவிடைசெய்து வருகிறதுபோல ஆசாரவுபசாரஞ்செய்யவேணும்புருஷன் அன்னம்புசிக்கிறவேளையிலே மாதாவானவள் குழந்தைகளுடைய பசிதாகமறிந்து அன்னபானாதிகளைக்கொடுத்து இரட்சிக்கிறதுபோலப் பர்த்தாவானவர்க்கு இஷ்டமான பதார்த்தங்களைப்பரிமாறச் சமீபத்தில்நின்றுகொண்டு அவருடைய நினைவையுமேன்மையுமறிந்து பரிபாலிக்கவேணும் காரியகுணதோஷங்களை விசாரிக்கிறபோது ராஜாவுக்குமந்திரிபுத்திசொல்வதுபோல புருஷனுக்குயோசனைசொல்லவேணு கிறகாரியம்பாற்குப்போது வீட்டுவெள்ளாட்டியைப்போல தேகப்பிரயாசைப்பட்டு பணிவிடைசெய்யவேணும் பார்த்தவுடனே பயபக்தியாக வசனிக்கவேணும் சரிசமானமாகநில்லாமல் ஒருச்சார்ப்பிலேநின்றுவார்த்தைசொல்லவேணும் கோபமில்லாமலும் அதட்டிவார்த்தைசொல்லாமலும் அச்சம்பயம்நாணம் பயிர்ப்பென்னும்நான்குகுணத்தோடே கூடியிருந்து சர்வதாஸ்நானம்செய்துதேகசுத்தியாக அலங்காரவஸ்திரமணிந்து ஆபரணம்பூண்டு புஷ்பபரிமளசுகந்தங்களை அணிந்து அரிசனவாடைவாராமல் சந்தோசபரவசமாயிருந்து விரதம்நோன்புகள்செய்து தோத்திரஞ்செய்துபக்தியுடனே பிதுர்தர்மம் தெய்வபூசை தானதர்மமுதலானவைகளை பிரீதியாகச்செய்து யாவரிடத்திலும் அன்போடும் ஆசாரத்தோடும்வார்த்தைசொல்லி ஆடல்பாடல்வேடிக்கைவினோதங்களில் மிகவும்பிரியமில்லாமல் அடியார்பணியாளர்பேரிலே அதிகமாகக் கோபியாமலும் அன்னியகிரகங்களிலே அடிக்கடி போகாமலும் பர்த்தாவினுடைய வசனத்திற்குத் தடுத்துச்சொ

ல்லாமலும் பத்தாவினது ஏதுவாகயாதொருவர்வந்தாலும் அவர்கள்பேரங்களை சொல்லியனுப்பிக்கொண் டிருக்கவேணும இராத்திரியில் அந்தப்புரத்தில் சப்பிரமஞ்சத்தில் புருஷனோடு உல்லாசமாகவிருந்து வேசிகளைப்போல் பலபலலீலைகள்செய்த புருஷனுக்கு இஷ்டம்போலிருந்து புருஷன் துயின்ற பிற்பாடு தானுந்துயின்று அருணஉதயத்திலேபுருஷனுக்குமுன்னே எழுந்துதீபம்பார்த்து கிரககிர்த்தியங்கள் யாதொன்றும் வழுவராமல்செய்து ஆசாரமாய்வாழவேணும் மாசத்திலேஒருதரம் தூரஸ்திரீயானால நாலாநாள்கங்கையிலேமுழுகி ஆதித்தனை தெரிசனைசெய்து அன்னியபேர்களைப்பாராமல் கூந்தலையவிழ்த்துமுன்னாலேவிட்டுஉலர்த்திக்கொண்டு கிரகத்திலேவந்துபர்த்தாவின்முகம் பார்க்கவேணும பர்த்தாவில்லாதசமயத்தில் தீபம்பார்க்கவேணும மேலுமபர்த்தாவானவர் கிரகத்திலேயில்லாதசமயத்திலே வஸ்திர அலங்காரமும் பரிமளாதிகளுமில்லாமல்சரீரம்சற்றே மாசடைந்திருக்கவேணும இன்னம பலபலகிரிகைகளுண்டு இப்படிபதிவிர்த்தியமும பதிவிர்த்தாதர்மமும இரட்சித்து வந்தஸ்திரீயினுடைய முன்னோர்களாகிய பிதிர்களுக்கு இருபத்தொரு தலைமுறைக்கும மோட்சமவரும அவர்களுடைய உத்தமகுணத்திலே அன்னியசுகத்தில் மனதுபோகாமலுமபோர்கள் ஆனாலந்தஸ்திரீகளுக்கு அக்கினிபகவானும் ஆதிபகவானும வாயுவருணன்முதலிய தேவாதிகளும திரிமூர்த்திகளுமபயப்படுவார்கள் அவாகள் வாழப்பட்டகிரகம புண்ணியஸ்தலமாகும இப்பேர்ப்பட்ட கற்புநிலைமையோடுவாழுகிற முறமையுமெங்களுக்கில்லை வாராய்ராமா உங்களுக்கென்றால் பொற்பொம்மை லாவண்ணியமான அழகுடைய பெண்களாயிருக்கவேணும விருதாப்பியமானால் அவர்கள்பேரிலே உங்களுக்கு இஷ்டமிராது அந்தப்பேதாபேதமும மற்கடங்களாகிய எங்களுக்கில்லையே வாராய்ராமா.

கறையுண்ட நெடுங்காணிற் கனியருந்தித் திரிவோர்க்குக்காதலானால்,

முனிசுராதிகள்வந்து யாகங்கள்எக்கியங்கள் செய்யப்பட்டயாகப்புகைசூழ்ந்திருக்கிற வநவாசத்திலகாயுங்கநியும்இலையுந்துளிரும்பூவுமபிஞ்சுமருந்தி சுனைநீர்குடித்து ஒருமரத்திலேயிருந்து ஒருமரத்திலேபாய்ந்து விளையாடப்பட்ட மற்கடங்களாகியஎங்களுக்குகாதலென்கிற காமவிகாரமுண்டு வாராய்ராமபத்திரா

முறையுண்டோ முறைதிறமபா தரங்காத்த
முதல்வனே மொழிந்திடாயே.

எங்களுக்குமன்மத விகாரம்வந்துநேர்ந்தசமயத்தில்முறைஎன்றமாதாவென்றும் பயின்றுவளர்க்கப்பட்ட பிள்ளை என்றும

தமக்கையென்றும தமபிபெண்சாதியென்றும தமையன்பெண்சாதியென்றும் வரன்முறையில்லை அந்தவேளையிலே அதற்கு ஏதுவானரஸ்திரீகளைக்கண்டால் தங்களிலே புணர்ந்துகொள்வோம ஆராய்ராமபத்திரா சர்வகுலத்தையு மவருடையமுறைபோல நிலைநிறுத்தி அறமென்னுந் தர்மநீதமாகிய ஆதுலர்சாலையோதுவார்க்குணவு பசுமாத்தல் சிறைச்சோறு பிறநுயிர்மீட்டல் பிராமகவளர்த்தல் அய்யமிடுதல்தர்மப்பள்ளி அறவைப்பிணஞ்சுடுதல நோய்மருந்து பஞ்சாங்கமோதல் தடாகமவெட்டல் கூபங்குறத்தல் மார்க்கமண்டபங்கட்டல் சுத்தசுகிர்தநித்தியகர்மங்கெங்காஸ்நானம் அன்னதானம வஸ்திரதானம பூதானங்கோதானப்பொன்னதானம் முதலியவுஞ்செய்து தேவாலயமபிர்மாலயங் கட்டல் அன்னசாலைவைத்தல் தண்ணீர்ப்பந்தல்வைத்தல்யாகயக்கியமசெய்தல அடைக்கலஞ்செய்தல் தபிலஸ்நானஞ்செய்தல் பூஞ்சோலைவைத்தல் இப்படிச்சொல்லப்பட்ட முப்பத்திரண்டு தர்மங்களையும பரிபாலனஞ்செய்து தர்மசாஸ்திரமபோலே இராச்சியபாரஞ் செய்யப்பட்டவரான ஓய்ராமா நான் என்னுடைய மற்சம ஆசாரம்போல நடந்தேனேயல்லாமல் சுக்ரீபனுக்கு வேறேயொரு துரோகமுஞ் செய்யவில்லை-எ-று.

அவதாரிகை அதுகேட்டு ஸ்ரீராமர்சொல்லுகிறார்.

கவி. நலங்கொடேவரிற் றோன்றிநவையறக்
கலங்கலாவதோர் நன்னெறிகாண்டலில்
விலங்கலாவது விலங்கியசூழ்தலால்
அலங்கல்மார்ப வடுப்பதின்னறமோ

இதன்பொருள் நலங்கொடே யுரிற்றோன்றி நவையற-எ-து,

வாராய்வாலி மகாநன்மையுற்றிருக்கிறசததுருவிருந்திபோடுங்கூடியிருக்கிற தேவாதிகள்யாவர்க்குங் கர்த்தனாயிருக்கிற தேவேந்திரனுடைய புத்திரனாகப்பிறந்து வானரசிரேஷ்டனாகிக்கிஷ்கிந்தாபுரிக்கு அரசனாயிருக்கிற ஓய்வாலி நலமென்னுங்குறறமானது சற்றுமில்லாமல்

கலங்கலாவதோர் நன்னெறிகாண்டலில்-எ-து.

கலங்கலென்னும் அக்கியானமில்லாமல் பத்திவிசுவாசத்துடனே பாவமின்னதென்றும் புண்ணியமின்னதென்றும பகுத்தறிந்து விவேகமில்லாமல் புண்ணியகாரியங்களில் மனதைச்செலுத்திப் பாபகாரியத்திலே மனதைச்செலுத்தாமலும விவேகிகளான பெரியோர்களிருப்பார்கள் அவர்களுடைய காலங்கழிய ஒருநாள் அறுபதுநாழிகை நேரத்தையும் நான்குகூறுக்செய்து போகபாகத்தி லிரண்டுபாகமும் புராண சாஸ்திரவித்தியங்களிலே ஒருபாகமும் தெய்வபூசையிலே ஒருபாக

ழுமாக அந்தப்பெரியோர்களுடைய மனைதனக்குகூறுகப்ப
குத்திருப்பார்கள் அப்படிப்போல தர்மசாஸ்திரவிதிராக உன்
மனமானதைநான்குகூறுக்கி ஒருபாகத்தை ஈஸ்வரபிராத்யைத
யான தெய்வபூசையிலேவிட்டு நான்குகட்டிலுந்தென்று தேக
சுத்திசெய்து பிரதிபிம்பருபத்தை ஸ்தாபித்து திருமஞ்சன அ
பிஷேகத்துடன்பத்திரபுஸ்பார்ச்சனைசெய்து ஜலகந்தபுஷ்ப தீ
பங்கொடுத்து அரி அரிபரந்தாமா அன்பர்க்கெளியனே ஆகர
வற்றவர்க்கருதியேயென்று திருமந்திரமாகிய அஷ்டாட்சர
த்தைத்தியானித்து நன்மார்க்கத்தைச்சொல்லுமென்றனைவாலீ.

விலங்கலாவது விலங்கிய சூழ்தலால-எ-று,

நீயோவெனில்தேவேந்திரன்புத்திரனுகப்பிறந்து தேவகர்
மத்தைத்தானேசெய்து புண்ணியமார்க்கத்தை இச்சித்திருக்கி
ருய் ஆனபடியினலே உன்னைவிலங்கென்றும் மிருகமென்று
ம் சொல்லக்கூடுமோ வாராய்வாலி அப்படி சற்சனனுயிருந்து
விலங்கின்மார்க்கத்தைவிட்டு துர்மார்க்கமாய் சுக்கிரீபனை உபத்
திரவம்செய்து பாதிராச்சியத்தையும் உரியமனைவியையும் அ
பகரித்துக்கொண்டாய் ஆனதினலே.

அங்கல்மார்ப வசிப்பதிதன்றரோ-எ-று.

அலர்ந்த வெற்றிமாலையை மார்பிலே தரித்திருக்கும் சவு
ரியசாலியான வாலி நீசுக்கிரீபனுக்குத் துரோகஞ்செய்தது உன
க்குச்சற்றும் முறைமையல்ல வாராய் வாலி எ-று.

கவி. மாடுபற்றி யிடங்கர்வலித்திடன்
கோடுபற்றிய கொற்றவர்க்கொய்வதார்
பாடுபெற்ற வுணர்வின்பரத்தினல்
வீடுபெற்ற விலங்கும்விலங்கதே.

இதன்பொருள் மாடுபற்றி யிடங்கர்வலித்திட-எ-று.

மாடென்னும் சமீபமாக்கொண்டு இடங்கரென்னுமுதலே
யுங்கஜேந்திரனென்னும் யானையும் தங்களிலே சாபகாரணத்
திலே போர்செய்து மோட்சம்பெற்றதுண்டு அதுவெப்படி எ
ப்படியென்றல் ஆதினிலே இந்திரத்துய்மன் பாண்டியராச
ன் விஷ்ணுசாரூபம பெறவேணுமென்றுபர்வதத்தின் பேரி
லே யிருந்து ஸ்ரீமந்நாராயணனைக் குறித்துசொருபாவனை யு
டனேஎன்கிற ஆனந்தபுஷ்பஞ்சொரிய அஷ்டாட்சரமந்திரருப
ஞன விஷ்ணுபகவானைச் சுட்சயபோதத்தினலே கண்டு தவ
ஞ்செய்கிறபோது அகஸ்தியமுனியானவர் வந்தருளினர்.

அவர்வருகிறதைக்கண்டெழுந்து இந்திரத்துய்மன் பாண்
டியராசன் வணங்காததினலேகோபித்து அகஸ்தியரானவர் அந்த
பாண்டியனைப் பார்த்துநீமதயானையாகப்பிறக்கக்கடவதென்றுச
பித்தார் அதைஅரசன்கேட்டு விதிதனைப்பார்த்து அகஸ்தியரெ

ணதெரிந்துவணங்கி அடியேனுக்குச் சாபவிமோசனமெப்போ தென்றுகேட்டான் அப்போது விஷ்ணுபகவானாலே இச்சாபம் தீருமென்று அகஸ்தியரருளிச்செய்துபோனார் அந்தராசவும்க ஜேந்திரனாகப்பிறந்து அனேகயானைகளோடுகூடிச் சஞ்சரித்து த்திரிந்தது அக்காலத்திலே ஓடையென்னும் பொய்கையிலே காந்தர்வஸ்திரீகளும் ஹூகுவென்னும்கந்தர்வர் அப்பொய்கைக் கரையிலேயிருந்து கித்திபகர்ம முடித்துக்கொண்டிருந்தார்.

அப்போது அந்தக் கந்தர்வனானவன் குனிந்துசென்றுமா ரிஷியினுடைய காலைப்பிடித்துத் தண்ணீரிலே யிழுத்துப் பரி வாசஞ்செய்தான் அப்போது தேவமகாரிஷிகோபித்து நீமுத லையாகி தண்ணீரிலேகிடக்ககடவதென்று சபித்தார் அப்போ து அந்தக்கந்தர்வன அடியேனுக்குமோட்சம் எப்போதென்று கேட்டான் அதற்குக் கஜேந்திரனுடைய ஏதுவாக விஷ்ணுசக் கரத்திலே உனக்கும் மோட்சம்லபிக்குமென்று சாபவிமோச னம்சொன்னார் அப்படி சிறிதுகாலங் கழிந்து கஜேந்திரனானவ ன் தண்ணீர்குடிக்கச்சென்று பொய்கையிலிறங்கிச்சலம் குடிக் கிறபோது அந்தமுதலையானதுவந்து கஜேந்திரனுடையகாலே ப்பிடித்துக்கவ்வி தண்ணீரிலே யிழுக்கவும் சகாயமாய்வந்தபி டியானைகள்தெரிந்துபடித்து இழுக்கவும் முதலையானதுவிடா மல் தண்ணீரிலே யிழுக்கவும் நீர்வாழுஞ்சாதிக்கும் கரையில் பலமாதலால் இப்படி ஆயிரம்வருஷம்வரைக்கும் போர்செய் து கஜேந்திரன்பயந்து பசிதாகாத்தினாலேமெலிந்து நிர்வகிக்க மாட்டாமல்,

கோடுபெற்றிய கொறறவர்க்கொய்வதோர்-எ-து,

அந்தயானையானது ஆபத்துகாலத்திலே உதவிசெய்யப்ப ட்டவர் ஸ்ரீமந்நாயணபகவானென்றறிந்து ஆத்மபேதம் பிறந் து சுகஸ்திரநாம தாரிபால் அந்தஸ்ரீமந்நாராயண மூர்த்தியைத் தியானித்து ஆதிமூலமே அபயமெனகூவித கோடென்று சொ ல்லப்பட்ட பஞ்சதன்னியமானசங்கைதாங்கியிருக்கிற விஷ்ணு பகவானைநினைத்து முறையிட்டபோது.

பாடுபெற்ற வுணர்வின்பயத்தினால்-எ-து.

வைகுந்தபதியான நாராயணரும் பத்தாள்பேரில் அன்பா னபடியினாலே கஜேந்திரனைக் காத்தருளவேணுமென்று நினைத் து அந்த மதயானையினுடைய ஈடுபாடுகண்டு சங்குசக்கிரமகதா சாரங்கமென்னும் பஞ்சாயுதத்துடனே கருடவாகனத்தின் பே ரிலே கருடத்துவஜத்தோடும் நீலமேகமண்டல சொருபமாகிய ஸ்ரீமந்நாராயணமூர்த்தியானவர் எழுந்தருளி வந்து கஜேந்திரனை பயப்படாதேயென அபயஸ்தங்கொடுத்தருளிச் சக்கிராயுதத் தினாலே காரவென்னுமுதலையைச் சங்கரித்தபோது அதுச

பர்தீர்த்து கந்தர்வனுனவ முன்னுருவமாகித் துதிசெய்துபோனன்பின்பு கசேந்திரனனவனுககுச் சாருபசுபத்தைக் கொடுத்தார் வாராய்வாலி அந்தக்கசேந்திரனென்னும் யானையானது மிருகமாயிருந்து உணர்வென்னும் அறிவினுலேபோகபோக்ய ஸ்வரூபமான விஷ்ணுமயமாகி நிறஞ்சனவஸ்துவான பகவனைத் துதித்தபடியினுலே.

வீடுபெற்ற விலங்கும்விலங்கோ-எ-து.

மோட்சவீடான வைகுந்தபதத்தை அடையப்பட்டகசேந்திரனனவன விலங்கென்றும மிருகமென்றுஞ்சொல்லப்போகுமோ வாராய்வாலி மிருகத்துக்கோவென்றால் தொண்ணூற்றுறுகருவிகளிலே அப்பேர்ப்பட்ட மிருகங்களுக்குப் பாவபுண்ணியம்குணம்தோஷமென்பது அந்தக்கரணபூதங்களிலே அறியவேண்டியது இரதச்சகலசனமகிர்க்கமும் உன்னிடத்திலே யிருந்தபடியினுலே உன்னைமிருகயோனியிலே சன்மித்தவனென்று சொல்லக்கூடாது வாராய் வாலி ஆகையினுலே உன்னைச்சிட்சைசெய்தேன்-எ-று.

க வி. தக்கவின்ன தகாதனவின்னதென்
ஒக்கவென்னம் ராகியபாந்துளோர்
மக்களும்விலங் கேமெனுவின்னெறி
புக்கலேயிவ் விலங்கும்புத்தெளிமோ.

இதன்பொருள் தக்கவின்ன தகாதனவின்னதென்-எ-து.

தகுமானகாரிய மின்னது தகாதாகாரியமின்னது அடுக்குங்காரியமின்னது பாவமின்னது புண்ணியமின்னது என்று சொல்லப்பட்ட.

ஒக்கவென்னலராகி யுயர்ந்துளோர்-எ-து.

இந்தவிவேகம் வரவேணுமென்பதே யானுல்பூர்வபுண்ணியவாசனையினுலே சற்குணப்பிறந்து அட்சாக்கியானந் தோன்றிசாஸ்திரபூர்ணங்களினுடைய அர்த்தசாரங்களை யறிந்தால்அப்போது தர்சனவிருததிப்போய் சற்சனசாவகாசம் சற்சனசாவகாசம்வந்தால் பக்திவிசுவசம்வரும் பக்திவிசுவாசம்வந்தால் அக்கியானம்போம் அக்கியானம்போனுல் ஞானபோதம்வந்தால் சூட்சபோதம்வரும் சூட்சபோதம் வந்தால் சொரூபக்கியானம்வரும் சொரூபக்கியானம்வந்தால் அருபஞானந்தெரியும் அருபஞானந் தெரிந்தால்சித்தாந்தநிலையும் வேதாந்தநிலையும் மந்திர மின்னதென்றுந் தெரியவரும் அப்படிதெரிந்த மகாபோதக்கியானுகிப் பஞ்சகர்த்தாக்களையுமயங்களுந் தெரிந்தசராசரப் பிரபஞ்சங்க ளாகிறதும அழிக்கிறதுமான சர்வ வியாபங்களையும அறியப்பட்ட விறபலமவரும் இதையெல்லாம் சறகா

மல்லன்றி நித்தியவிரதமான அனுஷ்டானகருமங்களைத் தவ
றாமலும் அனுஷ்டித்துக்கொண்டுவந்தால் சகலவிவேகமும் வரும்
ஆசையால் நீயோவென்றால் கிரியையான பூசாவிதகர்மத்திலே
கட்டுப்பட்டவனானபடியினாலே நீ துராசாரஞ் செய்யக்கூடாதேவா
ராய்வாலி பாவம்வந்து சமபவிக்கிறதும் பாவம்நிவர்த்திசெய்
கிறதுமான மார்க்கந்தெரிந்த சற்கருமமாமோ வாராய்வாலி இ
ப்படிக்கொத்த வேதங்களையறிந்தவன் மகாத்மாவாகும் ஆனப
டியினாலே.

மக்களும் விலங்கேமனு விலன்றெனு நி - எ - து.

மககளென்று சொல்லம்பட்ட மனுஷனானாலும் விலங்கெ
ன்னும்மிருகமானாலும் மனுவிக்யான தருமமான சாஸ்திரவி
தியையறிந்து நரகவாசனையும் சொர்க்கவாசனையும்.

புக்கதேயிவ் விலங்குபுந்தோலிமே - எ - து.

வாராய்வாலி சகலவிவாகாரம் குணம் தர்மங்களும் அவரவ
ர்க்குடையபடி நடக்குமென்பதுதோற்றி ஜீவாத்மாவென்று
ம்பரமாவென்றும் சொல்லப்பட்ட இரண்டுவிதங்களுந்தெரிந்
து ஆத்மாநேசனாகிப் பவகீர்த்தியுஞ் செய்தும் பகவானருமென்
றும் நம்முடைய வல்லபமல்லவென்றும் தெளிந்தவன் மிருக
மானாலும் அவன்தேவனுக்குச் சமானமாவான் இதுவே வேத
சாஸ்திர புராண விதிகளும் அனுபவம் ஆனபடியினாலே துர்
மார்க்கம் ஒருவரும் செய்யக்கூடாது அப்படிப்பட்டவர்களை அ
னுசரிக்கக்கூடாது அவர்களை ராசசிட்சையினால்கண்டித்து நிலை
நிறுத்தவேணும் வாராய்வாலி எ - று.

௧௮. அனையசாதலி லெக்குலத்தியாவர்க்கும். வினையினால்
வருமேன்மையுங்கீழ்மையும், அனையைத்தன்மை யரிந்துமயர்
த்தனை, வினையுமாட்சியும் வட்புயவாலியே,

இதன்பொருள் அனையசாதலி லெக்குலத்தியவர்க்கும் - எ - து.

முன்சொல்லப்பட்ட தர்மநீதியானது பூர்வசென்மத்தி
லே செய்யப்பட்ட பாவபுண்ணியத் தொடர்ச்சியாகிவரும் எங்
குலமென்னும் மனுஷயோனியிலே செனித்ததேயானாலும் தே
வயோனியிலே ஜெனித்ததேயானாலும் மிருகயோனியிலே ஆத்
மபோதத்தோடே செனித்ததேயானாலும்.

வினையினால்வருமேன்மையுங்கீழ்மையும் எ - து

அவரவர்செய்யப்பட்ட வினையென்பது நல்வினையென்றுதீ
வினையெனறும இரண்டுவிதவர்க்கும் அதில நல்வினைவர்க்கமெ
ன்பது தானம் வம்சவு இரக்கப்பத்திவிசுவாசம் சத்தியம்தெ

ய்வபூஜை அன்பு ஆசாரம்சுத்தம் குருசேந்திரம் தீர்த்தயாத்தி
ரை தெய்வதரிசனம் பெரியோரைக்காணல் சற்சனசாவகாசம்
கல்விஒழுக்கம் நல்லோரைச்சேர்தல் பிராமணவிசுவாசம் குரு
விசுவாசம் தயவுதாட்சண்யம் இப்படிச்சொல்லப்பட்ட நல்வி
னைமார்க்கம்செய்தால் மேன்மையென்னும் பெருமையும் கீர்த்
தியும்சம்பத்தும் தீர்க்காயுசும் மோட்சமும் மேன்மேலாகலபி
க்கும்.தீவினைவர்க்கமென்பது ஆங்காரம்கெர்வம் நிந்தனைதுர்வி
ர்த்தி துர்ச்சனசாவகாசம் நிர்த்தாட்சண்ணியம் அசத்தியம் அசு
த்தமபரஸ்திரீசங்கம் பரதாரமோகம பரதிரவியவிருப்பம்கோ
ள்சொல்லல் வஞ்சனையில்லி குனிபம்கொலைசெய்தல் களவுசெ
ய்தல்பெரியோரைப்பழித்தல் தெய்வநிந்தனை பிராமணநிந்தனைபுரா
ணநிந்தனை அனுசாரம் அழுக்காறுகுருநிந்தை கர்த்தருரோகம்
விசுவாசபாதகம் அநீதம் அதர்மம இப்படிப்பட்டதெல்லாம் தீ
வினைவர்க்கமாம் அதனாலே அவமானம அபகீர்த்தி அற்பாயிசு
மகாரோகம தரித்திரமதுக்கமும லபிக்கிறதுமல்லாமல்மேலே
க்குநரகமும் லபிக்கும் வாராய்வாலி.

அனையதன்மை யறிந்துமயர்த்தனை-எ து.

இப்படிச்சொல்லப்பட்ட இருவினைப்பயனால் வரப்பட்டது
பாவமும்புண்ணியமும அதினாலே அனுபவசுகமும துக்கமும
ஆகவால் அவரவர் செய்யப்பட்ட பாவபுண்ணியம் சென்மசெ
ன்மத்துக்கும தொடர்ச்சியாகிவரும வாராய்வாலி இந்தவரவு
போக்குஅறிந்து அனுபாகனாயிருந்து நன்மை யுடையவனாகிய
நீயும்மறைந்துசெய்தாய் இப்படிப்பலவினாகிய சுக்கிரீவனுக்கு
த்துரோகம செய்தபடியினாலே

வானைமாட்சியும் வன்புயவாலியே-எ து,

மகாபுத்திசாலி அறிவாகரன் பராக்கிரமசாலி யாகையால்
வாராய்வாலி நீசமோதரதோஷம் செய்யலாகாது செய்தபடியி
னாலேஉன்பேரிலே அஸ்திரந்தொடுத் துன்னைச் சிட்சைசெய்
தேன் வாராய்வாலி-எ-று.

அவதாரிகை-என்றிப்படி ஸ்ரீராமாசொல்லக்கேட்டு வாலி
சொல்லுகிறான்

கவி, அவ்வுரையதைக்கேட்டே யரிகுலகதரசேயும்
செவ்வியேயனையதாகச் செருக்களத்துருச்செய்யாமல்
செவ்வியபுளினரென்ன விலங்கினைமறந்துவில்லா
லெவ்வியமென்றேநீயக் கெனக்குரைத்தருளுவாயே

இதன்பொருள் - அவ்வுரையதைககேட்டே யரிகுலத்தரசே
நீயும்,

ஓய்ராமா நானொருவசனஞ் சொல்லுகிறேன்கேள் இங்கே
ரம்வரைக்கும் என்னுடைய பூர்வீகமும் தர்மசாஸ்திரவழியும்

அநேகவிதமாகச்சொன்னாய் ஆனபடியினாலே சுக்ரீபனுடைய நாடுராச்சியமும் அமுக்கி அவனது உரிமைஸ்திரீயையும் அபகரித்துஉன்பேரிலே அபசாரந்தானே ஓய் அரிகுலமென்னும ஆதித்தன்மரபிலேவந்து உற்பவித்து தர்மசிந்தனையோடுகூடியிருக்கிறவரான ராகவேஸ்வரர் உன்னை ஒருவசனங்கேட்கிறேன் வாருய்ராமா,

செவ்வியேயனையதாகச் செருகளத்துற்றபோது-எ-து,

செவ்வியென்னும நெற்றியுங்கண்ணும நேர்பாடாகநின்று யுத்தகளத்திலேவந்து என்னைப்பாாத்து நீசுக்ரீபனைக் கஷ்டப்படுத்தினதினாலே அந்தசுக்ரீபன் என்னிடத்தில்வந்து அடைக்கலம்புகுந்தான் ஆகையால் க்ஷத்திரியதர்மத்துக்கு அடைக்கலங்காத்து துஷ்டநிக்கிரக சிஷ்டபரிபாலனஞ் செய்யவேண்டியகடமையாதலால் உன்னைசிட்சைசெய்கிறேனென்று எதிர்த்துநின்று அஸ்திரசஸ்திரங்களைதொடுத்து வதைசெய்கிறதலலவோ முறைமையாகும் வாராய்ராமா அப்படிசெய்யாமல்,

வெவ்வியகொரேமான பாபிஸ்டனாகித் தன்னுடைய பசிதாகமபெரிதென்று எந்நேரமும கொலைபாதகங்களாகிய மிருகவதைசெய்து வேட்டையாடுகிறதற்குள் பாசவலையும கவண்கலலும வளைதடியும வாங்குவல்லயமுமெடுத்து தூணிதூக்கிபாணமெடுத்து வில்லைவளைத்து வெகுவிலேமிருகங்கள் பறவைகள் அகப்படாமற்போனால் செடிகளிலே மரங்களிலே மறைந்துநின்றுநிக்கிரகமசெய்து அவைகளினுடைய மாமிசத்தைபட்சித்து குட்சிபாதை யடக்கிகொள்வார்களானபடியினாலே.

எழுவியதென்னேநீயிங் கெனக்குறைத்தருளுவாயே-எ-து,

அந்தக்கிராதனைப்போல் விருட்சததில்மறைந்துநின்று என்பேரிலே பாணந்தொடுத்தகாரணமென்ன அதைச்சொல்லவேணுமவாராய்ராமா தர்மநீதியுள்ள ராஜாதிராஜேந்திரனாகிய நீஒளிபாணந் தொடுக்கலாமோ அந்தஉதாரணத்தை சொல்லவேணும வாராய்-எ-து

அவதாரிகை என்றிப்படி வாலிசொல்லக்கேட்டு இலட்சுமணர் சொல்லுகின்றார்,

கவி, முன்புநின்றமபிவந்து சரண்புகமறையிலோரைத்
தென்புலத்துய்ப்பனென்று செப்பிேனுஞ்சருவிநீயும
அன்பனதுயிர்க்காக வடைக்கல்வியானுமென்னில்
என்பதுகருதிவள்ளல் மாமறைந்தெய்ததின்றே,

இல் முன்புநிறமபிளந்து சரண்புகமறையிலோரே-எ-து

வாராய்வாலி உன்பேரிலே மரத்தில்மறைந்து அஸ்திரந்தொடுத்தகாரண மெதினாலென்றால நாங்கள்கோதாவரிக்கரையிலேயிருந்து மகாலட்சுமியாகிய சீதையைத்தேடிவந்து பம்ப

யாற்றைக்கடந்து தென்பால்வருகிறபோது உன்தம்பியானசுக்ரீபன்வந்து என்தமையனான வாலியானவன் என்னுடையநாடு நகரத்தையும் உரிமைஸ்திரீயையும் அபகரித்துக்கொண்டு என்னையுங் கொல்லவேணுமென்று லோகத்திலே ஒருவிடத்திலிருக்கவொட்டாமல் என்னைபிராணவதைசெய்கிறான் ஆதலால்நீங்கள் அடைக்கலங்காக்கவேணுமென்று அவன்பயம்புகுந்தபடியினாலே முறையென்று சொல்லப்பட்ட நெறிமுறை ஆசாரத்தைவிட்டு கிர்த்தியாகிர்த்தியமில்லாமல் துராகாரம் செய்யப்பட்ட துஷ்டரெவர்களையும்.

தென்புலத்துய்ப்பனென்று செப்பினன்செருவினீயும்-எ-து

அபகிர்த்தியஞ்செய்யப்பட்ட பாபிஷ்டர்களைக்கொன்றுசாதுக்களை இரட்சிக்கத்தக்கதாக வந்திருக்கிறோம் ராஜதர்மத்தை நிலைநிறுத்தத்தக்கவினைந்து துட்டத்தனம்செய்யப்பட்ட வாலியைக்கொன்று உனக்குராச்சியத்தையு உருமஸ்திரீயையும்மீட்டுத்தருகிறோமென்று சத்தியவார்த்தைசொல்லி இருக்கிறோம் ஆனபடியினாலே,

அன்பனதுயிர்க்காக வடைக்கலமியானுமெனனில் எ-து,

காரியார்த்தம் இப்படியிருக்கின்றபடியினாலே உன்னோடெதிர்த்து சுவாமியானவர்போர்செய்து உன்பேரிலே அஸ்திரந்தொடுத்ததேயுண்டானால் நீவானரசென்மமாதலால் பிராணபயமும்அவதைரியமும் லச்சையும் உங்களுக்கதிகமாயிருக்கும்படியிருப்பதால் அறிவும்ஆகமும்தெரிந்து சுவாமியினுடைய காரணார்த்தங்களையறிந்து சுக்ரீபன்வந்தடுத்து அபயம் புகுந்தாலந்தசுக்ரீபனைப்போல நீயும்உன்ஜீவரட்சணைக்காகச் சுவாமியினுடைய பாதாரவிந்தத்திலே வந்துவிழுந்து அடைக்கலம்புகுந்ததேயுண்டானால் உன்னைவதைசெய்யப்போகாது வாராய்வாலி

என்பதுகருதிவள்ளல் மாமறைந்தெய்வத்தின்றே-எ-து

இந்தவிஷயங்களையறிந்தே விருட்சத்தில் மறைந்துநின்று அஸ்திரந்தொடுத்தார் வாராய்வாலி அல்லாமலும் நீமற்கட்விருமானபடியினாலும் தனுர்ப்பமுள்ளவனானபடியினாலும் ராசதத்துவமுள்ளபடியினாலும் பிடிக்கப்பட்டவனானபடியினாலும் பக்திசிரத்தையுண்டானபடியினாலும் சுக்ரீபனுடனே சொன்ன சத்தியம் நிலைநிற்கத்தக்கதாகவும் ராஜநீதமானது சாமபேததானதண்டமென்னும் சதுர்விதவுபாயத்தினால் நிவர்த்திக்கவேண்டியபடியினாலும் சமயாசமயமாகிய இரண்டுவழியும்யோசித்து அஸ்திரந்தொடுத்தார் வாராய்வாலி பலவிதத்திலும் உனபேரிலேதொடுக்கும்படி விவகாரமிருந்தபடியினால் இந்தக்காரியம் செய்தார் வாராய்வாலி-எ-று.

அவதாரிகை-என்றிப்படி லட்சுமணர் சொல்லக்கேட்டு வாலியானவனுக்கு அறிவுதோன்றி ஸ்ரீராமனை ஞானபோதத்தினாலே தெரிந்துசொல்லுகிறான்,

கவி, தாயெனவுயிர்க்கிரங்கித் தருமமுந்தகையுஞ்சார்பும்
நீயெனநின்றநின்பா னெடிதுநின்னோக்கநேர்மை
நாயெனநின்றவெம்பா னவையுறவுணரலாமோ
தீயனைப்பொருத்திசெய்ய தாமரைச்செல்விமார்பா

இ-ள், தாயெனவுயிர்க்கிரங்கித் தருமமுந்தகையுஞ் சார்பும்-எ-

சரணஞ்சரணம் வாராய்ராமபத்திரா மணிமகர குண்டலப்பிரபு ராஜாபிஷேகமான ஸ்ரீமந்நாராயணாசரணம அஷ்டலட்சுமியாகிய சீதாலட்சுமிசமேதரான ராமபத்திராசரணம வைவசுதன்றனக்காக நீர்தனில்மறைந்து அவர்க்கருள்கொடுத்தவா சரணம மச்சகூர்மவராகநரசிங்கமான நாராயணாசரணம ராம ராமதேவா ராமச்சந்திரா பரப்பிரம்மசொரூபா வேதவேதாந்தவேதியா அகிலாண்டகோடி பிரம்மாண்டநாயகா அபயம் அபயம வாராய்சுவாமி தேவரீருடைய பிரஸ்தாபமெப்படியென்றால் தாயென்றுசொல்லப்பட்ட மாதாவைப்போலே சிவசுப்பிரியமான குழந்தைகளை அன்போடுங்கூட்டி பசிதாகங்களறிந்தமுதூட்டி இரட்சிக்கிறதுபோல் இந்தலோகத்திலுண்டான எண்பத்துநான்குலட்சம சீவப்பிராணிகளையும அவரவர்க்குவேண்டிய அன்னபானாதிகள்முதலான பட்சணங்களைக் கொடுத்துக் காக்கப்பட்ட கர்த்தனான சுவாமிதேவரீர் தயாதர்மத்துடனே சொரூபகாரணமும சாஸ்திரவிதியையும் முப்பத்திரண்டுதர்மங்களையும நிலைநிறுத்திச் சகலரையுந் தயவுடனே இரட்சிக்கப்பட்டவர் தேவரீர்தானே வாராய்லோகநாயகா,

நீயெனநின்றவெண்பா நெடிதுநின்னோக்கநேர்மை-எ-து,

இப்படிக்குச் சகாயமாயும லோகபரிபாலனாகியும இருக்கப்பட்ட உமதுமேன்மையும் பெருமையும வாராய்சுவாமி

நாயெனநின்றவெம்பா னவையெனவுணரலாமோ-எ-து.

நாயென்றடியார்கருமடியார்க்கீழ்ப்படிந்துதேவரீருடைய பந்தனாயிருக்கிற என்பேரிலே கடைக்கண்பார்வையாகப் பார்த்துப்பட்சமவைத்து இவன்மறசுடனமாகுமென்று பரியாசஞ்செய்து அசட்டையாய் நிந்தனை செய்யாதபடிக்கு,

தீயனைப்பொருந்திசெய்ய தாமரைச்செல்விமார்பா-எ-து

வாருய்ராமசந்திரா தீவினைகளாகியடியேன்முன்செய்யப்பட்டபாபங்களையகற்றி குற்றங்குறைபாடுகளைப்பொறுத்து அடியேனைகாத்து ரட்சிக்கவேணும் வாராய்கர்த்தனே செந்தாமரை

ப்புஷ்பத்திலே வாசஞ்செய்யப்பட்ட இலட்சுமிமார்பனான சுவாமிசரணம்சரணம் வாராய்ராகவேஸ்வரா வாராய்ராமசந்திரா லேதமூர்த்தியாகிய பரமயோகி தற்பரசொரூபா ராஜலட்சுமிபிரபுலோராமபத்திராசரணம் கோதண்டராகவா கோசலபுரிராஜராஜேந்திரா சர்வஜீவதயாபரா சர்வலோகநாயகா ஜானகிகல்யாணமனோகரா சரணம்சரணம் வாராய்ராகவா எ-று-

௧௬. இரந்தனனடியேனெந்தா யாவதுமறிகிறேற்றுக்
குரங்கெனக்கருதிநாயேன் கூறியமனத்துட்கொள்ளேல்
அரந்தையாய்ப்பிறவிநோய்க்கு அருமருந்தனையவையா
வரந்தருவள்ளலேநீ கேட்டருண்மகிழ்ந்துமன்னு,

இ-ள். இரந்தனனடியேனெந்தா யாவதுமறிகறேற்றே எ-து.

தேவரீரிடத்திலே யிருந்து யாசித்துச் சிறிது அருட்பாடு கேட்டுக்கொள்ளுகிறேன் வாராய்சுவாமி ஒன்றொன்று அறிவில்லாமல் அதிமந்தங்கொண்டிருக்கிற

குரங்கெனக்கருதிநாயன் கூறியமனத்துட்கொள்ளேல் -எ-து.

மிருகயோனியாகிய மற்கடகுலத்திலேபிறந்து அறிவில்லாத நிர்மூடனாகி யிருக்கப்பட்டவனென்று கருதி அடியேன் இறிது உதாசினமான வார்த்தைகளைச் சொல்லியிருந்தபோதிலும் மற்கடவங்கிஷ மாதலால விவேகமில்லாமல் சொன்னானென்று திருவுள்ளத்திலே கருதிக்கொள்ளவேணும் அடியேன்மேரில்பாரகுற்றம் விசாரிக்கலாகாது வாராய்ராகவா அதுவுமல்ல அரந்தையாம் பிறவிநோய்க்கு அருமருந் தனையவையா-எ-து,

லோகத்திலே சொன்னசாகாத்தினுடைய கொள்கை எப்படிப்பட்டதென்றால் சரீரமானது அன்னமய கோசத்தினாலே எடுக்கப்பட்ட விகாரமானது அது அன்னமயம் பிராணமயம் மனோமயம் விக்கியானமயம் ஆனந்தமயமென்கிற பஞ்சகோசத்தினாலேமூடப்பட்டது சுக்கிலசுரோணிதமோ வென்றால் அவரவர் போசிக்கப்பட்ட அன்னபதார்த்தரசவர்க்கங்களெல்லாம் பொசித்த பதினைந்துநாழிகையில மலசலமாகப் பிரிந்து அந்தச்சலத்தில் எழுகூறும ஒருகூறுரெத்தமாகி தொண்ணூறு நாழிகையில் அந்த இரத்தம் சப்ததாதுகளிலும் பிரிந்து பின்னுந்தொண்ணூறு நாழிகையில் சுக்கிலமாக மாதாவும் பிதாவும் ஸ்திரீபுருஷசம்போகத்திலே யிருந்துயிரண்டுபேருஞ் சங்கமஞ்செய்த ஆலிங்கன லீலாவினோதத்திலே விந்துவாகிய சுக்கிலம் பெருகிஅந்தச்சுக்கிலத்தோடே பிராணவாயுங்கலந்து ஸ்திரீயி

னுடைய கெற்பத்திலே அறுகம் புல்லின் முனையிலே பனிநீர்தங்கும் பிரமாணமாய்ப்பாய்கிறபோது முன்செய்யப்பட்ட பாவபுண்ணியமாகிய இரண்டும் அந்தப்பிராணவாயுவினால் சிவனோடேகூடிக் கெற்பக்குழியிலே சுக்கிலசுரோணிதசம்பந்தமாகிறே சந்துக் கருவிலுறையும் அந்த இருவினையானதும் அந்தக்கருவோடுவுறைந்து கருவாகியுருவாகி யெடுக்கப்பட்ட சென்மபாவவினையாய் சுகதுக்கமாகிப் பாவபுண்ணியங்களை அனுபவிக்க வேண்டிவரும் அந்தசெனனமானது ஒழிங்காமல இறைந்தும பிறந்தும் சகடம்போலும் காற்றாடிபோலும் தொடர்ச்சியாவரும் ஆனபடியினாலே ஜெனனமரணமானது ஒருகாலத்திலேயும் ஒழிங்காதே தேவரீராய் சுவாமி இப்படி தொடர்ந்து வரப்பட்ட பிறவிநோயானது தீர்ந்து அழியாத பதம்பெற வேணுமானால் தேவரீருடைய சரணசொரூபத்தைக்கண்டு தெரிசனைசெய்ய வேணும் அப்படி தெரிசனஞ் செய்வதற்குக் காரணகுரு தெரிசனமாகவேணும் அதனால் தத்துவக் கியானமும் அதனாலே ஆத்தும போதமும வரவேணும் அந்தமார்க்கம் யெப்படியென்றால் பிரிதிவி அப்பு தேயுவாயு ஆகாயம் ஆகபூதம்-௫ சுரோத்திரம் தொக்கு சட்சு சிங்குவை ஆக்கிராணம் ஆகபொறி ௫ சத்தம்பரிசம் ரூபம் ரசம் கந்தம் ஆகபுலன்-௫ வாக்கு பாதம் பாணி பாயுருஉபஸ்தம் ஆககன்மேந்திரியம்-௫ வசனம் கமனம் தானம் விசாகம் ஆனந்தம ஆக கன்மவிஷம்-௫ மனம் புத்தி சித்தம் ஆங்காரம் ஆக அந்தக்கரணம்-௪ இடை பிங்கலை சுழிமுனை காந்தாரி குருசங்யனி அம்லபுடை புருஷன் சிங்குவை அத்திரி ஆக நாடி-௰ பிராணன் அபானன் வியானன் உதானன் சமானன் நாகன் கிரிகரன் கூர்மன் தேவதத்தன் தனஞ்சயன் ஆகவாயு-௰ ஆமாசயம் பக்குவாசயம் மலவாசயம் ஜலவாசயம் சுக்கிலவாசயம் ஆக ஆசயம்-௫ அன்னமயம் பிராணமயம் மனோமயம விஞ்ஞானமயம் ஆனந்தமயம் ஆககோசம்-௫ மூலாதாரம் சுவாதிஷ்டானம் மணிபூரகம் அனாகதவிசுத்தி ஆக்கினை ஆக ஆதாரம்-௬ அக்கினிமண்டலம் ஆதித்தமண்டலம் சந்திரமண்டலம் ஆகமண்டலம் ௩ ஆணவம்மாயை காமியை ஆகமலம்-௩ வாதபித்தம் சிலேத்துமம் ஆகதோஷம்-௩, அதலாஷணை புத்திராஷணை ஆகஷணை-௩ தாமதம் ராசதம்சாத்துவிதம் ஆககுணம-௩ காமம்குரோதம்மோகம்லோபம் பதம மாச்சரியம இடும்பை ஆங்காரம ஆக கேவகுணம ௮-சாக்கிரம சொற்பனம சுழுத்தி துரியம துரியாதீதத தொண்ணூற்றாறு தத்துவவிபரங்களையறிந்துதேகமுந் தேகியும வேறுபடுத்திச் சச்சிதானந்த ஸ்வரூபமாகிய ஆத்துமாவைத் தரிசிப்பவர்கள் அந்தஉண்மை ஞானிகள் உமமுடையபாதாமறையைதரிசனைசெய்துமேலா

சிய பதத்தையடைந்து பிரவிசாகரத்திலே யுட்படாமல் சாயுச்சியபதம் பெற்றுத திரிமூர்த்திகள் தேவாதிகளுடைய ஜனனமரணங்களையும கண்டுவாழ்வார்கள் இப்படிப்பட்ட பிறவிநோய்களுஞ் சஞ்சீவிபோ லிருக்கிறவனை சுவாமி.

வாக்தருமவளமேலதி கேட்டருள் மகிழ்ந்து மன்னே-எ-து.

இப்படிக்கு மாயாரூபமாகிச் சகலசீவகற்பராகி யிருக்கிறவரான ராமபத்திரா அடியேன் உமமைச் சிறிதுவரங்கேட்கிறேன் தேவரீர் அடியேன் பேரிலே அன்புவைத்துப் பிரியமாகத் தரவேணும வாராய்சுவாமி எ-று.

கவி. ஏவிசூர்வாளியா லெய்துநானடியனேன்
ஆவிபோமவேளையா யறிவுதந்துதவுவாம்
மூவர்நீமுதல்வநீ முற்றுநீமற்றுநீ
பாவநீதருமநீ பகைவிநோடுறவுநீ-

இ-ள் ஏவிசூர்வாளியா லெய்துநாடியனேன். எ-து.

வாராய் ராகவேஸ்வரா மணிமகரமோடிரவிதேஜேமயவீரராகவா சரணம அவதாரபுருஷோத்தமா அகிலதவசேசபணமணாளா தசரதநந்தனை கவுசல்கற்பபாதிவாசா அயோத்தியாபுரி மத்தியவிஸ்வாமித்திரயெக்கியப்பிரியா பகைசங்கார அகலிகைமோட்சப்பிரதாயாதிரியமபகா அர்த்தநாரீச சீதாசமேதாரகுராமாசரணம சரணமவாராய் சுவாமிதேவரீர் மகாராஜப்புத்திரனகப் பிறந்தும கர்த்தப்போக்கியனைப் எழுந்தருளி யிருக்கிறீர் உம்முடைய வீரபராக்கிரமத்தினலே பாரசோதண்டமான வில்லைவளைத்து ராமசகாயமென்னும அஸ்திரத்தை என்மேபரிதொடுத்தருளினீர் அந்த அஸ்திரமானது என்மார்பிலேபட்டு.

ஆவிபோமவேளையா யறிவுதந்துதவுவாய் மூவர்நீமுதல்வநீ,

முற்றுநீமற்றுநீ-எ-து,

என்னுடைய தேகத்திலே யிருந்து ஆவியென்னும் பிராணன்-பிரிந்துபோகிற சமயத்திலே பகுத்தறிவான விவேகத்தைத் தந்தருள்வா யந்தப்போதக்கியானத்தினலே பார்க்கிறபோ தேவரீருடையபிரப்பெப்படியெனில் மூலமென்றுசொல்லப்பட்ட சிருஷ்டி திதிசங்காரமென்னும் மூன்றுதொழிலையும நடத்தப்பட்டவரும முதல்வனென்னுஞ் சர்வகாரணததுக்கும் முதன்மையாகி யிருக்கப்பட்ட பரப்பிரம்மவெளியாயிருக்குஞ் சிவப்பிரகாசமான கர்த்தனனவருந் தேவரீர்தானே வாராய்சுவாமி மேலும அந்தப் பிரமத்தினுடைய சர்பையிலே யிருந்து மாவையும பிரமமுமகலந்து விந்துதோன்றி விந்துவிலே நாதந்தோன்றி நாதத்திலே சத்தந்தோன்றி சத்தத்திலே யிருந்துசா

த்மீகம இராசதம தாமதம ஆகியமுக்குணத்திலே தாமதகுணத்தை ருத்திரரூபமாக்கி இந்தமூமமூர்த்தி ரூபமாக்கி சாத்மீககுணத்தைவிஷ்ணுரூபமாக்கி இந்த மும்மூர்த்தி வடிவினாலே சிருஷ்டிக்கிறதுஞ் சங்கரிக்கிறதுமாகி இந்த மூன்றுவிதத்தினாலே சராசரப்பிறபஞ்சமவர்த்தனையாகிறதும இப்படித்தேவரீர் படைக்கப்பட்ட லோகத்திலே விருத்தியென்றும க்ஷயமென்றுந்தோஷமென்றும ஆகிறதுமல்லாமல்.

பாவநீ தருமநீ பகையினேடுறவுநீ-எ-து.

சகலமாகிய இருவினை வர்க்கங்கள் பாவமாகிறதும் புண்ணியமாகிறதும பகையென்றுஞ் சத்துருவாகிறதும மித்துருவாகிறதும ஆகியசகலமுந் தேவரீரேயாகும நிறஞ்சன வஸ்துவாகியசுவாமி-எ-று.

கவி, புரமெலாமெரிசெய்தோன் முதலினோர்பெறுவிலா
வரமெலாமுருவியென் வகையிலாவலிமைசா
லுரமெலாமுருவியென் னுயிரையேதாகநின்
சரமெலாற்பிறிதிவே றுவதரோதருமமே,

இ-ள், புரமெலாமெரிசெய்தோன்முதலினோர்பெறிவிலது-எ-று,

வாராய் ராகவேஸ்வரா காசிகோசலை அயோத்தியாபுரிவாசாபட்டாபிஷேக விக்கின ஆரண்யசெபன குசன்சகாயா பரத்துவாச பிரியாசித்திர கூடாநிவாசா சீதாபதிக்குராமாசரணம் சரணம வாராய்சுவாமி,

முற்காலத்திலே தாரகனவிந்துருமாலி சயந்துவசனென்று சொல்லப்பட்ட மூன்றுபேரும வயிராக்கிய தடாகுசெய்து வரப்பிரசாமங்கள்பெற்றுமகா சிவபத்தர்களாகி அநேகசிவலிங்கந்தைப் பூசைசெய்துக்கொண்டு ஆகாய பாதாளலோகமென்னும மூனறுலோகத்திலேயும அந்தமூன்றுபேருமிருந்து இராச்சியபாரஞ்செய்கிற கொடுமையினாலே தேவாதிகளுக்குமென்மேலும கஷ்டமுண்டாயின வாகையால் அவர்கள் செய்கிற கொடூரத்தைப்பரமேஸ்வரரானவர்தன்னுடைய திருவாயைத்திறந்து புன்னகைசெய்து அவர்களுடைய மூன்று கோட்டையுடன் மூன்றுபேரையு மெரித்துச் சாமபலாகித்தூளிதஞ்செய்தருளினார் அப்படிப்பட்ட சிவன்முதலிய விஷ்ணும பிரமாவும திக்குப்பாலகரும தேவாதிகளும ஆகிய இவர்களொருவரும என்னொடே அபிமுகமாகநின்று போர்செய்யமாட்டார்கள் வாராய்ராகவேஸ்வரா,

வரமெலாமுருவியென் வகையிலாவலிமைசொல-எ-து,

ஆதியிலே சும்மதமாகச் சுமந்திரியாகப் பதினாயிரமயானையினுடையபலன்பெறறிருந்துபிற்பாடு பஞ்சபூதத்தினாலேநான்கு

பூதத்தினுடைய பெலனும் எதிர்த்தவனுடைய பெலனிற் பாதியுமா கஇதுவரைக்கும் யான்பெற்றிருந்தவரமும் வரப் பிரசாதங்களையும் ஊடுருவி வலிமையென்னும் வல்லபத்தைப் பொருந்தியிருக்கப்பட்டதாகிய.

உரமெலாமுருவியென் னுயிரையேநுகரகின்-எ-து.

உரமென்று சொல்லப்பட்ட அடியேனுடைய மார்பும்ஊடுருவி சத்த நாடிகளையும் தசவாய்வையும்பருகி அடியேனுடையபிராணவாயுவையும் பருகின்றபடியினலே.

சரமலாற்பிரிதுவே றுளதரோ தருமமே-எ-து.

இவ்வளவு தாருட்டியத்துடனே அடியேனுடைய பிராணனைப் பருகத்தக்கதாகத் தேவரீருடைய ராமபாணத்தினலே முடியல்லாமல் மற்றொருவராயுதத்தினலே முடியாது வாராய்சுவாமி வாராய்ராமச்சந்திரா.

அவதாரிகை என்றிப்படி சொல்லி ஸ்ரீராமரைவணங்கிச்சுக்ரீபனையழைத்து வாலியானவன் சொல்லுகிருன்.

கவி. மகவியல்குரங்குச்செய்கை மதிகொடுமாற்றிவள்ள
ஹுதவியையுன்னியாவி யுற்றறிந்துணரகிற்றி
பதவியையெவர்க்கும்நல்கும் புண்ணவன்பணித்தயாவுஞ்
சிதைவிநோய்தீரச்செய்து தீர்தரும்பிறவிதீராய்

(இ-ள்.) மகவியில்குரங்கச்செய்கை மதிகொடுமாற்றிவள்ளல்-எ-து.

வாராய்தம்பி சுக்ரீவா இனிமேல் சுவாமியானவர் உனக்கு முடிசூட்டி ராச்சியபாரங்கொடுப்பார் ஆனபடியினலேஆசாரபீடத்திலேயிருந்துவானர சயின்யங்கள் சூழத்தக்கதாக ராசபோகத்தை அனுபவிக்கும்போது ராஜமதமென்னுங் கர்வம்யாவருக்கும்வரும், வாராய்தம்பி பஷிசபாக்கியம்தனதாய்சம்பத்துகளைக்கண்டால் யாவருக்கும் ஆங்காரமும்மகிழ்ச்சியும்வரும் அப்படிஉனக்குவந்தவிடத்தில்மதியென்னும் புத்தியினலே கீழ்ப்படுத்தி அறிவினலே ஆண்மை யானதைத்தள்ளி வள்ளலாகிய சிரேஷ்டம் பொருந்தியஇந்தஸ்ரீராமமூர்த்தியானவர் சொல்லப்பட்ட.

உதவியையுன்னியாவி யறிந்தறுணரகிற்றி-எ-து.

ராசகாலமும் மற்கடவிருத்தியம்ஆகிய இந்தஇரண்டையுந் தள்ளிராகவேசுவார்செய்யப்பட்ட வுதவியை எந்நேரமும்விசாரித்து உன்னுடைய பிராணனுக்குப் பிராணநாயகனென்று விசாரித்தரியவேணும் வாராய் சுக்ரீபா அதுவுமல்லாமல்.

பதவியையெவர்க்குநல்கும் பண்ணவன்பணித்தயாவும்-எ-து.

ஸ்ரீராமரானவர் இன்னமெப்படிக் கொத்தவரென்றால் சைவாகமத்திலும் வைஷ்ணவாகமத்திலும் மூலமந்திரமாயிருக்கப்பட்டாரென்றும்சொல்லுகிற பீஜாட்சரசொரூபரானவர் அந்தமந்திரத்தைதோத்திரஞ்செய்து வணங்கப்பட்ட பக்தஜனங்களுக்குஅவரவர்பிரயாசைப்பட்டுவணங்கின பலன்களுக்குத்தக்கதாகப் பலாபலன்கொடுக்கப்பட்டகர்த்தனாகிய இந்தச் சுவாமியானவர் பணிந்துசொல்லப்பட்ட பணிவிடைகளெல்லாம்.

சிதைவிரோய்டீரச்செய்து தீர்த்தரும் பிறவிதீர்வாம்-எ-து.

சிதைபுகுற்றமில்லாதபடிக்குக் குற்றேவல்செய்துகொண்டுஅவருக்கு அடிமைப்பட்டிருப்பாய்அப்படிசெய்தால் ஆசாபாசத்தினாலே வரப்பட்ட ராசத்துவேஷாதிகளினாலே வரும் இருவினைப்பயனால் புண்ணியபாவத்திற் கீடாயெடுக்கப்பட்ட தீராதஜனனமரணத்தை தீர்த்துநாலாம் பதத்தைகொடுப்பார் வாராய்சுக்ரீபா நீ இராமத்தியானம்பண்ணுவையேயானால் இம்மையிலே செல்வமும் மறுமையிலே மோட்சமும் உண்டாகும் வாராய்சுக்ரீபாவென்று சொல்லிபின்புராகவேசுரரைவணங்கிச் சொல்லுகிறான்-எ-று.

கவி. ஓவியர்க்கருதாநாயே னுளதொன்றுபெறுவதுன்பால்
பூவியல்நறவமாந்திப் புந்திவேறுற்றபோது
தீவினையியற்றிலேயா யெம்பிமேற்சிறியன்மேலும்
ஏவியபகழியொன்று மெய்திடாவண்ணமன்றே.

(இ-ள்.) ஓவியர்க்கருதாய்நாயேனுளவொன்றுபெறுவதுன்பால்-எ-து.

ஓவியமென்னும் சித்திரத்தாலே எழுதுகிறவர்களுக்கு அரிதானரூபலாவண்ணியம் பொருந்தியிருக்கப்பட்ட சவுந்திரிய லட்சணம் பொருந்தியிருக்கின்ற கர்த்தனே தேவரீரிடத்திலே அபேட்சையாகி ஒருவரங்கேட்கிறேன் வாராய் சுவாமி.

பூவியில்நறவமாந்திப் புந்திவேறுற்றபோது-எ-து.

தேவரீர்சுக்ரீபன் பேரிலேகருணாகடாட்சம்வைத்து இராச்சியபாரங்கொடுத்தபோது கிஷ்கிந்தையிலே அவன்ராச்சியபாரஞ்செய்கிறநாளில் சரசவிளையாட்டான் சல்லாபத்தினால்பூவென்னும்பலபல புஷ்பங்களினுடைய நறவமென்னும் மதுக்களைப் பொசித்து அந்தக்கரணங்களின் கலைபிசகி ஆனந்தமயமாகி அந்தலாகிரியினாலே பத்திபேதம்பிறந்து கிருத்தியா கிருத்தியங்கள்தெரியாமல்மந்தபுத்தியுடையவனாகி.

தீவினையியற்றிலேயா யெம்பிமேற்சிறிபன்மேலும்-எ-து.

தீவினையென்னும் புத்திமோசத்தினாலே சிறிது குற்றங் குறைகள் அபசாரங்கள் செய்தார்களானாலும் என்தம்பியானசுக்ரீபன்பேரிலும்என்குமாரனான அங்கதன்பேரிலும் கோபமின்றி அவாகள்புத்தியில்லாமல் ஏதேதுகுற்றங்கள் செய்தபோதிலும்

ஏவியபகழியொன்று மெய்திடாவண்ணமன்றே-எ-து.

அவர்களிரண்டு பேரிலும் என்பேரிலேவிய இந்த ராமபாணத்தைத் தொடுக்கவேண்டியதில்லை தொடுத்தால் அவர்கள்தாங்கமாட்டார்கள்வாராய் சுவாமி இந்தவரமொன்று தரவேணும்சுவாமி.

அவதாரிகை இப்படி வாலியானவன்கேட்டவரத்தைக் கொடுத்தருளியபின்பு மறுபடியும் வாலிசொல்லுகிறான்.

கவி. மற்றிலையெனினுமையா வரக்கனைவாலிற்பற்றிக்
கொற்றவாகிணக்கடர்ந்து குரக்கியலடிமைசெய்யப்
பெற்றிலேகடந்துசொல்லிற் பயனிலைபிழைத்ததேனு
முற்றதுசெய்யவேண்டி லுரியரிலனுமனுள்ளான்.

(இ-ள்.) மற்றிலையெனினுமையா வரக்கனைவாலிற்பற்றி-எ-து.

தேவரீருடைய திருப்புயத்திலேதாங்கியிருக்கிற இராமபாண பட்டு இறந்துபோகிறேனென்று சற்றாகிலும் வியாகூலமில்லை ஆனால்ஒருசங்கடமுண்டு அதென்னவென்றால் அரக்கரென்னும்இராட்சருக்கெல்லாம் கர்த்தனாகும்படி வயிராக்கியத்தினால் ஒன்பது சிரசையும்பதினெட்டுக் கரங்களையும் அறுத்து அக்கினியிலே ஒழித்து பிரதேவரிடத்தில் அநேகவரப்பிரசாதம்பெற்றுத் தென்சமுத்திரத்தின் மத்தியிலேஎழுநூறுயோசனை விஸ்தாரத்துடன் இலங்கா தீரமுண்டு அந்தராச்சியத்திலே யிருந்து சாலன் குலிசன் காலங்கன் மாலன் வருத்தன் வாயுகாலன் வச்சிரமுஷ்டி ஏச்சகோபன் உன்மத்தன் மதமத்தன் சண்டன்பிரசண்டன் பிரதங்கன் பிரகஸ்தன் சூர்யகேதுசந்திரகேது பூமாட்சன் நாராட்சசன் மகராட்சசன் காலகேசன் பாசக்கண்ணன்வேள்வியின்பகைவன் சூரியன்பகை வச்சிரகேதுதுட்டன் பிசாசன் குருநேத்திரன் கும்பன் நிகும்பன் தேவாந்தகன் நாராந்தகன் திரிசிரன் இப்படிசொல்லப்பட்ட படைத்தலைவரும்ஆயிரம்வெள்ளம் படையோடும் மந்திரிமார் பிரதானிகள் ஆமாத்தியரோடுங்கூடியிருந்து திரிலோகநாயகனென்று பிரதாபங் கொண்டு மூன்றுலோகத்தையும் அடக்கிஅநேக பிரஸ்தாபங்களை நடத்தப்பட்ட இராவணன்தேவரீருடைய தர்மபத்தினியான சீதாலட்சுமியைத் திருடிக்கொ

ண்டுபோய் சிறைவைத்திருக்கிற படியினுலே அந்தராவணனுனவனே என்வாலினுலே பின்கட்டாகக்கட்டியிருக்கி,

கொற்றவாளினைக்கடந்து குரக்கியலடிமைசெய்ய-எ-து

கொற்றவெற்றிப் பாடாகிய சவுரிய பராக்கிரமம் பொருந்திய ராகவேஸ்வரா தேவரீருடைய முன்பாகப் பாதகாணிக்கையாகவைத்து அடியேனுடைய வானரசைனியங்களும் வாய்புதைத்துக் கைகட்டிநினது பணிவிடை செய்யத்தக்கதாக.

பெற்றிலேகிடந்துசொல்லிற் பயனிலேபிழைத்ததேனும்-எ-று.

இந்தக்காரணத்தைச்செய்து பெறுமை பெறுகிறதற்கு அடியேன்பாக்கியம் பெறவில்லேயே யென்னும் ஒருசங்கடமேயல்லாமல் மற்றொருசங்கடமுமில்லே வாராய்சுவாமி இனிமேல் யான் குற்றுயிராய்க்கிடந்து சொன்னதினுலேஒருபிரயோசனமுமில்லே வாராய்ராகவேஸ்வரா.

உற்றதுசெய்யவேண்டி லுரியரிலனுமனுள்ளான்-எ-து.

இனிமேல்இப்படிப்பட்ட காரணமுடித்துத் தேவரீருக்குப் பிரீதிவருவிக்கச்செய்யவேண்டுமானுல் வானராஜாக்களுக்குள் அனுமந்தனனவன் உனக்குச்சகலமுமுடித்துக்கொடுப்பான் வாராய்சுவாமி.

கவி. அனுமனென்பவனேவாழி யையநின்செய்யவண்கைத்
தனுவெனநினைத்துமற்றைத் தம்பியேதும்பிசால
வினியொருஅணேமற்றில்லே யினிபவரில்லேயென்று
வனிதையைநாடிக்கொள்வீர் மலேயினும்வளர்தந்தோளிர்.

(இ-ள்.) அனுமனென்பவனேயாழி யையநினசெய்யவண்கைத்-எ-து

வாராய்ராமபத்திரா அனுமனென்றுசொல்லப்பட்டவாய்வுபுத்ரனை மாருதியானவன் எப்பேர்பட்டவனென்றுல் திருப்பாற்கடலினும்வைகுந்தமென்னும்நகரத்தினும் அலங்காரபுருஷனுகக் கொண்டுபஞ்சாயுதபாணியாய் அனந்தசயன யோகநித்திரை யுடையவராய் ஜலரூபராய்ஜீவேசராய் சர்வயோக்கியராய் சர்வபிராணிகளையும்அவரவர்க்குவேண்டிய பட்சணங்களைக் கொடுத்து இரட்சிக்கப்பட்ட இரட்சபோததுரந்தரநீதராய் இஷ்டானுவந்தராய் அஷ்டாட்சரமந்திரரூபராய் இட்சகர்த்தாவென்று பேருடைபவராய் இருக்கப்பட்ட ஓய்ராமதேவா அவன்தேவரீருடையதிருக்கரத்திலேதாங்கியிருக்கப்பட்ட.

தனுவெனநினைத்துமற்றைத் தம்பியேநும்பிசால-எ-து.

உம்முடைய பாரகோதண்டமான வில்லென்றே கருதவேணும் வாராய்சுவாமி என்தம்பியான சுக்ரீபனுனவனே உம்முடைய தம்பியாகிப இளையசுவாமியென்றேநினைக்கவேணும்வாராய்ராகவேஸ்வரா

இனியொருதுணைமற்றில்லை யினியவரில்லையென்று எ-து.

இவர்களிரண்டுபேரும் தேவரீருக்குச் சகாயமாகி வந்தபோதே இராவண சங்காரஞ்செய்கிற தற்கும் மகாலட்சுமியைச் சிறைமீட்டு கிறதற்கும் வேறேயொருசகாயம் வேண்டாம் வாராய் சுவாமியானப டியினலே சுக்ரீபன்முதலாகிய இருபத்தொரு ராஜாக்களையும் அனு மான்முதலான நாற்பத்திரண்டு மந்திரிமாரையும் எழுபதுவெள்ளம் வானரசைனியங்களையும் கைவசமாக்கி.

வனிதையைநாடிக்கொள்வீர் மலையினும்வளர்ந்ததோளிர்-எ-து

இனிமேல் காலதாமசஞ்செய்யாமல் வனிதையென்றுசொல்லப் பட்டதேவஸ்திரீகள் காந்தர்வஸதிரீகள் நாககன்னிகள் வித்தியாதர ஸ்திரீகள்கிம்புருஸ்திரீகள்முதலான மானிடஸ்திரீகளாகிய இவர்களு க்கெல்லாம் மிகுந்தசிரோரத்தின சிந்தாமணிபோல்சிலாக்கியம்பொ ருந்திய தேவரீருடைய தருமதாரமானமகாலட்சுமியைத்தேடிக்கொ ள்ளவேணும் வாராய்ராகவேஸ்வரா பர்வதம்போன்றபுயங்கள்பொ ருந்தினவரான லோகநாயகா சரணம் வாராய்சுவாமி-எ-று.

அவதாரிகை.

வாலியானவன் இப்படிச்சொல்லிச் சுக்ரீபனையழைத்துஅங்கத க்கூட்டிக்கொண்டுவரச்சொல்ல அப்படியேசுக்ரீபன் சென்று அ ங்கதனையழைத்துவர அங்கதன்மேல் வாலிமேல்விழுந்துதுக்சித்துச் சொல்லுகிறுன்.

கவி. எந்தையேயெந்தையேநீ யெழுதிரைவளர்காலத்தில்
சிந்தையாற்செய்கையாலும் தீவினைசெய்கிலாதாய்
நொந்தனையாதுதானிற்க நின்முகம்நோக்கிக்கூற்றன்
வந்தனாயன்றோவஞ்சா தாரவள்வலியைத்தீர்ப்பார்

(இ-ள்.) எந்தையேயெந்தையேநீ யெழுதிரைவளர்காலத்தில்.

வாராய்தந்தையே அடியேனை அருமையோடுங் கூடிப் பயின்று வளர்த்ததாதையே எழுதிரைஆரம்பத்துடனே இலட்சம்யோசனைவி ஸ்தாரம்பொருந்தியசமுத்திரஞ் சூழ்ந்திருக்கிறநூறுயிரம்யோசனை விஸ்தாரமாயிருக்கம்பட்ட சம்புதீவான இந்தப்பூமியிலே தேவரீர்உ ற்பவித்த நாள்முதல் இதுவரையும்.

சிந்தையாற்செய்கையாலுந் தீவினைசெய்கிலதாய்-எ-து.

உம்முடைய சிந்தையென்னும் மனதிலேயும் தர்மத்தினலேயும் வாக்கினலேயும் ஒருகுற்றங் குறைபாடுகள் யாதாமொருவருக்குச் செய்தவரல்லவே வாராய் தாதையே இதைவிசாரித்துப் பார்க்கிற போது.

நொந்தனையது தாகிற்க நின்முகம்நோக்கிக்கூற்றன்-எ-து.

இப்படி சத்தியதர்மத்தோடும் பயபக்தியோடும் நிர்மலமானத தோடுங்கூடியிருக்கிற தேவரீருடையசமீபத்திலேகூற்றனென்றுசொல்லப்பட்டவன் சையமாநகரத்திலே இயப்புரியென்னும் பிரதேசத்திலே மகிஷவாகனமேறி மகிஷக்கொடிபிடித்து காலபாசம்காலசூலம்தெண்டாயுதம் முதலியவைகளைக் கரத்திலேதாங்கி கற்கடத்தொம்பிரியும் அஸதிரமாலையுந் தரித்து காலமிருத்தியு வென்னும் மந்திரியோடுங்கூடி நவரத்தினசிங்காசனத்திலேயிருந்து சிவந்தகூந்தலும்இருண்டமேனியும் வளைந்ததந்தத்தோடுங்கூடி யிருபத்தொரு நகர்ராசாக்கள்சூழத் திரிலோகத்திலேயும் வாழப்பட்ட பர்வசகல ஜனங்களையும் அவரவர் செய்யப்பட்ட பாவபுண்ணியத்தை விசாரித்துப்புண்ணியதேகத்தைச் சொர்க்கத்துக்கு அனுப்பிப் பாபிஷ்டரானபேர்களை அவரவர்செய்த கர்னகடூரம்போல விசாரணைசெய்து ரவுரவம் மகாரவுரவம் கோரம்-அதிகோரம்-உக்கிரரவுரவம்-கிருமிரவுரவம்-மலரவுரவம்-மூத்திரவுரவம்-புழுத்துரும்பை - எரிவட்டம்-மணல்வட்டம்-சுழல்வட்டம்-எரிபாலவட்டம்-சுழுமுனை முதலான நரகங்களிலேபோட்டுத் தெண்டனை செய்யப்பட்ட எமதர்மராஜன் தர்மிகளுக்கு தர்மராசனாக உத்தம்வடிவுவாகியும் அதர்மிகளுக்குமுன்சொல்லப்பட்ட எமரூபமாகியுமிருக்கின்றவர் இன்றைக்கு.

வந்ததோயன்றோவஞ்சாதாரவன்வலியைத்தீர்ப்பார்-எ-து

உத்தம தர்மத்தோடும் ஈஸ்வரன் பத்தியோடும் தருமநீதத்தோடும்இருக்கப்பட்ட தேவரீருடைய பிராணனைப் பருகிக்கொண்டபோனபொழுதே இயமனை வெல்லுகிறபேர்கள் ஒருவருமில்லையே வாராய் தந்தையே என்னசெய்வேன் வாராய் தந்தையே-எ-று.

கவி. பஞ்சின்மெல்லடியாள்பாகன் பதகமலங்களென்று
யஞ்சலித்தேத்துஞ்செங்கை பாற்கடல்கடைந்துமுன்னாள்
எஞ்சலிரமரருண்ண வின்னமுந்தீர்ந்தநோயா
துஞ்சினைவள்ளியோர்க ணின்னிலார்சொல்லற்பாலார்

(இ-ள்.) பஞ்சினமெல்லடியாள்பாகன் பதகமலங்களென்றும்-எ-து.

பஞ்சென்று சொல்லப்பட்ட செம்பஞ்சுபோலே மிருதுபொருந்திய திருப்பாதங்களுடைய பார்வதாதேவியம்மனை இடதுபாகத்திலே வைத்திருக்கும் பரமசிவனுடைய இரண்டுபாதாரவிந்தங்களையும் அல்லும்பகலும் அறுபதுநாழிகையும் கனவிலும் நினைவிலும் மறவாமற்கொண்டு.

அஞ்சலித்தேத்துங்கையாற் கடல்கடைந்தமுதுமுன்னுள்-எ-து.

அஞ்சலிசெய்து இரண்டுகரங்களையும் சிரசின்பேரிற்கூப்பிமன மானதை ஒருவழிப்படுத்தி இரண்டுகண்களிலும் ஆனந்தபாஷ்பம்மு மூகத்தக்கதாகச் சிவசங்கரமாகதேவாவென்றுவணங்கி மகாசிவபத் தனுயிருக்கிறவர்களுக்குக் கர்த்தனுயிருக்கிற விஷ்ணுவவுக்குப்பத்தனு யிருக்கிற.

எஞ்சவிலமரருண்ண வின்னமுந்தீர்ந்தநீயோ-எ-து.

தேவாதிகளுடைய திரைநரை தீர்க்கதாகவும் அவர்கள்பூரண வயதை அனுபவிக்கத் தக்கதாகவும் யாதொரு சஞ்சலமுமில்லாமல் வாழும்படியாகவும் தேவாமிர்தத்தை எடுத்துக் கொடுத்து பெருமை பெற்றதாதையே.

துஞ்சினைவள்ளியோர்க ளின்னலார்பாலார்-எ-து.

இப்படிச்சொல்லுகின்றபலபல சற்கருமங்களைச் செய்யப்பட்ட தேவரீருடைய அவகேட்டினுலே இறந்துபோகும்படி நேரிட்டதோ வாரும் தாதையே தேவரீரைப்போல் சாமார்த்தியத்தில் மிகுந்தவ ரொருவருமில்லையே வாராய்தாதையே என்னசெய்வேன் வாராய்த ந்தையே.

அவதாரிகை.

என்று இப்படி துதிக்கிற அங்கதனைப்பார்த்துவியாகூலப்படவே ாம் மகனேயென்று வாலிசொல்லுகிருன்.

கவி. பாலகாதவிர்த்தியென்சொல் பற்றுதிபார்க்கிற்றன்னின்
மேலொருபொருளுமில்லை மெய்ப்பொருள்வில்லைதாங்கிக்
ல்தரைதோயநின்றுன் காட்சிக்குமெளிபனுகி
ல்தரும்பிறவிநோயக்கு மந்திவன்வணங்குமைந்தா.

(இ- பாலகாதவிர்த்தியென்சொல் பற்றுதிபார்க்கிற்றன்னன்

வாராய்குமாரா யானிறந்து போகிறேனென்று வியா கூலப்பட வேண்டாம் வாராய் அங்கதா யான்சொல்லப்பட்ட வார்த்தை யான தை நீ உறுதியாகக்கேட்க வாராய் மகனே இதோ ராகவேஸ்வரமூர் த்தியினுடைய வரலாற்றையும் காரண காரியங்களையும் உற்றுவிசாரி த்து அந்தக்காரணங்களிலே யோசித்தால்.

மேலொருபொருளுமில்லை மெய்ப்பொருள்வில்லைத்தாங்கி-எ-து.

லோககர்த்தாவான இந்தச் சுவாமியானவருக்கு மேலாகஒருகா ரணகாரியமும் ஒரு அதிசயவிசேஷமும் இவருக்கு மேலானஒருகர்த் தத்துவமும் இல்லை இல்லை இல்லை வாராய்குமாரா இவர்பிர்ம்ம விஷ் ணு ருத்திரன்-மயேசுரன் சதாசிவன் பராசத்தியென்று சொல்லப்ப ட்ட ஆறுதெய்வீகங்களுக்கும் பற்றுமுண்டாகிய இரதெய்வீகங்க

ளுக்கும்மேலாகப் பிரகாசிக்கிற பரமப்பொருளா யிருக்கப்பட்டவிரு மலவஸ்து வாகும்வாராய் அங்கதா.

காலதரைதோய நின்ருன்காட்சிக்கு மெளியனுகி-எ-து.

இதோகாலனென்னும் இரண்டுபாதங்களும் பூமியிலே படத்தக் கதாகக் கேவலமான ஒருமனிதனைப்போலநின்ருர் இந்தராகவேஸ்வ ரமூர்த்தியானவரைப் பிரத்தியட்சமாக காணவேணுமானல்மகாதுர் ப்பலம்பெரியோர்கள் வெகுகாலம் தபசுசெய்தாலும் கிடைக்காது வாராய்குமாரா இப்போது காண்கிறதற்கு மகாவெளிதாக நிற்கப்ப ட்டஇந்தசுவாமியானவர்.

மால்தரும்பிறவிநோய்க்கு மந்திவன்வணங்குமைந்தா-எ-து.

மாலென்ற ஆசாபாசமென்னும் மாய்கையினல் பலபலபதார்த் தங்களிலும் தனம் தானிய சம்பத்துகளிலும் பெண்டுபிள்ளை பண்டு பதார்த்தங்கள்பேரிலும்ஆசைப்பட்டு எந்நேரமும் உழன்றுக்கொண் டிருந்து அந்திவேளையிலும்பலபலவிதத்திலே மனதை விடுவார்களா னுல் அதனலேஜென்மம்வரும் அப்படியில்லாமல் பிராணன்போகிற சமயத்திலே இந்தப்பகவானுடைய திருநாமமாகிய ராமநாமத்தைசெ பித்துத்துதிப்பார்களானல் பிறப்பு இறப்பில்லாதராயுச்சியபதத்தை க் கொடுக்கப்பட்ட அருமருந்தாகும் வாராய் அங்கதா இவரை ங்கப்பட்டமார்க்கம் எப்படி யென்ருல் சித்தாந்த மென்றும் வேதாந் தமென்றும் சொல்லப்பட்ட இரண்டுமார்க்கமுண்டு அதில்பிராம ர்களும் சற்சனர்களும்செய்யப்பட்ட கிரிகைபாவது அருணஉ லே யெழுந்து அற்புதமானதெய்வங்களையும் அற்புதமான வ ளையும் தியானித்து நிருதிமூலையிலேசென்று சவுசவிதிமுடி தந்த தவிதிஸ்நானவிதி அனுஷ்டானவிதி பூசைவிதி போசனவிதியாகியஆ றுவித தர்மங்களையும்முடிக்கவேணும் பஞ்சையெக்கியங்கள்செய்து ஜெபம்பண்ணி மூன்றுகாலமும் சாயைத்திபை ரூபலட்சண மறிந்து ஜெபித்து ஆதித்தனுக்கு அர்க்யாதிபதி பூசைகொடுத்து இருபத்து நாலுகர்ம முடித்துப் புராண சாஸ்திரங்களை வாசித்து அன்போடே தேவார்ச்சனை செய்து ஓதல் ஓதுவித்தல் ஏற்றல் இடுதல் வேட்டல் வேட்பித்தலாகியஆறுகர்மத்தையுஞ்செய்து பாத்திராபாத்திரபாத்தி ரங்களைபறிந்துதர்மஞ்செய்துசத்திபத்துடனும் யதார்த்தத்துடனும் நித்தியகர்மமுஞ்செய்யவேண்டும்மேலும்பிராமணனேலோகத்திற்கா ணப்பட்டதெய்வமென்றெண்ணி இப்படித்தவிர்த்தியுடனேகூடியிருந் தால்அவன்பிராமணயோனியிலேஜன்மித்துசகலவித்தியாவல்லவனு

கித் தேஜசுபொருந்தி நீர்க்காயுசுடனும் அஷடபாக்கியத்துடனும் பொருந்திவாழ்வான் இந்த கர்மவிக்கினம் ஒருவேளைசெய்ததானுல். அவன் நீசயோனியிலேபிறந்து கஷ்டத்தைபடைவன் இந்தபிராமணவிர்த்தியினுலாகிலும் ஞானபோகத்தினுலேயாகிலும்இராமத்தியானம்செய்தால் பிரவிசாகரத்தைபறுக்கலாம் ஆகையினுலெ நீஇந்தசுவாமியானவரை வணங்கிப்பணிவிடைசெய்யவேணும் வாராய் அங்கதா.

அவதாரிகை.

வாலியானவன் இப்படிச்சொல்லி அங்கதனுடைய வியாகூலத்தைத்தீர்த்துச் சுவாமியோடுசொல்லுகிருன்.

ந வி.

இடைக்கலமென வேவியதோர்பணி
கிடைக்கிலப்பொழு தேசெயிங்கேண்மையோன்
படைக்கலக்கைப் பரம்பொருளேயுன்றன்
அடைக்கலம்மடி யோன்பெற்றவங்கதன்.

இதன்பொருள்.

இடைக்கலம்மென மேவியதோர்பணி-எ-து.

வாராய்ராகவேஸ்வரா இனிமேல் இராவணுதி ராட்சதருடனே போர்செய்கிற எழுபதுவெள்ளம் வானரப்படைகளோடே ஒவ்வொருபணிவிடை சொல்லுகிறபோது.

கிடைக்கிலப்பொழூதேசெயுங்கேண்மையோன்-எ-து.

அதற்கிடையிலே இந்த அங்கதனேடே ஒவ்வொருபணிவிடை [illegible]ர்ஞல் அந்தட்சணமே முடித்துக்கொடுப்பான் வாராய்ராகவேஸ்வரா.

படைக்கலக்கைப் பரம்பொருளேயுன்றன்-எ-து.

[illegible]டையென்னும் பஞ்சாயுதங்களைத்தாங்கியிருக்கிறவரானசுவா[illegible]ரம்பரூபனுகிய ராகவேஸ்வரா.

அடைக்கலம்மடியேன்பெற்றவங்கதன்-எ-து.

இ[illegible] என்குமாரனுகிய அங்கதன் அடைக்கலம் ஆதலால்நீரே காக்கவேணும் இந்நாள்வரைக்கும் என்குமாரன் இனிமேல்தேவரீருடையகுமாரனுகும் வாராய் சுவாமி-எ-று.

அவதாரிகை.

வாலியானவன் இப்படிஅடைக்கலங்கொடுத்தளவில் ஸ்ரீராமர் அங்கதனுக் கபயஸ்தங்கொடுத்தருளிய பின்பு வாலியோடுசொல்லுகிருர்.

க வி.

பெரியதோர்பிழைகள்செய்தேன் பெரும்படைவாலிகேளாய்
அரியதோர்தவத்தினுலே யாருயிர்மீட்டுக்கொள்வேன்
உரியதாநாட்டையாண்டே யுடன்பிறந்தானுநீயும்
பரிவதோர்பலனுங்காணப் பாரினியாள்வாயின்றே.

இதன்பொருள்.

பெரியதோர்பிழைகள்செய்தேன்பெரும் படைவாலிகேளாய்-எ-து.

முன்ஜென்மாந்திரத்திலே பெரியகுற்றத்தைச்செய்த பெரி தாகியசேனைகளையும் ஆயுதங்களையுமுடைய வாலியே நீகேள்.

அரியதோர்தவத்தினாலே யாருயிர்மீட்டுக்கொள்வேன்-எ-து.

அரிதானபேர் தவத்தைச்செய்த படியினாலேசத்தியரூபமானஇராமபாணத்துக்கு உன்னுயிரைகொடுக்கேன் வாராய்வாலி ஆயினும் என்னுயிரைக்கொடுக்கிறேன்.

உரியதாநாட்டையாண்டோ யுடன்பிறந்தானுநீயும்-எ-து

உரியதான சந்தோஷத்துடனே உன்தம்பியானசுக்ரீபன்இளையராஜாவும் நீ இராஜாவாகவுமிருந்து.

பரிவதோர்பலனுங்காணப் பாரினையாள்வாயின்றே-எ-து

பரிந்து சகலமானபேர்களும் சந்தோஷிக்கத்தக்கதாக இராச்சியபாரஞ்செய்து சுகமே வாழ்ந்திருக்கவேணும் வாராய்வாலி-எ-று.

அவதாரிகை.

அதுகேட்டுவாலிசொல்லுகிறான்

கவி.

ஏவுக்குத்தப்பிங்கே யெழுந்தனனென்னலோடும்
கோவுக்குத்தப்பிலாதாய் கொடுங்கணைதப்பினல்லோய்
சாவுக்குத்தப்பினாலும் தன்வடுமாயாதன்றே
யாவுக்குத்தப்பினேனே யரிகுலத்தரசவின்றே.

இதன்பொருள்.

ஏவுக்குத்தப்பியிங்கே எழுந்தனனென்னலோடு-எ-து

வாராய் சுவாமி சரணம் சரணம் வாராய் ராகவேஸ்வ... ரீரும் அடியேன்பேரிலேதனுசாஸ்திரமுறைமையாக ஏவட்... மத்துக்குத்தப்பிப் பிழைத்துகொண்டாலும் குற்றமுண்டு... ய சுவாமி.

கோவுக்குத்தப்பிலாதாய் கொடுங்கணைதனங்குநல்லோய்-எ-து

கோவென்ற ராச்சியத்தை யாளுகிறதற்குக் குற்றமில்லாமல் அரசாட்சி செய்யப்பட்டவரான சுவாமி ராஜநீதி யெப்படியென்றால் க்ஷத்திரியராஜன் அஞ்சுவயதிலே அரியமொழியான அட்சர அப்பியாசஞ்செய்து இதிகாசபுராணங்களைக்கற்று மநுநூலறிந்துத் தர்மசாஸ்திரமறிந்து ஆயுத அப்பியாசம்பண்ணி குருபக்தியுடனும் ராசத்தன்மை வந்தபிறகு நவரத்தினசிங்காதனத்திலே மகுடமுடி மன்னவணங்கி யிருந்து மந்திரிபிரதானிகள் தளகர்த்தர் கருணீகர் துரைமக்கள் இடம்வலம்சூழ விவகாரிகள வந்தால் அவர் கரசரணமுகலட்சணங்களையும் வார்த்தைலட்சணங்களையும்பார்த்து மத்தியஸ்தனாலே தெளிந்து மந்திரியினுடைய யோசனையினுடைய யோசனையினாலும் சத்தியத்தைக்கண்டு மனுவிக்யானகர்மத்தை யோர்ந்துசத்திய தர்ம

த்துக்குப் பயந்துசிட்க்ஷை செய்பவேணும் ஆறுபோகத்திலேபொரு
போகம் திரைகொண்டு துஷ்டரைநிக்கிரகித்து சிஷ்டரை பரிபாலி
த்து பொறுமையுடனே சாமபேததான தண்டயென்னும் சதுர்வித
வுபாயத்துடனே சதுரங்கதளத்தைத் தொகைகொண்டு ஆயுவாகன
த்தை வகைக்கித் தனதானியம் சம்பாதித்துக்கொருவர் கலகம்ஆமா
த்தியன்மாருடைய விரோதம் தன்னுடைய அவிவேகத்தினலே வர
ப்பட்ட உபத்திரவமாகிய இந்தஆறுவகையும்நீக்கிப்பிரஜைகள் பே
ரிலேபெற்றமாதாவானவள்குழந்தைகளை இரட்சிக்கிறதுபோலபட்ச
ம்வைத்து பிரமானகர்மத்தைச்செய்துபிராமணபட்சத்துடனேசோ
டசதர்மங்களும் மென்மேலுஞ் செய்து குடிகளைமிகவும் பட்சத்துட
னேஇரட்சித்துத் தேவாயலங்களிலே பூசைநைவேத்தியங்கள்முறை
போல் செய்வித்து இரதஉற்சவம் திருவிழா முதலானதுகளும்நடப்
பித்துப் பரஸ்திரீ கமனம் பரதிரவிய மோகமில்லாமல் ஓதல் வேட்
டல் வேட்பித்தல் வாழ்வித்தல் கொடைஈதல்உலகாளுதல் ஆறுதொ
ழிலும்செய்து வஸ்திராபரண அலங்காரத்துடனே பரிமள புஷ்பங்
ங்களை யணிந்து தெய்வதரிசனம் நித்தியதானம் புராணகேள்வி உ
ல்லாச வாச சங்கீதகேள்வி பரதநாட்டியசந்தோஷத்துடனஷ்டருசி
வர்க்கங்களைப் பொசித்து அஷ்டசுகங்களை யனுபவித்துவாழ்கிறதா
கும் இதிலொன்றுந்தவறாமல் ராச்சியபரிபாலனம் பண்ணப்பட்ட சு
வாமி அடியேன் பிழைத்துக்கொண்டதேயானல் சகாயமான உமது
ராமபாணத்துக்கும் குறைவுண்டு வாராய்சுவாமி.

சாவுக்குத்தப்பினலுந் தன்வடுமாயாதன்றே-எ-து.

[illegible]டியேனும் இருக்கப்பயந்து உயிர்பெற்றிருப்பேனனல் அடி
[illegible]ரிலே இதுவரையிலும் ஒருவருடைய ஆயுதம்பட்டுமறுவுற்ற
[illegible] இனிதேவரீர் கிருபைவைத்து அடியேன்பிழைத்திருந்தால்
[illegible]திரம்பட்டவடுவு மறையுமோ வாராய்சுவாமி வாலியென்
[illegible]ன்என்றும் பேர்கேட்கலாமோ வாராய்சுவாமி,

[illegible]வுக்குத்தப்பினேனே யரிகுலத்தரசவின்றே-எ-து.

இந்த[illegible]றமொன்றும் வாராமல் தேவரீருடைய பாதாரவிந்தத்
திலேசேரத்தக்கதாக அனுக்கிரகந் தரவேணும் சூரியகுலமன்னவ
னசுவாமி சரணம்சரணம்வாராய் ராகவேஸ்வராஎன்று வாலியா
னவ[illegible]தாத்திரபாராயணஞ்செய்த மாத்திரத்தில்சுவாமியானவர் அ
வன்மே[illegible]வைத்திருந்த அஸ்திரத்திரத்தைப் பறித்தருளினர் அப்
போது[illegible]லியானவன் ராமராமாவென்கிற தியானத்துடனே ஸ்ரீவை
குந்தத்[illegible]யடைந்தான்.

ஆதலால் இந்த இராமாயண கவிகளையும் வசனங்களையும் பொ
ய் யென்று சொல்வானயின் வாலியைப்போலே வாதைப்பட்டு மா
ணமடைவா னென்பது பெரியோர்களுணராமற் போவார்கள் எ-று.

வாலிமோட்சம் மூலமும் உரையும்
முற்றுப்பெற்றது.

ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்.

விளம்பரம்.

உயர்வற மதிநல மருளப்பெற்ற

ஆழ்வாராசார்யர்கள்

அருளிச்செய்த

நித்யாநுஸந்தாநம்.

———]*[———

ஸ்ரீய:பதியாய், ஸ்ரீவைகுண்டநிகேதனனாய், சர்வவியாபகனாய், சர்வதாரகனாய், சர்வரக்ஷகனாய், சர்வபோக்தாவாய், சர்வக்ஞனாய், அவாப்த சமஸ்தகாமனாய், அகில புவன ஜன்ம ஸ்திதிலய காரணனாய் விளங்கும் ஸ்ரீமந் - நாராயணப்பெருமான் பெறற்கருள் தவப்பேறுடைய பாகவதகோடிகட் கநுக்ரகம் புரிவான் விரும்பி இப்பிரபஞ்சத்தின்கண் ஆங்காங்கு அர்ச்சாவதாரங்கொண்டு எழுந்தருளியிருக்கும் திவ்ய தேசங்கடோறுஞ்சென்று, எம்பெருமானது திருக்கல்யாணகுணங்களை முன்னிட்டு, பன்னிரு ஆழ்வாராசார்யர்களாலு
திருவாய்மலர்ந் தருளப்பட்ட திராவிடவேதமென்னும் திவ்ய ப்ரபந்தங்
இன்றியமையாச் சிறப்பினவாய் பாகவதசிரேஷ்டர்களால் பிரதிதின
கியபாராயணத்துக்குரிய திவ்ய திருப்பல்லாண்டு, திருப்பாவை, ே
வாய்மொழி, இராமாநுசநூற்றந்தாதி, முதலிய திருப்பாசுரங்களை
நித்யாநுஸந்தாநம் என்னுந் திருப்பெயரால் நல்ல கிளேஸ்கடிதத்
சுலபமாக வேண்டியவர்கட்கு ரப் கடிதத்திலும், பிழையில்ல
ஸ்மால்பைகா என்னும் உன்னதமான எழுத்தினால் இரும்பா
தில் அச்சிட்டுள்ளோம். இதுகாறும் எவரும் இப்படி பதிப்பித் டையாது.

தென்கலை ரப்புகடிதம்	0	6	0
மேற்படி கிளேஸ்கடிதம்	0	8	0
வடகலை ரப்புகடிதம்	0	4	0
மேற்படி கிளேஸ்கடிதம்	0	6	0

வேண்டுவோர் கீழ்க்கண்ட எம்மிடத்திற் பெற்றுக்கொள்ளல

இங்ஙனம்:

அ. இரங்கசாமிமுதலியார் அண்டுசன்ஸ்,

பூமகள்விலாசஅச்சுக்கூடம்,

நெ. 24. தாண்டவராயபிள்ளைவீதி,

சென்னை.